
"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"


# கலசம்
# KALASAM


ஐப்பசி – கார்த்திகை – மார்கழி – 2021




100 ஆவது இதழ்




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன்
26வது
வருடத்தில்

# RUBY'S
CATERING

020 8799 7180
mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு



திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா



**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton
THISTLE HOTELS
more than just accommodating
Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம்மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

மணி 29

# கலசம்
# KALASAM

ஒலி 100

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## உச்சரிப்பு; ஓர் எச்சரிக்கை!

தமிழறிஞர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுதிய, “அலையும் கலையும்” என்ற புத்தகம் ஒன்றைப் பள்ளிக்கூட நாள்களிற் படித்த நினைவு. அதில் நெடுநல்வாடை என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலேயர் ஒருவர் ஆங்கிலத்தில் எழுதி, நெடுநாள்வடை என்று உச்சரித்ததாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. ஒரு மொழியை இன்னொரு மொழியில் மொழி பெயர்க்காது ஒலிபெயர்ப்புச் செய்வதை ஆங்கிலத்தில் Transliteration என்று சொல்வார்கள். நெடுநல்வாடை நெடுநாள்வடையாகிய கதை நகைச் சுவையாக இருந்தாலும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய ஒரு விடயம்.

‘ழ’ கரம் தமிழின் சிறப்பெழுத்து. இதை உச்சரிக்கும்போது பிழையாக உச்சரித்தால் விபரீதம் ஏற்படும். உதாரணமாக, புயல் வந்து வீடுகளை **“அழித்தது”** என்பதைப் புயல் வந்து வீடுகளை **“அளித்தது”** என்று சொன்னால் என்ன ஆகும்? புயல் வீடுகளைத் தானமாகக் கொடுத்தது என்று பொருள் வந்துவிடும்; நேர் எதிரான பொருளாகிவிடும். அல்லது, கடவுள் வரம் “அளித்தார்” என்பதைக் கடவுள் வரம் “அழித்தார்” என்றால்? விழிப்பதற்கும் விளிப்பதற்கும் எவ்வளவு வேறுபாடு உண்டு? இதுபற்றி எமக்கு விழிப்புணர்வு வரவேண்டும். தமிழைப்போலவே வடமொழியிலும் உச்சரிப்புக்கு விதிமுறைகள் உண்டு.

இதை இங்கே எழுதுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. வடமொழி வேண்டாம் என்று வாதிடும் சில குருமார்கள் ஒருபுறம் இருக்கிறார்கள்; இருக்கட்டும். வடமொழிச் சுலோகங்களைச் சொல்லுங்கள். நூற்றெட்டு முறை சொன்னால் செல்வம் வரும், ஆயிரத்தெட்டு முறை சொன்னால் அதிட்டம் வரும் என்று சொல்லும் சில சுவாமிகளும் இருக்கிறார்கள். இவர்கள் வடமொழி கற்காத மக்களுக்குத் தமிழிலே வடமொழிச் சுலோகங்களை ஒலிபெயர்த்து எழுதிக் கொடுத்து ஓதவைக்கிறார்கள். இந்த நாட்டில் பிறந்த சில பிள்ளைகள் ஆங்கிலத்திலும் எழுதிப் படிக்கிறார்கள்; ஓதுகிறார்கள். இவையெல்லாம் வரவேற்கத்தக்க விடயங்களா? என்ற வினா மனத்தில் எழுகிறது. வடமொழி வேண்டாம் என்றோ, தமிழ்மொழி வேண்டுமென்றோ சொல்வதன்றி, எதுவாயினும் செய்வதைச் சரியாகச் செய்யவேண்டும் என்பதே எமது நோக்கம்.

வடமொழிச் சுலோகங்கள் என்றாலும் சரி, தமிழ்த் திருமுறைகள் என்றாலும் சரி, அவற்றை ஒழுங்காகத் தெரிந்தவர்களிடமிருந்து கற்று, ஒழுங்காக உச்சரித்து ஓதினால் மட்டுமே பலனுண்டு. அதுவே சரியான முறையுமாகும்.

**க. ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| சைவத் திருக்கோயில்களில் அர்ச்சனை மொழி....... | 03 |
| கலசத்துக்கு எனது வாழ்த்துகள்! | 06 |
| பாம்பன் சுவாமிகள் | 07 |
| கோயிற் கட்டடக் கலையின் கொடுமுடியாக விளங்கும்......தஞ்சை | 12 |
| The Power of Mantras | 17 |
| தில்லைத் தீட்சிதர்கள் வரலாறு | 21 |
| ஆறுமுக நாவலர் | 27 |
| சிந்தனையின் பரிமாணங்களும் பரிணாமமும் | 32 |
| “ஒப்புரவுக்கு ஒல்கா” மரம் | 34 |
| கற்பூரம் காட்டி ஆசீர் சொல்லக்கூடாதா? | 35 |
| கலசமே நீ வாழி! | 42 |
| சீர்காழி (பயணக் கட்டுரை) | 43 |
| சைவ முன்னேற்றச் சங்கத்தின் செயற்பாடுகள் | 46 |
| மகத்தான மார்கழி | 55 |
| பெரியபுராணம் சொல்லும் பண்பு | 57 |
| மகாகவி பாரதியாரின் அதீத பக்தி | 63 |
| சைவமும் தமிழும் | 66 |
| செய்ந்நன்றி மறவாமை | 68 |
| திருக்கேதீஸ்வரம் | 71 |
| திருஞானசம்பந்தர் | 73 |
| பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன்கோயில் | 77 |
| காலத்தால் அழியாத இசைக்கருவிகளும் எமது சமயமும் | 80 |
| திருமந்திரம் கூறும் மறுமைபற்றிய சிந்தனைகள் | 83 |
| தமிழர் வாழ்வில் இசையும் ஆலயமும் | 85 |
| அன்பே வடிவான அன்னை வராகி | 88 |
| தியானம் - உலக நன்மைக்காக | 90 |
| அறம் வளர்த்த தமிழ்த்தெய்வம் | 91 |
| கிருபானந்த வாரியார் | 94 |
| இசையரசு தண்டபாணிதேசிகர் | 96 |
| கண்ணனும் தாத்தாவும் | 97 |


**அட்டைப்படம் வடிவமைப்பு: குகன்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்**

# சைவத் திருக்கோயில்களில் நிகழும் பூசைகளும் (அர்ச்சனை) அவற்றின் மொழியும்

திரு இரா நமசிவாயம்,
திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை முன்னாட் தலைவர்

உலகத்திலுள்ள பொருள்கள் அறிவுடையனவென்றும், அறிவில்லாதன என்றும் இருதிறப்படும். இவ்விரண்டும் முறையே சித்தென்றும் சடமென்றும் வழங்கப்பெறும்.

சித்தென்பது உயிர். இவ்வுயிர் யாதேனும் ஒன்றைப் பற்றிநின்று செயற்படுமன்றித் தனித்து நின்று செயற்படுமாறு இல்லை. எதுபோலுமெனின் அக்கினி ஒரு பொருளைப் பற்றிநின்றுதான் செயற்படும். எனவே சித்துக்கு சடப்பொருளாகிய பிரபஞ்சம் இன்றியமையாது வேண்டப்படும். உயிர்களின் கன்மத்துக்கீடாகச் சடப்பொருள்கள் தோன்றி, நின்று, ஒடுங்குகின்றன.

இங்ஙனம் முத்தொழிற்படும் உலகம் சடமாதலால், சடமாகிய மட்குடம் முதலியன போலத் தானே முத்தொழிற்படாது.

உயிர் இச் சடப்பொருள்களைக் கூடினாலன்றிச் செயற்படாதாதலின், அவ்வுயிர் தானே இச்சடப் பொருள்களைத் தொழிற்படுத்த முடியாது. அவ்விரண்டும் இவ்வாறாகவே பாரிசேட அளவையால் இச் சடப்பொருள்களைக் காரியப்படுத்தி இவற்றையும், உயிர், பொருள்களையும் கூட்டுவிப்பான் ஒரு முதல்வன் உண்டென்பது துணியப்படும்.

மேலும் உயிர்கள் உய்தற்பொருட்டு, அஃதாவது முத்தியை நோக்கி முன்னேறுவதற்கு இம்முதல்வன் அருளியவை வேதம், ஆகமம் என இரண்டாம். அவற்றுள் வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காம். இவற்றுள் வேதம் பொது, ஆகமம் சிறப்பானவை.

இனி, ஆகமம் - காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், ஆக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆகிகனேயம், வீரம், இரௌவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டு. இவையேயன்றிச் சார்பான குமாரதந்திரம் போன்ற பல உபஆகமங்களும் உள்ளன.

சைவத்தினதும் அதன் தத்துவக் கொள்கையாகிய சைவசித்தாந்தத்தினதும் மூலநூலாக உள்ளவை சிவாகமங்கள். இவ்வாகமங்கள் அனைத்தும் தனித்தனி சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதமென நான்கு பாதங்களை உடையன. இவற்றுள் சரியை தந்திரக்கலை எனவும், கிரியை, யோகம் மந்திரக் கலைகள் எனவும் ஞானம் உபதேசக்கலை எனவும் கூறுவர். சரியை ஆலயப் பிரதிட்டை முதலியவற்றைக் கூறும். கிரியை ஆன்மார்த்த பரார்த்த பூசை முதலியவற்றைக் கூறும். யோகம் பிராணவாயுவை அடக்கி மனதைச் சுழுமுனை வழியாகப் பிரமந்திரத்தில் செலுத்தி, நிறுத்தி சோதி முதலிவற்றைத் தரிசித்தலைக் கூறும்.

ஞானபாதம் பதி, பசு, பாசம் என்னும் பொருளுண்மையினையும் அவற்றின் இலக்கணங்களையும் பசு பாசத்தினின்று நீங்கிப் பதியை அடைதற்குச் செய்யவேண்டிய சாதனங்களையும் அங்ஙனம் சாதித்தாற் பெறும் பேறாகிய முத்தி நிலையினையும் கூறும்.

இந்த ஞானபாதம் அனைத்தும் பொருளுண்மை, இலக்கணம், சாதனம், பயன் என்னும் இவைகளைப்பற்றிய பிற பக்கங்களை எடுத்துக் கூறி, அளவையியல் வாயிலாக மறுத்து, அவற்றின் உண்மையைப் பொதுவகையாகவும் சிறப்பு வகையாகவும் கூறும். ஆதலின் சிவாகமங்களின் ஞானபாதமே சித்தாந்தமாகும்.

வேதம், ஆகமம் அனைத்தும் வடமொழியிற்றான் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பெற்றவை. வேதங்களுக்கு எழுத்து இல்லை. கர்ணபரம்பரையாகவே இருந்து வந்தன. ஆகமங்கள் பூர்வகாலத்திலிருந்தே எழுத்தில் உள்ளன. கிரந்த எழுத்தில் உள்ளன.

“கேவேடராகிக் கெளிறது படுத்தும்
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து
உற்றவைம் முகங்களாற் பணித்தருளியும்”
கீர்த்தித் திருவகவல் - திருவாசகம்

மகேந்திரமலை தெற்கின்கண் இருந்தது. “மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்” - பெரிய ஏட்டின்கண் அமைந்த ஆகமங்கள் இருபத்தெட்டினையும் மகேந்திரமலையின்கண் இருந்து, பொருந்திய தன் ஐம்முகங்களால் உபதேசித்தருளியும் என வருதல் காண்க.

ஆகமங்கள் முன்னொருகாலத்தில் தமிழில் இருந்தன என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. இப்படிச் சொல்லி மயங்குவதிற் பயன் எதுவும் இல்லை. அது வெறும்பேச்சாகும்.

“ஆரியம் தமிழோடிசையானவன்” இது - திருநாவுக்கரசர் திருவாக்கு

“வேண்டத் தக்க தறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ” - திருவாசகம்

மோட்ச முன்னேற்றத்துக்குத் தந்திரம், மந்திரம், தோத்திரம் என்பவை மூன்றும் இன்றியமையாதவை. இவை சிவபெருமானின் சங்கற்பம்.

எனவே சிவபெருமான் முதல் இரண்டையும் ஆகமவாயிலாகவும் ஸ்ரீருத்ரம் போன்ற மந்திரங்களை வேதம் வாயிலாகவும் வடமொழியில் தோற்றுவித்தனன். தோத்திரங்களைத் திருமுறைகளாக அருளாளர்கள் வாயிலாகத் தோற்றுவித்துள்ளான். இக்கோட்பாட்டை ஒத்த நிலையில் உள்ளவர்கள் தலையீடு செய்வதும் மொழிபெயர்த்து திருக்கோயில்களில் நடைமுறைக்குக் கொண்டுவர எத்தனிப்பதும் சிவநிந்தைச் செயலாகும். சைவ மக்கள் இக்கொள்கை உள்ளவர்களைக் கடுமையாக எதிர்ப்பார்கள். இது ஒரு பேரியக்கமாக வெடிக்கும்.

மெய்கண்டாருக்கு முன் முழுமையான சைவசித்தாந்த சாத்திரம் தமிழில் இல்லை. சைவ சித்தாந்தத்தின் தமிழ் மூலநூல் சிவஞானபோதம்; வழிநூல் அருணந்தி சிவாசாரியார் அருளிய சித்தியார், உமாபதி சிவாசாரியார் அருளிய சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய துணை நூல்கள். இந்த நூலாசிரியர்கள் அருளாளர்கள்; முற்றுணர்ந்தவர்கள்.

திருக்கைலாசத்தில் கல்லால மர நிழலிலே தட்சணாமூர்த்தியாக எழுந்தருளியிருந்த சிவபெருமான்பால் எல்லா ஆகமப் பொருள்களையும் மலைப்பற விளக்கும் சிவஞானபோதத்தை உபதேசம் பெற்ற திருநந்தி மரபிலே வந்த பரஞ்சோதி மகாமுனிவர் மெய்யுணர்வில் முற்றுப் பேறுடைய திருவெண்ணைநல்லூர் சுவேதவனப் பெருமானைக் கண்டு, அவருக்குத் தீட்சை புரிந்து, தாம் தம் குருவாகிய சத்திய ஞான தரிசினிகள்பாற் கேட்டவாறே சிவஞானபோதத்தை விளங்க உபதேசித்து, அதனைத் தமிழ் பேசும் சைவமக்கள் உய்யும்படி தமிழில் அருளிச்செய்தார். எனவே தமிழ் சிவஞானபோதத்தின் பூர்வநூல் வடமொழியிலுள்ள இரௌரவ ஆகமமாகும். இதுபோலத்தான் கம்பராமாயணத்துக்கும் வால்மீகி இராமாயணத்துக்கும் உள்ள ஒற்றுமை. இவை இரண்டும் வெறும் மொழிபெயர்ப்புக்கள் அல்ல, வழி நூல்களுமல்ல, சார்பு நூல்களுமல்ல, தனி நூல்களே!

வேத ஆகமங்களின் மொழிபெயர்ப்பை வைத்துத் திருக்கோயில்களிற் கிரியைகளை நடத்துவது தீம்பழத்தின் சுவையை உண்டு அநுபவிக்காது வெறும் தோலை உட்கொள்வதற்கச் சமமாக இருக்கும்.

1925ஆம் ஆண்டளவில் மறைமலை அடிகளும், கா சுப்பிரமணியபிள்ளை அவர்களும் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினர். சைவப்பெரியார்கள் சு சிவபாதசுந்தரனார், ஜே ஐம்புலிங்கபிள்ளை, சீ கே சுப்பிரமணிய முதலியார் (பெரியபுராண ஆய்வுரை ஆசிரியர்), அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் ஆகியோர் தனித்தமிழ்க் கொள்கையைக் கண்டித்தனர். சு சிவபாதசுந்தரனார் அவர்கள் பல ஆதாரங்களைக் காட்டி, தனித்தமிழ்க் கொள்கையை மறுத்தார். 1946ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் சைவ மாநாடு ஒன்று நடத்தப்படுவதாக இருந்தது. இம்மாநாட்டுக்குத் தலைவராக மறைமலை அடிகளின் சீடரான இளவழகனார் என்பவரை அழைப்பதற்குச் சபையினர் தீர்மானம் செய்து அவரும் அழைப்பை ஏற்றுக்கொண்டபின் போக்குவரத்துக்குரிய பணமும் அனுப்பப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட சு சிவபாதசுந்தரனார் கூறியதாவது,

“இந்தியாவிலிருந்து அம்மை நோய் முதலியன இலங்கையிற் பரவுவதைத் தடுப்பதற்குச் சட்டங்கள் இருக்கின்றன. தனித்தமிழ்க் கொள்கை இலங்கையிற் புகுவதைத் தடுப்பதற்கு ஒரு சட்டமும் இல்லை”.

எனக் கூறிக் கவலைப்பட்டார். இளவழகனாரை அழைக்கவேண்டாம் என்று சபைக்குக்கூறினார். பிரயாணத்துக்குரிய பணத்தை அனுப்பிவிட்டோம் என்று சபையினர் கூறினர். பணம் போனாலும் பரவாயில்லை, அவரை அழைக்கவேண்டாம் என்று சபையினரைக் கேட்டுக்கொண்டார். அவரின் சொல்லைக் கேட்டுச் சபையினரும் இளவழகனார் அழைப்பை நிறுத்திவிட்டனர்.

இன்று மேல்நாடுகளில் குடியேறிய ஈழத் தமிழர்களின் பிள்ளைகள் தமிழ் பேசத் தெரியாதவர்களாக உள்ளனர். இப்படியான ஒரு புதுத் தலைமுறை உருவாகிறது. ஆனால் சைவ சமயக் கோட்பாட்டைக் கைவிடவில்லை. அவர்கள் அங்குள்ள திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் நாளடைவில் திருக்கோயிற் பூசைகள் ஆங்கிலத்தில் செய்யப்படவேண்டும் என்று கேட்கக்கூடும்; ஆச்சிரியப்படுவதற்கில்லை.

**நன்றி: Life and Times of R Namasivayam and His Contribution to the Restoration of Tirukketisvaram (2013)**

# கலசத்துக்கு எனது வாழ்த்துகள்

## திரு மு நற்குணதயாளன்

**ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றுமூன்றாம் ஆண்டு ஜனவரியில் முதலாவது கலசம் வெளியானது. அதன் இணையாசிரியர்கள் இருவர். ஒருவர் திரு நற்குணதயாளன், மற்றையவர் திரு ஆனந்ததியாகர். இந்த இருவரில் முன்னவரின் வாழ்த்துச் செய்தியை இந்த நூறாவது இதழில் பிரசுரிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.**

கலசம் எனது அரவணைப்பில் வளர்ந்த குழந்தை. சைவ முன்னேற்றச் சங்கத்துள் நுழைந்த ஆண்டே கலசம் பற்றிய எண்ணக்கருவை முன் வைத்தேன். பல வாதப் - பிரதிவாதங்களுடன் ஏற்றுக் கொண்டார்கள். பெயர் வைக்கும் படலம் ஆரம்பமானது. நண்பர் ஆனந்ததியாகர் ***"கலசம்"*** என்ற பெயரை முன் மொழிந்தார். ஏற்றுக்கொள்ளப்பட்டு, கலசம் தவழ்வதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

நானும் ஆனந்தும் இணையாசிரியர்களானோம். நாங்கள் இருவரும் கொள்கையளவில் இரு துருவங்கள். இணையமுடியாத இரு மாடுகளை ஒரு இரட்டை மாட்டு வண்டியில் பூட்டி வண்டியை இழுக்கச் சொன்னால் வண்டிதான் உடையும் என்ற நடைமுறையை நாம் இருவரும் உணர்ந்ததால் வண்டியை ஒற்றை மாட்டு வண்டியாக்குவதென்ற எங்கள் இருவரினதும் முடிவால் கலசத்தின் இரண்டாவது இதழிலிருந்து என் பொறுப்பில் கலசம் உருவாகத் தொடங்கியது.

இறைவனை மனதார ஏற்றுக் கொண்டாலும் இறைவனின் பெயரால் நடைபெறும் தில்லுமுல்லுகளை என்னால் பொறுக்க முடிவதில்லை. இதனால் என்னுடைய ஆசிரியத் தலையங்கங்கள் பொறிபறக்கும் தணல்களாகவே இருந்தன. பேனாவும் மனதும் ஒன்றாகவே பயணிக்க வேண்டுமென்ற எனது எண்ணத்தினால் நான் யாருக்கும் எதையும் விட்டுக் கொடுக்கும் மனோ நிலையில் இருக்கவில்லை. அவ்வப்போது முரண்பாடுகளும் மோதல்களும் எதையும் சிந்தனை வயப்படாது ஏற்றுக் கொண்டவர்களோடு உருவாகின. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற என் நிலைப்பாட்டில் மாற்றமில்லாமல் கலசம் என்ற வண்டி நகர்ந்து கொண்டிருந்தது. காலப்போக்கில் என்னை நான் மாற்ற முடியாத நிலையில் கலசத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டேன்.

இப்பொழுது கலசம் *100* ஆவது இதழுக்கு வந்துவிட்டது. என்னோடு பணியாற்றிய நண்பர் அசோகனைப்பற்றிக் குறிப்பிடுவது மிக அவசியம். அன்று அசோகன் இல்லையென்றால் கலசம் நகர்ந்தே இருக்க முடியாது. அவ்வளவுக்கு ஆத்மார்த்தமான ஒரு சேவையாளன்.


இங்கு இராமநாதன் அவர்களைப்பற்றியும் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும் எனக்கும் சங்கத்திற்கும் இடையில் நின்று நெரிபட்ட ஒரு நல்ல உள்ளம். என்னை இழக்கவும் விருப்பமில்லை; அதே நேரம் சங்கத்தையும் விட்டுக் கொடுக்க விருப்பமில்லாதவராக இருந்தார். நான் சொல்பவைகள் சரியென்று அவரின் ஆத்மாவிற்குப் புரியும். எதையும் செய்ய முடியாத நிலையில்தான் அவர் இருந்தார். மூடப்பட்ட தேருக்குள் எத்தனை சிற்பங்கள்? இதுதான் சங்கம். அவரின் நெருக்கடியைக் குறைக்கும் முகமாக நான் வெளியேறினேன்.

கலசம் பின்பு அற்புதானந்தனிடம் சென்றது; பின்பு ஆனந்ததியாகரிடம் சென்றது. இப்போது நண்பர் ஜெகதீஸ்வரனிடம் சென்று வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.
என் பிள்ளை இப்போது இளைஞனாகித் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறான். இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மகிழ என் ஆசிகள் என்றும் உண்டு.

# பாம்பன் சுவாமிகள்

திருமதி அமிர்தா தியாகலிங்கம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)




**காசி யாத்திரை:**

காசி சென்று காசிவிஸ்வநாதரையும், குமரகுருபரரின் திருமடத்தையும் தரிசிக்க எண்ணிய சுவாமிகள், சுபகிருது ஆண்டு ஆடியில் புறப்பட்டார். பெஜவாடா, கோதாவரி, விசாகபட்டினம், ஜகந்நாதம், கல்கத்தா, கயா என்ற இடங்கள் சென்று, அங்குள்ள ஆலயங்களில் உள்ள தெய்வங்களை முருகனாக எண்ணி வழிபட்டார். பின் காசி சென்ற சுவாமிகளை குமரகுருபரசுவாமிகள் திருமடத்தில் உள்ளவர்கள், பயபக்தியோடு வரவேற்று அவருடைய தேவைகளை கவனித்தார்கள். பூரநட்சத்திரம் கூடிய ஆடி 22ம் நாள் குமரகுருசுவாமிகளை வணங்கி, முதல் தளத்தில் உள்ள தன் அறைக்குச் சென்றார்.

மடத்தில் காவியுடையுடன் இருந்த பெரியவரொருவர், இரு காவியுடைகளுடன் வந்து, ஒன்றை வேட்டி போல் சுவாமிகளுக்கு உடுத்தி, மற்றயதைச் சால்வையாகவும் போர்த்தி வணங்கினார். சுவாமிகள் அவரைப் பார்த்து, “இது ஏன்?”என வினவ, அவரோ “குமரகுருபரருடைய பெயரைக்கொண்ட தாங்களும், அவருடைய இத்திருமடத்தில் காவி அணிதலே சரியானது. இதை செய்ய வைத்தது இறைவன் திருவருள்” என்றார். சுவாமிகளும் இது குமரகுருபரருடைய செயல்தான் என்று எண்ணி மகிழ்ந்தார். இவருடைய யாத்திரையில் கடும் மழையினால் துன்பங்கள், இடர்கள் ஏற்பட்டபோது, முருகன் அருள் கூட நின்றதைச் சுவாமிகள் கண்டு துதித்தார்; பின் சென்னை திரும்பினார்.

**சீவ யாதனா வியாசம் பாடல்:**

முத்திக்கு ஏகதேவ வழிபாடும், புலால் உண்ணாது இருப்பதும் தான் உண்மையானதும், முழுமையானதும் என்று கூறி, சீவ யாதனா வியாசம் என்ற நூலை எழுதினார்கள். திருவனந்தபுரம் அன்பர் திரு. ந. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் கேட்டதால் 235 பாடல்களாகவும் சீவயாதனவியாசம் பாடிக் கொடுத்தார்.

பாம்பனில் இருந்துவந்த சண்முகம்பிள்ளைக்குத் திருவாறெழுத்தை உபதேசித்துச் சீடராக்கினார். திருவனந்தபுரத்தில் கந்தசஷ்டி விழாவில் கலந்து கொண்டார்.

**சுத்தாத்வைத நிர்ணயம்:**

ஏகான்மவாதிகள் கூறும் வேதத்தில் இல்லாத ஒன்றான சுத்தாத்வைதம் என்றதைச் சைவர்களும் எதிர்க்கவில்லை. உபநிடதங்கள் 108ஐயும் முறையே கற்றுணர்ந்த சுவாமிகள் மண்டலபஹ மனோபநிடதத்திலிருந்து சுத்தாத்வைதம் என்ன என்பதைக் காட்டி, சுத்தாத்வைத நிர்ணயம் என்ற நூலைப் புனைந்தார். இதைப்பார்த்துச் சைவர்களும் மற்றவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

**முருகனால் சுவாமிகளின் பிணி நீங்கல்:**

திருப்பாலைவனம் சிவன்கோயிலுக்குள் சென்று முருகனை,

வேலை யுடுத்த விபுலைவாழ் நர்க்கு விவேகநெறி
நூலை வகுத்தத னுட்பமுங் காட்டியந் நோன்மைவழிக்
காலை யளித்தருண் முக்கண்ண னாளுங் கனிவொடுவாழ்
பாலை வனத்திற் குமரனை நன்கு பணிகுதுமே

என்று வணங்கிப் பாடினார்.

சென்னையில் இருக்கையில், இரு கட்டிகள் ஒன்று தொடையிலும் மற்றையது அரையிலும் வர, அதனால் துன்புற்றார். முருகன் மேல்,

சடைக்கற்றை தாங்குவ்விச் சங்கர னார்தந்த தங்கவயிற்
படைக்கையெந் தாயறி யாமையி னான்செய்த பண்டைவினை
தொடைக்கட்டி யோடரைக் கட்டியு மாநனி தோன்றியென்னை
நடக்கவொட் டாதுசெய் கின்றது சென்னை நகர்தனிலே

என்று பாடியதால், முருகன் சிறு குழந்தையாக வந்து மருந்து பூசி விட்டார். இச்செய்கை சுவாமிகள் வீட்டில் உள்ள மாது ஜகதாம்பாளுக்கு கனவில் தெரியவைத்தார். கட்டிகள் உடைந்தும், பின்வந்த காது நோய், வைசூரி என்பனவும் முருகன் கருணையால் நீங்கின.

சஸ்திரபந்தம், மயூரபந்தம், கமலபந்தம், பிறிதுபடுதுவிதபங்கி, பிரிதுபடுதிரிபங்கி, பகுபடுபஞ்சகம், சஷ்டிவகுப்பு, தங்கஆனந்தக்களிப்பு, அநவரதபாராயணஷ்டகம், மிறிதுபடுபாட்டுப்பிரபந்தம் என்று பிரபந்தங்கள் பத்தைப் பாடினார்.

**உருத்திராக்கக் கண்டிகையணிதல்:**

தங்க ஆனந்தக்களிப்பை பொன்னுசாமிப்பிள்ளைக்கு சிதம்பரத்தில் பாடிக்காட்ட, இறைவன் பிள்ளையிடம் இருந்த புதிய உருத்திராக்கக் கண்டிகையை சுவாமிகளுக்கு அணிவிக்குமாறு ஆணையிட, பிள்ளையும் அவ்வாறே செய்தார். முருகன் அருளால் மாலைமாற்று, ஏகபாதமாலைமாற்று, கோமுந்திரி, காதைகரப்பு, நான்கரைச்சக்கரம் போன்ற சித்திரக்கவிகளை இலகுவாகப் பாடிக்கொடுத்தார்.

**விதேக முக்தியில் வேட்கை:**

சென்னையில் இருந்து திருவொற்றியூர், பழவேற்காடு, பொன்னேரி, ஆண்டார்குப்பம் சென்று

பின் திருவொற்றியூர் திரும்பி மகிழடிசேவையில் பங்கு கொண்டார். இக்காலத்தில் பல சத்திரங்களில் தங்கினார்; பல அடியார்கள் அளித்த உணவையும் அன்புடன் பெற்றார். சென்னை பக்தர்களும், சீடர்களும் வந்து சுவாமிகளை வணங்கிச் சென்னைக்கு வருமாறு கேட்டனர். சுவாமிகள் மகிழடி சேவை முடிந்த பின் வருவேன் எனச் சொன்னார். மகிழடி சேவை நிறைவுற்ற பின் சென்னை சென்றார். சிவ நிட்டையில் இருந்தார்.

**புதல்வர்கள் இறையடி சேர்தல்:**

மூத்த புதல்வனின் நிலையை நிட்டையில் ஏற்பட்ட யோகத்தில் பார்த்தார். உள்ளம் சிறிது கலங்கியது. பின் தெளிவு பெற்று, வந்த காரியம் முடிந்ததால் சென்றுவிட்டான் என மனதைத் தேற்றினார். மறுநாள் தந்தியுடன் வந்த பாலசுப்பிரமணியம், “சுவாமி, உங்களுக்குத் தந்தி வந்துள்ளது, பார்க்க வாருங்கள்” என அழைத்தார். சுவாமிகள், “மகன் இவ்வுலகைவிட்டு நீங்கிய செய்தியே, படித்துப்பார்” என்றார். தந்திச் செய்தியும் அதுவே. சில காலத்தின் பின் இளைய மகனின் விண்ணுலகம் சென்றதையும் தெரிந்து கொண்டு எல்லாம் முருகன் செயல் என நினைத்து உறுதியாக இருந்தார்.

**நிட்டையில் இருத்தலும், பதிகங்கள், பாடல்கள், நூல்கள் இயற்றுதலும்:**

ஏழு மாதங்களாகத் தொடர் நிட்டையில் இருந்து கொண்டு, ஆசிரிய விருத்தங்கள் பத்து வகையால் புனையப்பட்ட நூறு செய்யுள்கள் கொண்ட குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி ஆன துதி நூலை இயற்றினார். கல்லையும் கரையுமளவு உள்ளத்தை உருக்கும் இந்நூல் தேனினும் இனிய அமிர்தமாகத் திகழ்ந்தது.

முருகனை ஒருபோதும் மறவாது துதிக்க, வடமொழி இலாது தனித்தமிழ் மட்டும் கொண்டு, சேந்தன் செந்தமிழ் என்ற நூலை அருளினார். சுவாமிகள் ஞானவாக்கியம், கந்தகோட்ட மும்மணிக்கோவை, வடதிருமுல்லைவாயில், குகபரர்வண்ணம், நவவீரர் நவரத்தினக் கலிவிருத்தம், வண்ணக்களஞ்சியம் உள்ளடக்கிய ஒரு சிறுநூல் திரட்டை 1905, 1906 இல் வெளியிட்டார். இதில் வடதிருமுல்லைவாயில் குகபரர்வண்ணம் “தைய, தனன, தத்த, தந்தத்த, தானன, தன்னந்த, தந்ததான, தான, தன்னா, தனதன, தானனா, தன்னான” ஆகிய சந்தங்களைக் கொண்டது.

சென்னையில் இருந்து சிதம்பரம் சென்று ஆலயதரிசனம் செய்த சுவாமிகள், நிட்டையில் இருக்க பின்னத்தூர் சென்றார். இங்குள்ள சிவன்கோயிலில்தான் மாணிக்கவாசகரும் ஊமைப்பெண்ணைப் பேச வைத்தார். இங்குள்ள சில அன்பர்கள் சுவாமிகளிடம் வைணவர்கள் தம்மை நிந்திப்பதாகச் சொல்ல, சைவசமயப் பெருமைகளை வரிசையாக எடுத்துக்கூறி வைணவர்களை வெற்றி கொண்டார். எட்டதிகாரம் கொண்ட நாலாயிரப்பிரபந்த விசாரம் என்ற நூலையும் எழுதினார். திரும்பவும் வைணவர்கள் சிலர், சிவனையும், ஆசார்யர்களையும் இழிவு படுத்திச் சிறு பிரசுரங்களை வெளிக்கொணர்ந்தனர். சுவாமிகள் 65 அத்தியாயங்கள் கொண்ட சைவ சமய சரபம் என்ற நூலை 1908 இல் வெளியிட்டு உண்மையை நிலை நாட்டினர். பின் வழக்காடுமன்றம் சென்று, உண்மைக்குப் புறம்பான செய்திகளை கொண்டுவந்த வைணவர்களுக்கு, முருகன் கருணையால் பெரிய அபராதங்கள் விதிக்கச்செய்து வெற்றியடைந்தார்.

காட்டுமன்னாரில் தோல்வியுற்ற வைணவர்கள் ஒரு மந்திரவாதி மூலம் சுவாமிகளைக் கொல்ல ஒரு துர்த்தேவதையை அனுப்பினார்கள். சுவாமிகளுடன் இருந்த அடியவர் பயந்து மயக்கமுற்றார்.

*சுவாமிகளோ எழுந்து நின்று அந்த பெருவுருவை தன் இடக்காலால் உதைத்துத் தள்ளினார். அந்தத் துர்த்தேவதை வந்த வேகத்தில் திரும்பிச்சென்று மந்திரவாதியைக் கொன்றுவிட்டது.*

*பின்னத்தூரிலும் சுவாமிகளுக்கு துன்பம் கொடுத்தும், அவை சுவாமிகளை அடையவில்லை. நாராயணன் என்றவன் ஒரு மறைவிடத்திற்குத் தந்திரமாகச் சுவாமிகளை கூட்டிச்சென்று கொல்லப் பார்த்தான். சுவாமிகள் கையளவு மண்ணை எடுத்து கேடு நினைப்பவர் வாயில் மணலும் சேரட்டும் என்று வீசினார். நாராயணனும் கீழே விழுந்து இறந்தான். சுவாமிகள் மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளையும் குமாரசுவாமியத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

***சென்னை சேர்தலும் சீடர்கள் சேர்தலும்:***

*சிதம்பரத்தில் சடாக்கர மந்திரத்தைச் சண்முகம்பிள்ளைக்கு உபதேசம் செய்த பின், 02-01-1914 அன்று சென்னை வந்தார். இங்கு மூவரின் பணிவான கோரிக்கைக்குத் திருவாறெழுத்தை உபதேசித்துச் சீடர்களாக்கினார். இதில் சின்னசாமிப்பிள்ளைக்கு சோதிடமும் கைவரப்பெற ஆசி கொடுத்தார். இச்சின்னசாமிப்பிள்ளை பின் முதன்மைச் சீடனாக சுவாமிகளுடன் அல்லும் பகலுமிருந்தார்.*

*மிகக் கற்றறிந்த பண்டிதர்களாலும் உரை எழுத முடியாது என எண்ணிய சுவாமிகள் "தானனக்கும் ஆனனக்கும் பூனனக்கும் நடுச்சார்" எனத் தொடங்கும் திருப்பாவிற்கு தானே உரை எழுதினார். இது அருமையான 14 விசேட அலங்காரங்களைக் கொண்ட பெருமிறைக் கவியுரையாகும்.*

***தென் தலங்கள் சென்று வரல்:***

*திருவாலவாய், சிவகிரி, சங்கரநாராயணர் கோயில், கழுகுமலை சென்று, சென்னை திரும்பித் திருவல்லிக்கேணியில் இருந்தார். முருகன் அருளால் தொடையில் வந்த பெரும் கட்டியும், இடது காலில் வந்த சிறு கட்டியும் குணமாயின.*

*சுவாமிகள் சைவர்களுக்கு உதவியாகச் சித்தாந்த செந்நெறியை இயம்பிய பரிபூரணானந்தபோதம் என்ற நூலுக்கு வேத விளக்கங்களுடன் கூடிய சிவசூரியப்பிரகாசம் என்ற உரைநடையை எழுதிக் கொடுத்தார்.*

*பல சீடர்கள் சேர்ந்து உபதேசம் பெற்ற நிலையில், சென்னை இராயப்பேட்டையில் ஜனவரி31,1915 அன்று பாலசுப்பிரமணிய பக்தஜனசபை ஆரம்பிக்கப்பட்டு சுவாமிகளும் தன்கால் நிலைபெறுத்தினார். இது கருங்கல்லில் வரையப்பட்டு சுவரில் பதிக்கப்பட்டது.*

***சதானந்த சாகரம்:***

*1916 இல் சுவாமிகள் தனது சிறந்த நூல்களில் ஒன்றான தகராலயரகசியம் நூலிற்கு சதானந்தசாகரம் என்ற உரையை எழுதினார். சொற்சுவை, பொருட்சுவை, உவமைச்சுவை கொண்ட, இதை படித்தால் பயனும், மகிழ்வும் அடையலாம்.*
*பாடசாலைகளின் கண்காணிப்பாளராக விளங்கிய திரு.ச.சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் சுவாமிகளை அடைந்து, தனக்கும் திருவாறெழுத்தை உபதேசிக்கும்படி வேண்ட, சுவாமிகளும் உபதேசித்தார். பின்நாள்களில் அவர் சுவாமிகளின் நூல்களுக்கு பொழிப்புரை, முன்னுரை, குறிப்புரை எழுதிக்கொடுத்தார்.*

"திராவிடன்" பத்திரிகையில் 30-07-1917 இல் சிவலிங்கத்தை, தீர்த்தங்களை, முருகனைப் பற்றிக் கீழத்தரமாக எழுதி, தெய்வத்தையும், சிவாசாரியார்களையும் நிந்தனை செய்து பதிவுகள் வந்தன. அதன் ஆசிரியர் சேர்.பி.தியாகராஜ செட்டியாருக்கு இப்படியான செய்திகள் இனிமேல் பிரசுரமாகக்கூடாது எனச் சுவாமிகள் கடிதமூலம் தெரிவிக்க, பின் பிரசுரங்கள் சுவாமிகள் காலத்தில் வரவில்லை.

**குமாரஸ்துவம்:**

தனக்கு ஏற்பட்ட வெப்புநோய் நீங்க சுவாமிகள் காலயுக்தி ஆண்டு ஆடி மாதம் 7ம்திகதி (1918) 44 வரிகள் கொண்ட குமாரஸ்துவம், முருகனுக்கு அர்ச்சனை செய்வது போல் இயற்றி, நோய் நீங்கப் பெற்றார். சுவாமிகளின் பாடல்கள் படிக்கமுன் குமாரஸ்துவம் பாடுவது மரபு.

திருத்தணியில் குழந்தைவேல் முதலியாருக்கும், தவசீலர் பாலசுந்தர சுவாமிகளுக்கும் சடாக்கர மந்திரத்தை உபதேசித்ததோடு. அத்தியாச்சிரமிகள் தரிக்கும் காவியுடையும் கொடுத்தார். பாலசுந்தர சுவாமிகள் பின்நாளில் சுவாமிகளின் சமாதிக்கோயிலின் பாதுகாவலராகவும், சுவாமிகளின் மஹா தேஜோமண்டலத் தலைவராகவும் இருந்தார்.

**அருணகிரிநாதருக்கு குருபூசை விழா:**

காலயுக்தி (1918) ஆண்டில், முருகனின் உற்ற அடியார் அருணகிரியார், இறைவனை அடைந்த நாளின் பின், ஒரு நாளேயாயினும் குருபூசை நடைபெறவில்லை என உணர்ந்த சுவாமிகள், உத்தராயணத்து ஆறாவது பௌர்ணமியன்று ஒவ்வொரு வருடமும் குருபூசை நடைபெற ஆவன செய்தார். அருணகிரிநாதர் அவதரித்த நாளும், முக்திபெற்ற நாளும் ஒன்றே எனத் தவவலிமையால் அறிந்து கூறினார்.

வடமொழியை நன்கு படித்து ஆராய்ச்சிசெய்து சித்தார்த்தி (1918) வருடம் சண்முக சகச்சிர நாமார்ச்சனையை அருளினார். 1101 பாடல் கொண்ட நூல் திருப்பாவில், 43 பாடல்களுக்கு (திட்பம்) வேதத்தமிழில் உரையும் மற்றவைக்குக் குறிப்பும் 1921 இல் எழுதினார். படித்தோரை மெய்சிலிர்க்கவைக்கும் இந்தத் திட்பம் உயரிய சிறப்பம்சம் கொண்டதென்பது கற்றோர் கணிப்பு. 1922 இல் சிவஞானதீபம் என்ற வேத, சித்தாந்த சிறப்பையும், முருகவழிபாட்டையும் விளக்கும் உரை நூலை எழுதினார்.

**திருவல்லிக்கேணி கடற்கரையில் சம்பவங்கள்:**

பல ஆண்டுகள் குமாரபுரம் புதுப்பாக்கத்தில் வாழ்ந்த சுவாமிகள் மாலை வேளையில் தினமும் திருவல்லிக்கேணி கடற்கரைக்கு செல்லும் பழக்கமுடையவர். இரவு வீடுதிரும்பிப் பால், பழம் புசிப்பார். சில நாள்களில் இரவுமுழுவதும் கடற்கரையில் இருந்து கொள்வார். சித்திரை பௌர்ணமியில் முருகனுக்கு திருவமுதுகள் படைத்து பூசை செய்து வழிபாட்டின்பின் பக்தர்களுக்கு கொடுத்து மகிழ்வார்.

**(அடுத் இதழில் நிறையும்)**

# கோயிற் கட்டடக்கலையின் கொடுமுடியாக விளங்கும் உலகப் புகழ் பெற்ற

# தஞ்சைப்பெருங்கோயில்

திரு மு க மாசிலாமணி B.A




“அருள்நிறை தேசம்”, “அற்புதங்கள் நிறைந்த நாடு”, “புண்ணிய பூமி” எனப் பலவாறு போற்றப்படும் பாரதநாடு ஆன்மிகத்தின் உச்சிக்குச் சென்று வெளிக்கொணர்ந்த கொள்கைகள், கோட்பாடுகள், சமய தத்துவங்கள், ஆன்மிக சிந்தனைகள், வாழ்வியல் விழுமியங்கள் அவை மூலமாக உருவாக்கி வளர்ந்த நுண்கலைகள் (Finearts) ஆகியவற்றினூடாக உலகின் ஒட்டு மொத்தப் பண்பாடு வளர்ச்சிக்கும் மிகக் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளமை உலக வரலாற்றாவணங்களை அணி செய்யும் முக்கிய பக்கங்களாகும். இந்தியக் கட்டடக்கலை பற்றி ஆய்வு மேற்கொண்ட மேற்கு நாட்டவரான “ஜேம்ஸ் பெர்கூசன்” (James Fergoosan) என்ற கலா விற்பன்னர் கூறுவது போல மிகத்தொன்மைக் காலத்திலிருந்தே சமயமும் அதுசார்ந்த தெய்வ வழிபாடும் இந்தியப் பண்பாட்டுடன் இரண்டற இணைந்த, பிரிக்கவியலாத மிக முக்கியத்துவமுடைய முதன்மைக் கூறாக ஒன்றியிருந்தமையும் அத்தகையதொரு அரிய பங்களிப்பினை உலகிற்கு வழங்க இந்தியாவிற்கு வாய்ப்பாக அமைந்ததென்றுங் கொள்ளலாம். பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து சொரூப நிலையில் விளங்கும் பரம்பொருளை விக்கிரக வடிவில் வார்த்து உலகிலுள்ள பொருள்களில் எவையெவை அழகானவையோ, எவையெவை சிறந்தவையோ அவை அனைத்தையும் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கோயிலினுள் பிரதிட்டை செய்து வழிபட வேண்டுமென்ற பேருந்தலே உலகம் வியந்து போற்றும் ஒப்பற்ற கட்டட, சிற்ப, ஓவியக் கலைக்கூடங்கள் பாரத நாடு முழுவதும் சிறப்பாகத் தமிழகம் முழுவதும் தோன்றக் காரணமாகின. கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே முருகன், திருமால், சிவன் ஆகிய தெய்வங்களுக்கான கோயில்கள் பற்றியும் அக்கோயில்களில் நிகழ்த்தப்பட்ட பூசை வழிபாடுகள் பற்றியும் தொல்காப்பியம், புறநானூறு, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் நூல்களில் விவரமான பல செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் கி.பி 600 - 630 வரை தமிழ்நாட்டை ஆண்ட பல்லவப் பெருமன்னனான மகேந்திர வர்மன் மலைப் பாறையினைக் குடைந்து, தான் நிர்மாணித்த கருங்கற் கோயிலில் (Rock cut temple) தான்

பொறிப்பித்த கல்வெட்டொன்றில், Inscription of Historical value found on rock or stone அழியத்தக்க மண், மரம், சுண்ணாம்பு, செங்கல் ஆகியன இல்லாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ள கோயில் என்று குறிப்பிட்டுள்ளமையால் அம் மன்னனுக்கு முன்பே தமிழகத்தில் கோயில்கள் இருந்தமையும் அவை அழியத்தக்க பொருள்களால் நிர்மாணிக்கப்பட்டவை என்பதையும் அறிய முடிகின்றது. அத்தகைய கோயில்கள் அழிந்திருக்கலாம்; அல்லது பிற்காலத்தில் புதுப்பிக்கப் பட்டிருக்கலாம்.

எனவே மலைப்பாறைகளைக் குடைந்து நீடு நின்று நிலைக்கும் கருங்கற் கோயில்களை நிர்மாணிக்கும் கட்டடக்கலை மரபினைத் தமிழகத்தில் ஆரம்பித்து முன்னோடியாக முக்கியத்துவம் பெறுபவன் பல்லவப் பெருமன்னனான மகேந்திரவர்மனே. கி.பி. 7ம் நூற்றாண்டிலிருந்து “கோயில் நகரம்” எனச் சிறப்பித்துக் கூறப்படும் காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு பேரரசு நிறுவி ஆண்ட பல்லவப் பெருமன்னனான இவனைத் தொடர்ந்து மதுரையைத் தலைநகராகக் கொண்டு பேரரசு நிறுவி ஆண்ட பாண்டிய மன்னர்களும் கருங்கற்களால் கோயில்களை நிர்மாணித்தனர். காஞ்சி கைலாசநாதர் கோயில், மகாபலிபுரக் கோயில்கள், திருப்பரங்குன்றக் கோயில்கள் என மலைப்பாறைகளைக் குடைந்து கருங்கற் கோயில்கள் பல நிர்மானிக்கப்பட்டனவாயினும் கோயில்கள் நிர்மாணிப்பதில் உலகமே வியக்கும் சாதனைகள் நிலை நாட்டியவர்கள் கி.பி. 800 - 1200 வரை தமிழகத்தை ஆண்ட சோழப் பெருமன்னர்களே. அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தமிழகம் முழுவதுமே கருங்கற் கோயில்களால் நிரப்பப்பட்டன என்று கூறின் மிகையாகாது. அவர்களிலும் கி.பி. 958-1014 வரை தமிழ்நாட்டின் “தானியக் களஞ்சியம்” எனச் சிறப்புப் பெற்ற தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த 1 ஆம் இராசராசன் என்ற சோழப் பெருவேந்தன் ஆட்சிக்காலம் இந்திய வரலாற்றில் மிக முக்கியத்துவம் மிகுந்த காலப்பகுதிகளில் ஒன்றாகும். சோழப் பேரரசின் விரிவாக்கம் அதற்கான போர் வெற்றிகள், அரச நிர்வாகக் கட்டமைப்பு, பொருளாதாரம், சமயம், கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகிய நுண்கலைகள் அனைத்துத் துறைகளிலும் பிரமிக்கத் தக்க வரலாற்று முக்கியத்துவமிக்க பல சாதனைகள் நிலைநாட்டப்பட்ட காலமாக அப் பேரரசனது ஆட்சிக்காலம் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. தமிழகம், கேரளம், ஆந்திரநாடு, கர்நாடகம், ஓரிசா, மகாராட்டிரம், இலங்கை, அரபிக் கடலைச் சூழ்ந்த இலட்சத்தீவுகள், மாலைதீவு ஆகிய அனைத்துப் பிரதேசங்களும் நாடுகளும் வலிமை மிக்க பெரும் தரை, கடற்படைகளின் மூலம் சோழராட்சிக்கு உட்படுத்தப்பட்டுச் சோழப் பேரரசு பரந்துவிரிவடைந்தது. இவன் காலம் வரை தமிழ்நாட்டு மன்னர் எவரும் பெற்றிராத பெரு வெற்றிகளைப் பெற்ற இம்மன்னன் தன் ஆளுகைக்கு உட்பட சோழப் பெரும் பேரரசை மிகச் சிறப்பாக நிர்வகிப்பதற்கான திறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்பையும் ஒருங்கமைத்துக் கொண்டான். இவ்வாறு தென்னிந்தியப் பிரதேசங்களையும் கடல் கடந்த நாடுகள் பலவற்றையும் உள்ளடக்கிய சோழ சாம்ராஜ்ஜியத்தை மிகச் சிறப்பாக ஆண்டதன் மூலம் இந்திய வரலற்றின் புகழ் பெற்ற பேரரசர்களில் வரலாறு படைத்த இவன் அழுத்தமான சைவப் பற்றுடையவர்களும் வழிவழிச் சைவர்களுமான சோழ அரச வம்சத்தைச் சேர்ந்தவன். ஆகையால் பலமிக்க சோழப் பேரரசைக் கட்டியெழுப்பிய பின் சைவத்தையும் அது சார்ந்த பண்பாட்டையும் வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். சிறந்த சிவ பக்தனான இராசராசன் “சிவபாதசேகரன்” எனத் தனக்குப் பட்டம் சூடிக்கொண்டதுடன் எந்நாட்டவர்க்கும் இறைவனான தென்னாடுடைய சிவனுக்குத் தனக்கு முன்னர் எந்த மன்னராலும் நிர்மாணிக்கப்படாததும் அளவிலும் அழகிலும் மிகப் பிரமாண்டமுமான உலகமே வியந்து போற்றும் ஒப்பற்ற கலைக் கோயிலொன்றினை நிர்மாணித்து வரலாற்றில் என்றுமழியாத புகழினை நிலை நிறுத்திக் கொண்டான். சோழப் பேரரசின் விரிந்து வரும் பரப்பளவுக்கும் வளர்ந்து வரும் வசதிக்கும் ஓங்கி வரும் அதிகாரத்துக்கும் பொருத்தமாகக் கட்டடக் கலையிலும் தமிழர்களுடைய அரும்பெருஞ் சாதனை எனக் கூறத்தக்க வகையில் “தஞ்சைப் பெருங்கோயில்” என்றும் “இராஜராஜேச்சரம்” என்றும் அழைக்கப் பெறும் கோயிலை

நிர்மாணித்ததின் மூலம் தமிழர் நிறுவிய ஒரு பேரரசின் ஆற்றலையும் பெருமிதத்தினையும் சோழர்கள் உலகிற்கு அறிவித்தார்கள் எனச் சோழர் வரலாற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதிய பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி அவர்கள் 'Cholas' என்ற நூலில் குறிப்பிடுவார்.

தஞ்சை கோட்டை வளாகத்துள் அமைந்துள்ள இக்கோயிலுக்கு ஐந்து அடுக்குகளுடனான "கேரளாந்தகன்" திருவாயில் என்ற கோபுரமும் மூன்று அடுக்குகளுடனான "இராசராசன் திருவாயில்" என்ற கோபுரமும் உள்ளன. இவற்றுள் மிக உயரமான கோபுரமான கேரளாந்தன் கோபுரத்தில் காணப்படும் சோழர் காலச் சிற்பங்களில் ஐந்து தலை, பத்துக் கரங்களுடன் பத்மாசனத்தில் வீற்றிருக்கும் "மகாசதாசிவ மூர்த்தியின்" சிற்பம் மிகமிக அழகான சிற்பமாகவும் சோழர் காலச் சிற்பக்கலைத் திறனிற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றது. இக் கோயிலின் அடுத்த கோபுரமான இராசராசன் கோபுரத்தில் காணப்படும் சிற்பங்களில் 18 அடி உயரமுடையதும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டதுமான இரண்டு துவாரபாலகர் சிற்பங்கள் மிக மிக அபூர்வமான சிற்பங்கள் என்பதுடன் சிவன், மார்க்கண்டேயர், கண்ணப்பர், சண்டேஸ்வரர் ஆகியோர் தொடர்பான சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் அழகான சிற்பங்களாகும். மேற்குறித்த இரண்டு கோபுர வாயில்களிலும் நிறுத்தப்பட்டுள்ள ஒரே கல்லாலானதும் 40 அடி உயரமுடையதுமான இவ்விரண்டு வாயிற்தூண்களும் அபூர்வ படைப்புகளாகும்.

இரண்டாம் கோபுர வாயிலுடன் தொடங்கும் 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்ட பெரிய வளாகத்தினுள் முதலிலுள்ள மண்டபத்தில் 19.5 அடி நீளமும் 8.25 அடி அகலமும் 12 அடி உயரமும் ஒரே கல்லாலானதுமான மிகப் பெரிய நந்தி கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் கருவறையில் வீற்றிருக்கும் பெருவுடையாரின் பெருத்த லிங்க வடிவிற்கு மிகப் பொருத்தமாக அமைந்து காட்சி தருகின்றது. கோயிலை முன் நோக்கிச் செல்ல மகாமண்டபம், அர்த்தமண்டபம் என அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்ட தூண்கள் தாங்கும் மண்டபங்கள் உள்ளன. அவற்றைக் கடந்து செல்லக் கர்ப்பக்கிருகமும் (Sanctum) அதனுள் "பெருவுடையார்" அல்லது "பிரகதீஸ்வரர்" மிகப் பெரிய இலிங்க வடிவில் வீற்றிருக்கின்றார். 14 அடி உயர முடையதும் உள்ளத்தினை நெகிழ வைப்பதுமான இந்த இலிங்கம் இந்தியாவில் மட்டுமல்ல உலகிலேயே மிகப் பெரிய இலிங்கம் என்றே கூறப்படுகின்றது. இலிங்கத்தின் ஓரமாகச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மாடத்தின் மேல் நின்றே இலிங்கத்திற்கு அபிடேகம், அலங்காரம் என்பன நடைபெறுகின்றன. இப் பெருத்தலிங்கம் வீற்றிருக்கின்ற கருவறைக்கு மேல் 216 அடி உயரத்திற்கு வடிவ அமைப்பிலும் அழகிலும் வியப்பூட்டும் சிற்பக்கலைத் திறனிலும் உலகப் புகழ்பெற்ற "தட்சிணமேரு" என்ற விமானம் விண்ணை முட்டுவது போல மிகக் கம்பீரமாக நிமிர்ந்துநிற்கின்றது. கருவறையைச் சுற்றி உட்புறமாக கருங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட சுவர்களும் வெளிப்புறமாக நிர்மாணிக்கப்பட்ட சுவர்களும் இணைந்து உருவான 30 அடி அகல முடைய மிகப்பலமான கட்டட நிர்மாணமே, வாயகலமான கூம்பு போன்றதொரு பாத்திரத்தைத் தலை கீழாகக் கவிழ்த்தது போன்ற அமைப்புடையதும் அடிப்பாகத்திலிருந்து கலசம் வரை கருங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்டதுமான இந்த விமானத்தைத் தாங்கி நிற்கின்றது. கருங்கற்களினாலான நெடிதுயர்ந்த இந்த விமானத்தின் பாரம் முழுவதையும் தாங்கி நிற்கும் இக்கட்டட நிர்மாண நுட்பம் வியக்கத்தக்கதாகும். சதுர வடிவிலமைந்த அகன்ற அடிப்பாகத்தினைக் கொண்ட மூன்று தளங்களுடன் கருவறையிலிருந்து சுமார் 50 அடிவரை மேல் நோக்கி உயரும் விமானம் மேலே உயர உயரக் கீழுள்ள தளத்திலும் அதன் மேலுள்ள தளம் கூம்பு வடிவில் ஒடுங்கி ஒடுங்கி அவ்விதம் பத்து (10) வரையான தளங்கள் வரை உயர்ந்து செல்கின்றது. தரையிலிருந்து 190 அடி உயரம் வரை உயர்ந்து சென்ற விமானத்தின் உச்சியில் செம்பில் வார்க்கப்பட்டு பொன் முலாம் பூசப்பட்ட 12 அடி உயரமுடைய கலசம் பொருத்தப்பட்டு மிக எடுப்பான எழிலான தோற்றத்தில் காட்சி தரும் இவ் விமானத்தினை எக்கோணத்திலிருந்து

பார்த்தாலும் அதன் பேரழகு அதிசயிக்கத்தக்கதாகவே காணப்படுகின்றது. விமானத்தின் சுற்றுப்புறம் முழுவதும் உள்ள சிற்பங்களின் பேரழகையும் விமானம் மேலே செல்லச்செல்ல சிறுத்துச் சிகரத்துடன் விளங்கும் நேர்த்தியையும் இம் மாபெருங் கோயிலை வெற்றிப் பெருமிதத்துடன் உருவாக்கிய இராசராசப் பெருவேந்தனின் ஆற்றலையும் அல்லும் பகலும் அயராது இச் சீரிய பணி முடித்த சிற்பிகளையும் போற்றிப் புகழாத அறிஞர்களே இல்லை எனலாம்.

விமானம், கருவறை, மண்டபங்கள் எனக் கோயிலின் எல்லா அமைப்புகளும் சிற்பம், ஓவியம் நிரம்பிய கலைக்கூடமாகவே விளங்குகின்றது. அர்த்த மண்டபத்தின் தெற்குப் பகுதியிலுள்ள திரிபுர அசுரர்களுடைய சிற்பங்களும் வடக்குப் பகுதியில் சண்டேசுவரர் பற்றிய சிற்பங்களும் தக்கனது வேள்விச் சிற்பங்களும் அரிய படைப்புகளாகவுள்ளன. மகாமண்டபம், கருவறை ஆகியவற்றின் உட்புறச் சுவர்களில் சிவன், நடனமாடும் ஆடல்வல்லான், உமை, திருமாலுக்குச் சக்கரம் கொடுக்கும் காட்சி, மார்க்கண்டேயருக்கு அருள் செய்யும் யம சங்கார மூர்த்தியின் சிற்பத்தொகுப்பு, பரத நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் ஆடல் வல்லானின் அரிய தாண்டவங்கள், துவாரபாலகர் உருவங்கள் ஆகியனவும் விமானத்தின் வெளிப்பக்கச் சுவர்களில் வரிசையாகச் செதுக்கப்பட்ட போர்வீரர்கள், சிங்கங்கள், யாழிகள் என இன்னும் பல நேர்த்தியாகவும் பார்ப்போர் உள்ளத்தினை நெகிழ வைப்பவையாகவும்,உயிர்த் துடிப்புடையனவாகவும் செதுக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் கிழக்கு வாசல் வலது பக்கத்திலுள்ள 15 அடி உயரமான துவாரபாலகர் சிற்பம் இக்கோயிலிலுள்ள இன்னுமோர் அரிய கலைப்படைப்பாகும்.

இக்கோயில் வழிபாட்டிலுள்ள நடராசர் வார்ப்புச் சிலை அதிசய வனப்பு மிக்க ஒப்பற்ற படைப்பு எனக் கூறப்படுகின்றது. இராசராசன் வார்ப்பித்த இவ்வாட வல்லானின் செப்புத் திருமேனியை உற்று நோக்கும் போது

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

என்ற நாவரசரின் நற்றமிழ் வாசகந்தான் நினைவிற்கு வரும். தமிழர் உருவாக்கிய நடராசர் சிற்பம் பிரபஞ்ச சிருஷ்டி தத்துவத்தின் ஒட்டுமொத்த விளக்கம் என்பதுடன் உலகிலுள்ள மகோன்னதமான கலைப் படைப்புகளில் முதலிடம் வகிப்பதென்றும், விஞ்ஞானம், மதம், கலை ஆகிய அனைத்தையும் ஒன்றாக்கி விளக்குவதென்றும் இந்தியக் கலையின் சிகரம் என்றும் ஆனந்தக்குமாரசுவாமி போன்ற கலாவிற்பன்னர்களால் (DANCE OF SIVA) என்ற நூலில் விதந்து போற்றப்பட்டதுமாகும். முகத்திலே புன்சிரிப்பு தவழ இடதுகாலைத் தூக்கி ஆடும் இக்கலைப் படைப்பைக் காணப் பல நாடுகளிலிருந்தும் மக்கள் கூட்டம் வந்து கொண்டே இருக்கின்றது. அவர்களில் சிறந்த விஞ்ஞானிகள், கலைஞர்கள், அறிஞர்கள் எனப் பலர். வருபவர்கள் யாராயினும் இச்சிலையின் முன் நின்று இதன் கருத்தழகிலே மனதை நிறுத்திக் கலை அழகிலே இலயித்து நேரத்தை மறந்து நின்று படிமத்தில் ஒன்றி இரசிக்கின்றனர். இம் மாபெரும் படைப்பின் ஒவ்வொரு பகுதியும் மதக் கட்டுப்பாடுகளையோ அல்லது மூட நம்பிக்கைகளையோ குறிப்பவையல்ல. உண்மையான விடயங்களையே விளக்குபவையாகும். விஞ்ஞானம் போற்றிப் புகழ்கின்றதும் இயற்கையின் அடிப்படையாகவுமுள்ள சக்தியை இவ்வளவு எளிதாகவும் அழகாகவும் உண்மையாகவும் நவீனகாலக் கவிஞர் எவராலும் எடுத்துக்கூற முடியாது என விதந்து போற்றப்படும் இந்த அபூர்வ படைப்பான நடராசர் சிற்பம் சோழப்பேரரசன் இராசராசன் காலத்தில்தான் தோற்றுவிக்கப்பட்டதாக ஆய்வாளர் கொள்வர். இத்தகைய உருவைத் தோற்றுவிக்க மேதாவிகளின் மேன்மையினை எண்ணி எண்ணி வியந்து வியந்து போற்றுகின்றோம். “ரோடின்” என்ற உலகப் புகழ் வாய்ந்த பிரெஞ்சு கலைஞர், ஆடலரசனான

நடராசர் சிலையைக் கலை விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தி ஆராய்ந்து உலகின்கண் உள்ள கலைப்படைப்புகளில் நடராசர் சிலையே தலையாயது எனக் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

சிற்பங்களைப் போலவே கருவறையைச் சுற்றியுள்ள அறைகளில் அதியற்புதமான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சிவபெருமானின் திரிபுர சம்காரக் காட்சிகள், சுந்தரர் திருமணத்தைச் சிவபெருமான் தடுத்தருளல், அமர்ந்த நிலையிலுள்ள தட்சணாமூர்த்தி, சுந்தரரும் சேரமான் பெருமாளும் முறையே ஐராவதம் என்னும் யானையிலும், குதிரையிலும் கயிலை செல்லும் காட்சி, சிவபெருமான் உமையுடன் இவ்விருவரும் நடனம் காணுதல், தில்லைப் பொன்னம்பலத்தில் இராசராசன் தேவியர்களுடன் ஆடல் வல்லானை வழிபடுதல், தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசன் வழிபடுதல், இராவணன் கயிலையைப் பெயர்த்தல், கண்ணப்பர் வரலாறு, சிவபுராணக் கதைகள் போன்ற இன்னும் பல உயிரோட்டமுடைய அருமையான ஓவியங்களாகும். சுவர் ஓவிய வரலாற்றில் உலகப்புகழ் பெற்ற அஜந்தா, சித்தன்னவாசல் ஓவியங்களுக்கு அடுத்த நிலையில் தஞ்சைப்பெரிய கோயில் ஓவியங்கள் மிகச் சிறந்தவை என்கிறார் கே. ஆர். சீனிவாசன் என்ற அறிஞர்.

புராணக் கதைகளையும் வரலாற்று நிகழ்வுகளையும் உயிரோட்டமுடைய அதியற்புதமான சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் கற்களில் வடித்துள்ள சோழர்காலக் கலாவிற்பன்னர்கள், கலையும் உலகமும் உள்ளளவரை போற்றப்படுவர்.

தஞ்சைக் கோயில் பற்றிய விவரமான பல செய்திகளை விவரிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. இராசராசனின் மெய்க்கீர்த்தியோடு ஆரம்பிக்கும் இராசராசனது கல்வெட்டில், தானெடுத்த இந்தக் கற்கோயிலுக்குத் தான், தனது மூத்த சகோதரி, தனது மனைவியர், பொதுமக்கள் அனைவரும் வழங்கிய கொடைகளைத் தொகுத்துப் பட்டியலிட்டுக் கல்லில் பொறிக்குமாறு ஆணையிட்டதைக் கூறுவதாகவும் அனைத்துக் கல்வெட்டுக்களையும் தொகுத்து நோக்கும் போது இக்கோயிலின் நிர்வாக அலுவலர் பெயர், இராசராசனின் குருவாக விளங்கியவர் பெயர், இக்கோயிலின் முதன்மை அர்ச்சகர், இக்கோயிலை நிர்மாணித்த சிற்பிகள் விவரம், இக்கோயிலில் தேவாரம் ஓத, நடனமாட நியமிக்கப்பட்டவர்கள் விவரம், மன்னனாலும் மக்களாலும் வழங்கப்பட்ட கோடிக்கணக்கான பெறுமதி மிக்க தங்க நகைகள், தங்க வெள்ளிப் பாத்திரங்கள், செப்புத் திருமேனிகள் அனைத்தும் முறையாக நிறை, பெறுமதி மதிப்பிடப்பட்ட கணக்கு விவரம், போர் வெற்றியால் திரண்ட செல்வம் அனைத்தும் இக் கோயிலுக்கே அளிக்கப்பட்ட விவரம், இறைவனுக்கே அளிக்கப்பட்ட கவின்கலைகள் பற்றிய விவரம் என்பன போன்ற விரிவான பல வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்வதுடன் இராசராசன் தான் நிர்மாணித்த இக் கோயில் தொடர்பான விடயங்களில் எவ்வளவிற்கு உன்னிப்பாகவும் கண்ணுங் கருத்துமாகவும் செயற்பட்டான் என்பதனையும் விளங்கிக் கொள்ளலாம்.

(தொடரும்)

**அறிவு என்பது புத்தகத்திலிருந்து பெறப்படுவது மட்டுமன்று. சொல்லிக் கொடுத்தோ, கேள்வி மூலமாகவோ, அறிவுக் கூர்மையினாலோ அடையக்கூடியதும் அன்று என்று கடோபநிடதம் கூறுகின்றது. அதுபோல மதம் என்பதும் சடங்குகளாலும் நம்பிக்கைகளாலும் உருவாவது அன்று.**

**Dr S இராதாகிருஷ்ணன்.**

# THE POWER OF MANTRAS

## - a scientific view -

Dr. Shan Ranjit

(continued from last issue)

**MANTRAS AND GODS:**


Do Gods respond to the Mantras that are chanted? It is said in the Vedas and the scriptures that Brahman and Gods are formless. If they are formless, how do they exist? They all exist in the form of energy. In the waking state, Brahman (Supreme consciousness or Paramatma) is nothing but Energy. Its manifestations are nothing but energy. For example, we cannot see the energy that flows through a power station. Just because we do not see the energy in the power station, it would be foolish for anyone to deny that there is no energy in the power station.

In this world everything exists only in the form Energy. Individual souls (Atman) also exist in subtle energy form. Likewise, the various 'Gods' that we fondly pray to, also exist only in Energy form - it is we who have given a form and name for all these Gods. The only difference between the individual souls and these Gods are the energy level. The Gods are nothing but highly **'energized consciousness'.**



There are Mantras addressed to specific Gods (highly energised consciousness). The vibrations of a particular Mantra correspond to the vibrations of that God. It is well known that a crystal can shatter if one strikes a certain high note, which corresponds to the specific resonance of that crystal. Likewise, by constantly chanting a specific mantra, with intense mental intention, we create an energy field that equates with that of that god' s energy level and thus the beneficial effects.

**GAYATHRI MANTRA - MANTRA OF MANTRAS:**




The classic example of the potent vibration (energy) in Mantras is the Gayathri Mantra. It is the Mantra of Mantras. If you have to know only one Mantra, it is this one. I challenge any one to say the Gaythri Mantra with all sincerity at least three times - sunrise, noon and sunset - and see the benefits for themselves. It is very important to learn the Mantra from a guru with knowledge because one has to pronounce it properly - with a few tries, this will be no problem.


OM BHUR BHUVA SUVAH (The earth, the sky, the heavens)
THATH SAVITHUR VARENYAM (The Glorious One Whom we all adore)
BHARGO DEVASYA THEEMAHI (We contemplate on your Divine Glory)
DHIYOYONA PRACHOTHAYATH (Please enlighten our intellect)

Gayathri is the universal prayer enshrined in the Vedas. It is addressed to the immanent and transcendent Divine who has been given the name 'Savitha', meaning that from which all is born. Here, firstly the Divine is praised, then meditated upon and finally an appeal is made to the Divine to awaken our intellect (buddhi). By reciting this Mantra, one is protected where ever you are. It has been scientifically proven when Gaythri Mantra is said with the right accent, the surrounding becomes illumined.

Let us see what Thriumoolar says about Gayathtri Mantra:

"Minds centered in Gayatri holy and Savitri mysterious,
They chant the noble hymn, the heart of truth to seek,
Mounted on Love's Chariot, lost in Love's sweet ecstasy,
They drown not in Maya - the holy Brahmins meek"
- (Thirumanthiram)

காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்ததிரமாங் குன்னி
நேயத்தே ரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே




The purpose of this Mantra is to seek the blessings to lead a good life at all times in all places - heaven, earth and nether regions. The Mantra divinises the five elements - ether, air, fire, water and earth; It enables one to become aware of the five vital airs in the human body (Vyana, Prana, Udaana, Samaana, Apaana) and the five sheaths (kosha) that encase the Soul (Annamya, Pranamaya, Manomaya, Vignanamaya and Annandamaya).

**PANCHAKSHARA MANTRA:**

"OM NAMAH SIVAYA" (O salutations to Lord Shiva)
This Mantra has such power that mere repeating of this mantra results in salvaging the souls from bondage of Maya. This Mantra quells the instinct, turns the intellect within and then one sees the ignorance. This Mantra is recorded at the very center of Vedas and elaborated in Saiva Agmas. It is present in the Shri Rudram hymn which is part of the Krishna Yajurveda.This Mantra is life, action, love and wisdom.




"Namah Sivaya is in truth both Agamas and Vedas; Namah Sivaya represent all Mantras and Tantras; Namah Sivaya is our souls, our bodies and possession; Namah Sivaya has become our sure protection."

**(NATCHINTANAI -YOGAR SWAMI)**

The mystic expression ‘Nama Sivaya', is the sacred name of Lord Siva, is the sum and substance of the four Vedas and conveys in the sacred path, souls which are full of devotion and do utter it with a melting heart and tears trickling form their eyes."

- (Thirumurai).

**MANTRAS - TAMIL OR SANSKRIT?**

**There have been fierce debates among the Tamils, especially in Tamil Nadu, that the Mantras that are chanted at the Hindu Temples be said only in Tamil. However, most of the Mantras are in Sanskrit. Is it right and justified that these Mantras be translated in Tamil and then chanted at the temples? What will be the consequences of such translated mantras? Will such translated Tamil Mantras still retain the "power" that these Mantras are intended for? For the reasons explained in the preceding paragraphs, no other words can produce the same vibrations that are produced by these specific mantras. Hence the potency of any Mantra is lost when it is translated. Therefore, chanting translated mantras cannot have the same effect.**

Some Tamils wrongly equate Samaskritham (Sanskrit) to Brahminism. This is wrong. Nowhere in the Hindu Vedas or scriptures it is said that Sanskrit is exclusive only to a certain group or race. Sanskrit is a universal language that should be learnt by everyone. Learning Sanskrit is key to become spiritually successful. Whether one likes it or not, most of the spiritual teachings are written in Sanskrit. Hence to understand the deeper meaning of spirituality, one must learn this language. One should not only be successful economically, but also spriitually.

It is not only ironic but also sad that while the Tamils are rejecting Sanskrit, the Western world is slowly adopting this ancient language. Today, all many top universities in United States have a separate department for Sanskrit studies – this includes Harvard, Berkley, UCLA and others.

The founder of the Dravidian movement, Periyar, opposed Sanskrit only because it was widely spoken by those people whom he considered his arch political enemies - the Brahmins. Periyar did this to capture power in Tamil Nadu and sideline the Brahmins. He was very successful in this. But he mistakenly identified the Sanskrit language with the Brahmins.

However, it is wrong to argue that Sanskrit is superior to Tamil and vice versa. Both are ancient languages and offer immense benefits to the people through their scriptures.

Ideally, Hindu temples should continue chanting the mantras in Sanskrit. However, a translation and the meaning of these Mantras in Tamil should be made available in all temples. We Tamils love our mother tongue. We must be proud to have been born as Tamils; we must write and speak Tamil; we must teach our children Tamil. Having said that, it is also

foolish for the Tamils to reject Sanskrit; this is an ancient and universal language that should be studied.

The Saiva Siddhanta philosophy is an example of the Dravidian intellect. Saiva Siddhantam possess great antiquity. It is the religious philosothy of Tamil people. Saiva Siddhantam gives much importance to Vedas and Agamas.

Thirumurai are scriptures that discipline the soul and paves the way for the ultimate union of the individual soul with Cosmic soul. Thirumurai consists mostly of devotional hymns in Tamil and not Mantras. Are they effective in bringing the soul closer to God? The answer is, without any hesitation, 'YES' as long as one sings with all the devotion. Thirumurai glorifies the Vedas and Agamas. Nowhere in the Thirumurai, the Vedas are ridiculed only because they are written in Sanskrit. Both these languages are like two eyes in one body. Thirumoolar says:

" Devoid alike of rain and summer's gift of dew
Even the flashing lake had lost it's vernal bloom
Then did He in Sanskrit and Tamil at once,
Reveal the rich treasure of His Compassion."

- (Thirumanthiram).

மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழும் உடனேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே

(திருமந்திரம்)

“Life takes its birth, stands preserved awhile,
And then its departure takes; caught
In that momentary wave of flux, Him we glimpse,
The Lord who in Tamil sweet and northern tongue
Life's mystery revealed.”

(Thirumanthiram).

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறுஞ்
சிமிழ்த்தலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே!

(திருமந்திரம்)

Therefore, let us not waste our time in quarrelling about the language of mantras. Instead, let us learn and understand the power of mantras and use it in the prescribed manner as a means to realise God.

# தில்லைத் தீட்சிதர்கள் வரலாறு

**நன்றி: ஆசிரியர் குரல் தகவல்: சிவஸ்ரீ இரத்தினதாண்டவ தீட்சிதர்**

கோயில் என்ற சொல்லுக்கு இறைவன் வாழும் இல்லம் என்று பொருள். வைஷ்ணவர்களுக்குக் கோயில் என்றால் அது திருவரங்கம்தான் எனில், சைவர்களுக்கு? ஆனந்தக் கூத்தன் ஸ்ரீ நடராஜப் பெருமான் கோலோச்சும் சிதம்பரம் ஆலயத்தைத்தான் அவர்கள் “கோயில்” என்று சொல்வார்கள். இங்கே நடராஜப் பெருமான் மட்டுமன்றி, அவரை அநுதினமும் பூஜித்து வரும் தீட்சிதர்களும் கவனிக்கத்தக்கவர்கள். சிதம்பரத்துக்குத் தில்லை, தில்லையம்பதி என்றெல்லாம் பல பெயர்கள் உண்டு. இங்கே உள்ள தீட்சிதர்களை, தில்லைவாழ் அந்தணர்கள் என்று குறிப்பிடாத புராணங்களோ, சரித்திரங்களோ, இலக்கியங்களோ இல்லை எனலாம்.



“தில்லை மூவாயிரம்” என்றொரு வாசகம் மிகப் புராதன மானது. அதாவது, தில்லைவாழ் அந்தணர்கள் எனப்படும் தீட்சிதர்கள் மூவாயிரம் பேரைக் குறிப்பிடும் வாசகம் அது. பாற்கடலில் ஆதிசேஷன்மீது பள்ளி கொண்டிருக்கும் திருமாலின் எடை திடீரெனக் கூடியது. சதாசர்வ காலமும் அவரைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆதிசேஷனுக்கு, “அட! என்ன இப்படி எடை கூடியிருக்கிறது!” என ஆச்சரியம். திருமாலிடமே கேட்டார். “சிவனாரின் திருநடனத்தில் களிப்புற்றேன். அந்தப் பூரிப்பில் உடல் எடை கூடிப்போயிருக்கும்” என்றார் மாலவன். அதைக் கேட்டு ஏதோ முணுமுணுத்தார் ஆதிசேஷன். அந்த முணுமுணுப்பைத் திருமால் அறியாமல் இருப்பாரா? “என்ன முணுமுணுக்கிறாய் ஆதிசேஷா? தயங்காமல் சொல்!” என்றார். “ஈசனின் திருநடனத்தைத் தரிசிக்கும் ஆசை பரந்தாமனான உங்களுக்கே இருக்கும்போது நானெல்லாம் எம்மாத்திரம்? எனக்கு மட்டும் விருப்பம் இருக்காதா?” என்று கேட்டார் ஆதிசேஷன். “அவ்வளவுதானே! இப்போதே பூலோகத்தில் பிறப்பெடுத்து சிவபெருமானின் நடனத்தைத் தரிசிப்பாயாக!” என்று அருளினார் திருமால். அதையடுத்து சிவனாரே ஆதிசேஷனிடம் “தில்லைவனத்தில் தவத்திலும் பூஜையிலும் ஈடுபட்டிருக்கும் வியாக்ரபாதர் எனும் முனிவருடன் சேர்ந்து செயல்படுவாயாக!” என அசரீரியாகச் சொல்ல, பூலோகத்தில் பிறப்பெடுத்து பதஞ்சலி முனிவர் என எல்லோராலும் வணங்கப்பட்ட அந்த முனிவர் தில்லை வனம் வந்தார். வியாக்ரபாத முனிவருடன் நட்பானார். சிவபூஜையில் ஈடுபட்டார்.

தை மாதத்தில் வியாழக்கிழமையும் பூச நட்சத்திரமும் கூடிய நன்னாளில் ஆனந்த நடனக் காட்சியை வியாக்ரபாதருக்கும், பதஞ்சலி முனிவருக்கும், தேவர்பெருமக்களுக்கும் காட்டி அருளினார் ஆனந்தக் கூத்தன். அந்த வேளையில், திருக்கயிலாயத்தில் இருந்து சிவனாருடன் மூவாயிரம் வேத விற்பன்னர்களும் வந்தார்கள். அவர்களுக்கு குருவாக இருந்து நடராஜப் பெருமானே வேதங்களைத் தந்தருளினாராம். ஈசனிடமே தீட்சை பெற்றவர்கள் எனும் பெருமைக்கு உரியவர்கள் ஆனதால், அந்த மூவாயிரம் பேரும் தீட்சிதர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

“திருக்கயிலாயத்தில் இருந்து சிவபெருமானோடு மொத்தம் எழுபத்து எட்டாயிரம் முனிவர்கள் வந்தார்களாம். அதில் சிவபெருமானைக் குருவாகக் கொண்டு உபதேசம் பெற்ற மூவாயிரம் அந்தணர்களை தீட்சிதர்கள் என்று சொல்லுவார்கள். தீட்சை பெற்றவர்கள் தீட்சிதர்கள்!

'தில்லைப் பெண் எல்லை தாண்டாள்'னு ஒரு சொல்வழக்கு உண்டு. அதாவது தீட்சிதர்கள் குடும்பங்களுக்குள்ளேயே திருமணம் செய்துகொள்வார்கள் வெளியே பெண் எடுப்பதில்லை. வெளியூருக்கும் செல்வதில்லை. ஸ்ரீவத்ஸ கோத்திரம், கௌண்டின்ய கோத்திரம், ரிஷிக்யான்யர் கோத்திரம், விஸ்வாமித்திர கோத்திரம்னு நாலு கோத்திரங்கள் தீட்சிதர்களுள் உண்டு. இந்த நான்கு கோத்திரங்களுக்குள்தான் பெண் எடுத்து பெண் கொடுத்து (அவரவர் கோத்திரத்தைத் தவிர மற்ற கோத்திரங்களில்) கொள்வோம்" என்கிறார் சிவசங்கர தீட்சிதர்.

"தீட்சிதர் குடும்பத்தில் பிறந்த ஆண் குழந்தை பிறந்த உடனேயோ அல்லது வளர்ந்ததுமோ தீட்சிதர் எனும் பட்டத்துக்கு கௌரவத்துக்கு வந்துவிடமுடியாது. உபநயனம் எனப்படும் பூணூல் வைபவம் முடிந்த பின்னரும் தீட்சிதர் ஆகிவிட முடியாது. திருமணமாகி மாங்கல்யதாரணம் எனப்படும் தாலி கட்டுகிற வைபவம் நடந்து முடிந்த அந்த நிமிடத்திலிருந்துதான் அவர் தீட்சிதர் எனும் அடைமொழியுடன் அழைக்கப்படுகிறார்" என்கிறார் சிவசங்கர தீட்சிதர். தன் 18 வயதில் இருந்து பூஜையில் ஈடுபட்டு வரும் இவர் திருமணமான ஐந்தாம் நாளிலிருந்து கோயிலில் பூஜை செய்து வருவதாகச் சொல்கிறார். இவரின் வயது 75.

"கிழக்கு வீதி, தெற்கு வீதி, மேல வீதி, வடக்கு வீதி என்று கோயில் மதிலைச் சுற்றி உள்ள நான்கு வீதிகள்தான் தீட்சிதர்களின் உலகம். இந்தத் தெருக்களையும் ஆடல்வல்லானையும் தவிர எங்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது" என நா தழுதழுக்கச் சொல்கிறார் இவர்.

ஞானசம்பந்தர் ஸ்ரீநடராஜப் பெருமானைத் தரிசிக்கும் ஆவலில் தில்லையம்பதிக்கு வந்தார். அங்கே தீட்சிதர்களையும் அவர்கள் செய்து வரும் பூஜைகளையும் அறிந்து, "நான் இங்கு தங்கமாட்டேன். கடவுளுக்குத் தொண்டு செய்யும் அடியவர்களை கடவுளே விரும்பி அமர வைத்துள்ள பூமி இது. இங்கே படுத்து உறங்குவதும் மல ஜலம் கழிப்பதும் தகாத செயல்" என்று சொல்லிவிட்டு அருகில் உள்ள கொற்றவன்குடி எனும் கிராமத்துக்குச் சென்று தங்கினார்.

கற்றாங்கு எரியோம்பி கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லை சிற்றம்பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே!

என்று ஞானசம்பந்தர் பெருமான் மனமுருகிப் பாடுகிறார். அதுமட்டுமா? "தில்லைவாழ் அந்தணர்களைப் பார்த்தபோது அந்த சிவகணங்களே சிவனாருக்கு அரணாக வந்து கொண்டிருப்பதுபோல் எனக்குக் காட்சி கிடைத்தது" என்று சொல்லிச் சிலிர்க்கிறார்.

மிகப் பிரமாண்டமான யாகம் ஒன்றை நடத்த முடிவு செய்தார் பிரம்மா. தில்லை மூவாயிரத்தாரை அழைத்து "யாகத்தில் கலந்துகொண்டு அதற்கு இன்னும் வலுவும் பெருமையும் சேருங்கள்" என்றார். "தினமும் நடராஜருக்கு பூஜை செய்யவேண்டுமே! அது தடைப்படுமே..!" எனத் தயங்கினார்கள் அவர்கள். உடனே பதஞ்சலி முனிவர், "நீங்கள் வரும்வரை நான் பூஜை செய்கிறேன். போய் வாருங்கள்" என்றார்.

அதன்படி பிரம்ம லோகத்துக்குச் சென்ற தில்லை அந்தணர்கள் யாகத்தில் கலந்து கொண்டார்கள். யாகம் முடிந்த பின்பு சிதம்பரம் வந்தார்கள். வந்தவர்கள் ஒருவரைக் காணாது திடுக்கிட்டார்கள். "மூவாயிரம் பேர் இருக்க வேண்டுமே, 2999 பேர்தானே இருக்கிறோம்" என்று பதறினார்கள். அப்போது "மூவாயிரத்தில் நானும் ஒருவன். உங்களில் ஒருவன் நான். மறந்துவிட்டீர்களா?" என்று சிவனாரே கேட்க, பொன்னம்பலத்தானின் பெருங்கருணையை வியந்து

ஆனந்தக்கண்ணீர் வடித்தார்கள் தீட்சிதர்கள். அதனால்தான் சிவனாருக்கு “சபாநாயகர்” எனும் பெருமையும் பேரும் கிடைத்தது என்பார்கள்.

“எத்தனையோ சிவாசார்யர்களுக்கும் பட்டாச்சார்யர்களுக்கும் குருக்கள்மார்களுக்கும் கிடைக்காத ஒரு தனிப் பெருமை தில்லை வாழ் தீட்சிதர்களுக்குக் கிடைத்திருக்கிறது. தஞ்சைப் பெரியகோயிலில் கோபுரத்தின் உட்பகுதிகளில் நிறைய ஓவியங்கள் உள்ளன. அதில், பொன்னம்பலத்தானை ராஜராஜசோழன் வணங்குவது போலவும், அருகில் தில்லைவாழ் அந்தணர்கள் நிற்பது போலவும் ஓர் ஓவியம் உள்ளது. சுமார் ஆயிரம் வருடங்களைக் கடந்த தஞ்சைப் பெரிய கோயிலில் தீட்சிதர்களின் ஓவியங்களும் இருக்கின்றன என்றால், அவர்களின் பாரம்பரியத்தை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்” என்கிறார் கல்வெட்டு ஆய்வாளர் குடவாயில் பாலசுப்ரமணியன்.

“கும்பகோணம் தாராசுரம் ஸ்ரீ ஐராவதீஸ்வரர் கோயிலில் ஏராளமான சிற்பங்கள் உள்ளன. அதில் ஒன்றில், அம்பலவாணனான நடராஜப் பெருமான் அழகு கொஞ்சக் காட்சி தருகிறார். அருகில் தில்லை மூவாயிரத்தாரின் இருப்பை உணர்த்தும் விதமாக ஆயிரத்துக்கு ஒருவர் வீதம் மூன்று பேர் நிற்கிறார்கள். ஒருவர் ஸ்ரீ நடராஜருக்குக் குடை பிடிக்க, இன்னொருவர் இறைவனுக்கு சாமரம் வீச, மூன்றாமவர் நைவேத்தியத் தட்டினை ஏந்தியபடி நிற்கிறார். ஆக தஞ்சையில் ஓவியமாகவும் தாராசுரத்தில் சிற்பமாகவும் இருக்கிறார்கள் தீட்சிதர்கள். ஏழாம் - எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர், அப்பர் பெருமான் முதலானோர் தரிசித்த சிதம்பரம் கோயிலில் தீட்சிதர்களும் அப்போதிருந்தே இருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது” என்று விவரிக்கிறார் குடவாயில் பாலசுப்ரமணியன்.

முற்காலப் பல்லவர்கள் காலத்துக் கோயில் என்றும் இதைச் சொல்கிறார்கள். ஹிரண்யவர்மன் எனும் வங்க தேசத்து அரசன் சிற்சபைக்கு பொன் வேய்ந்ததாகச் சொல்லும் கல்வெட்டுக் குறிப்புகள் உள்ளன. அதேபோல் பராந்தகச் சோழன் கொங்கு தேசத்தைக் கைப்பற்றிய வெற்றிக் களிப்பின் அடையாளமாக, அங்கிருந்து கொண்டு வந்த பொன் பொருளைக் கொண்டு சிதம்பரம் சபைக்குப் பொன் வேய்ந்ததாகக் கல்வெட்டு தெரிவிக்கிறது. தவிர ஒவ்வொரு மன்னரும் இந்த தீட்சிதர்களுக்கு நிலங்களும் வீடுகளும் தானம் அளித்துள்ளனர்.

“தீட்சிதர்கள் நடராஜப் பெருமானுக்கு பூஜை செய்வதையே தொண்டாகக் கருதி வாழ்ந்து வருபவர்கள். எப்போதும் மனத்தில் ஈசனையும் மடியில் விபூதிப் பையையும் வைத்திருப்பவர்கள். அர்ப்பணிப்பு மனோபாவத்தில் சிவனாரிடம் முழுவதுமாகச் சரணடைந்தவர்கள் என்று பெரியபுராணத்தில் தில்லைவாழ் அந்தணர் சருக்கம் எனும் பகுதியில் தீட்சிதர்களைப் போற்றி விவரித்துள்ளார் சேக்கிழார் பெருமான்” என்கிறார் சம்பந்த தீட்சிதர்.

“வேதமே முக்கியம் எனக் கொண்டு பதஞ்சலி முனிவர் அருளிச் சென்ற பூஜா சூத்திரத்தின்படிதான் இந்தக் கோயிலில் பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இங்குள்ள தீட்சிதர்களில் தலைவர் தொண்டர் என்றெல்லாம் இல்லை. ஒன்பது பேர் கொண்ட குழுவை வருடந்தோறும் அமைப்போம். அந்தக் குழுவினரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை பிரித்து வழங்கப்படும்.

யஜன, யாஜன, அத்யயன, அத்யாபக, தான, ப்ரதிக்ரக என ஆறு கர்மாக்கள் தீட்சிதர்களுக்கு உண்டு. யஜனம்- யாகம் செய்தல் யாஜன- யாகம் செய்வதற்கு உதவி செய்தல் அத்யயன- வேதம் கற்றல் ஓதுதல் அத்யாபன- கற்றுக்கொண்ட வேதத்தைப் பிறருக்குச் சொல்லிக் கொடுத்தல் தானம்- பிறருக்கு வழங்குதல் ப்ரதிக்ரக- பிறர் தருவதை மறுக்காமல்

வாங்கிக்கொள்ளுதல். இந்த ஆறு கர்மாக்களையும் அதாவது ஆறு கடமைகளையும் செவ்வனே செய்பவனே தில்லை வாழ் அந்தணன் தீட்சிதன்" என்று விவரிக்கிறார் உமாநாத் தீட்சிதர்.
நாயன்மார்கள், சமயக்குரவர்கள், சந்தானச்சார்யர்கள், அருணகிரிநாதர் எனப் பலரும் தரிசித்துப் போற்றி வணங்கிய தலம் இது. காஞ்சி மகா பெரியவர் இங்கு வந்து ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தரிசித்து வைர குஞ்சிதபாதம். வைர அபய ஹஸ்தம், வைரத் திருமுடி என வழங்கியுள்ளார்.
சோழ மன்னர்கள் காலத்தில் அவர்களுக்குத் தில்லைவாழ் அந்தணர்களே முடிசூட்டுவது மரபு. அப்படி ஒரு பெருமையை சோழ மன்னர்கள், தீட்சிதர்களுக்குத் தந்திருந்தார்கள். சோழர்களின் பின்னடைவுக்குப் பிறகு, களப்பிரர்கள் இங்கே ஆட்சி செய்தார்கள். அச்சுதக் களப்பிர மன்னன் என்பவன் தில்லையம்பதிக்கு வந்தான். கோயிலுக்கு வந்தவன் "எனக்கும் முடிசூட்டுங்கள்" என்றான். ஆனால் தீட்சிதர்கள் மறுத்துவிட்டார்கள். "சிவமே கதியென்று இருந்த சோழ மன்னர்களைத் தவிர வேறு எவருக்கும் முடிசூட்டி மரியாதை செய்ய மாட்டோம்" என்று உறுதியாக இருந்தார்கள். "உயிரை விடத் தயாரா?" என்று அவர்களை அச்சுறுத்தினான். அதில் ஏராளமான தீட்சிதர்கள் சேர தேசமான கேரளத்தை நோக்கி ஓடி அங்கே சிவபூஜையில் ஈடுபட்டார்கள். பிறகு மன்னனின் கனவில் வந்த சிவனார் அவன் சிரசில் தனது திருவடியை வைத்தார். அகம் குளிர்ந்த மன்னன் தன் தவற்றை உணர்ந்தான். தீட்சிதர்களை மீண்டும் சிதம்பரத்துக்கு அழைத்து வந்து மன்னிப்புக் கேட்டான்.

"அதையடுத்து மராட்டியர்களின் காலம் வந்தது. அந்நியர்களின் படைகள் உள்ளே நுழைந்து பல கோயில்களை இடித்தன. இறை விக்கிரகங்களைச் சிதைத்தன. அப்போது தில்லை நடராஜப் பெருமானின் விக்கிரகத்தைக் காப்பாற்றுவதற்காக அதைத் திருவாரூர், குடுமியான்மலை மதுரை எனப் பல ஊர்களுக்கு மறைவாக, பத்திரமாக எடுத்துச் சென்றார்கள் தீட்சிதர்கள். இப்படிக் கட்டிக் காபந்து செய்ததில், குலகுரு முத்தைய தீட்சிதர் என்பவருக்குப் பெரும் பங்கு உண்டு. இந்தத் தகவல்களை திருவாரூர் கோயிலில் உள்ள மராட்டியர்களின் செப்பேட்டில் பார்க்கலாம்" என்கிறார் குடவாயில் பாலசுப்ரமணியன்.

அதேபோல், கோயிலைப் புனர் நிர்மாணம் செய்யும் பணியையும் எடுத்துச் செய்திருக்கிறார்கள் தீட்சிதர்கள். கோயில் திருப்பணிக்குக் கேரளாவில் இருந்து சிற்பிகளை வரச் செய்திருக்கிறார்கள். இதைத் தெரிவிக்கும் செப்பேடுகளும் திருவாரூரில் உள்ளன.

திருநீலகண்டர் கதை தெரியும் தானே! இளமையில் தவறு செய்ய, அதை அறிந்த மனைவி, "என்னைத் தீண்டாதே" என்று ஆவேசமாகச் சொல்ல, சிவனார் சிவனடியாராக வந்து, திருநீலகண்டரிடம் திருவோடு தந்து, "இதைப் பத்திரமாக வைத்திரு. நீராடிவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் செல்ல, அந்தத் திருவோடு மறைந்துவிட, "நீதான் திருடிவிட்டாய்" என்று சிவனடியாராக வந்த சிவனார் சண்டை இழுக்க, விஷயம் நீதிபதிகளிடம் வருகிறது. "நீலகண்டன் அப்படிச் செய்யமாட்டானே" என்கிறார்கள் நீதிபதிகள். பிறகு, கணவன், மனைவி இருவரும் திருக்குளத்தில் முங்கி எழ, இளமையுடன் வெளிவந்தார்கள் (சிதம்பரத்தில் இளமையாக்கினார் திருக்குளமும் கோயிலும் இன்றைக்கும் இருக்கிறது) சிவனருள் பெற்றார்கள் என்பதெல்லாம் தெரியும்தானே! அந்த நீதிபதிகள் வேறு யாருமல்ல, தில்லைவாழ் அந்தணர்கள்தான்.

அளித்தான் உலகெங்கும் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்து அருள்வெளிதானே!

என்று சிலாகித்துப் பாடுகிறார் திருமூலர்.

சிதம்பரத்தில் ஆடல்வல்லான் சிவனார் இருக்கிற கோயிலில், ஸ்ரீ திருமாலுக்கும் சந்நிதி உண்டு. "குலசேகர ஆழ்வார், நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில், பெருமாள் திருமொழியில், 742-ஆவது பாசுரத்தில்,

வந்து எதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி
வருகுருதி பொழிதரவன் கணையொன் றேவி
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து
வல்லரக்கர் உயிருண்ட மைந்தன் காண்மின்
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர் திருச்சித்திரக் கூடம் தன்னுள்
அந்தணர்கள் ஒரு மூவாயிரவரேத்த
அணிமணியா சனத்திருந்த வம்மான்றானே!

என மங்களாசாசனம் செய்தருள்கிறார்" என்கிறார் சுப்பராயலு.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் துணைப் பதிவாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற இவருக்கு வயது 71. "தில்லைவாழ் அந்தணர்" என்பது உள்ளிட்ட 35-க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியிருக்கிறார்.

தில்லையில், நடராஜர் கோயிலில் உள்ள திருமால் ஸ்ரீ கோவிந்தராஜ பெருமாளுக்கு தில்லை மூவாயிரத்தார் எனப்படும் தீட்சிதர்கள் பூஜை செய்து, வழிபட்டிருக்கிறார்கள் என்பதை திருமங்கை ஆழ்வாரும் தன் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மாவாயின் அங்கம் மதியாது கீறி
மழைமா முதுகுன் றெடுத்து ஆயர் தங்கள்
கோவாய் நிரை மேய்த்து உலகுண்ட மாயன்
குரைமா கழல் கூடும் குறிப்புடையீர்
மூவாயிர நான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரக் கூடம் சென்று சேர் மின்களே!

என்று நான்கு வேதங்களும் தெரிந்த, தில்லை மூவாயிரத்தார் நாள்தோறும் பெருமாளுக்குப் பூஜை செய்ததைச் சொல்லி, மங்களாசாசனம் செய்துள்ளார்.

தினமும் ஆறு காலப் பூஜைகள் இங்கே நடைபெறுகின்றன. ஆனாலும் முன்னதாக, தினமும் காலையில் பால் நைவேத்தியத்துடன் சிறப்பு பூஜை ஒன்று நடைபெறுகிறது. இரவு சாப்பிட்ட சிவனார் பசியுடன் இருப்பார் என்பதால், பால், வாழைப்பழம், பொரி, வெல்லச் சர்க்கரை, வெற்றிலை, பாக்கு என வைத்துப் பூஜை செய்வது வேறெங்கும் காணப்படாத ஒன்று.

அதேபோல், தமிழக ஆலயங்களில் 8 மணியில் இருந்து 9 மணிக்குள் அர்த்த ஜாம பூஜை நடை பெற்றுவிடும். பிறகு, நடை சாத்திவிடுவார்கள். ஆனால், சிதம்பரம் கோயிலில் தினமும் இரவு 10 மணிக்குத்தான் அர்த்தஜாம பூஜை நடைபெறுகிறது. அதாவது, சிவனாரின் ஆனந்த நடனத்தைத் தரிசிக்க, எல்லாக் கோயில்களில் இருந்தும் கடவுளர்கள் இங்கு வந்துவிடுவதாக ஐதீகம்!

பஞ்ச பூத தலங்களில் இந்தச் சிதம்பரம் கோயில், ஆகாசத் தலம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்! ஆகாசம் என்பது வெளி, வெற்றிடம். அதாவது, ஒன்றுமில்லாதது! இங்கே, ஆகாச ரூபமாக, அதாவது அரூபமாக இருந்தபடி அருள்பாலிக்கிறார் சிவனார்.

"ஸ்ரீ நடராஜரின் வலது பக்கத்தில் திரை ஒன்று இருக்கும். அந்தத் திரைக்குப் பின்னே உள்ள கற்சுவரில், தங்கத்தாலான வில்வ மாலை சார்த்தப்பட்டிருக்கும். ஸ்ரீ, சிவா என்கிற இரண்டு சம்மேளனச் சக்கரங்கள் அங்கே அமைந்திருப்பதைத் தரிசிக்கலாம் (ஸ்ரீ- அம்பாள் அதாவது சக்தி. சிவா என்பது இறைவன்). அதன் மேலே புனுகு, ஜவ்வாது ஆகியவை எப்போதோ சார்த்தப்பட்ட நிலையில், இன்றைக்கும் அப்படியே இருப்பதைப் பார்க்கலாம்" என்கிறார் வெங்கடேச தீட்சிதர். ஞானம் எனும் சக்தியை மாயை எனும் திரை மூடியிருக்கிறது. மனம் ஒருமுகப்பட்டு, மாயையை விலக்கிப் பார்த்தால், ஞானம் எனும் தெளிவைப் பெறலாம் என்பதே இதன் தத்துவம். இதுவே சிதம்பர ரகசியம்!

நம் உடம்பில் நடுநாயகமாக இருப்பது இதயம். அதாவது சபாநாயகம் இறை சக்தி. நான்கு வேதங்களும், ஆறு சாஸ்திரங்களும் இதயத்தைச் சுற்றியிருக்கும் உபகரணங்கள் போல, ஸ்வாமி சந்நிதியைச் சுற்றிலும் பத்து தூண்களாகத் திகழ்கின்றன. அதன்பிறகு உள்ள ஐந்து தூண்கள் பஞ்ச பூதங்களைக் குறிக்கின்றன. 18 புராணங்கள் 18 தூண்களாகவும், 28 ஆகமங்கள் மேலே உள்ள உத்தரங்களாகவும், 36 தத்துவங்கள் மேலே நடுநடுவே வருகிற சட்டங்களாகவும், 64 கலைகள் மேலே அனைத்தையும் தாங்குகிற மரங்களாகவும், 96 தத்துவங்கங்கள் ஜன்னல்களில் உள்ள 96 துளைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

சதா சர்வகாலமும் ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருக்கிறார் சிவனார். ஒவ்வொரு முறையும் பஞ்சாட்சர நாமத்தைச் (நமசிவாய) சொல்லிக்கொண்டே, மூச்சை உள்ளிழுத்து வெளியே விடுகிற தியானம் அல்லது தவத்தில் ஈடுபட ஈடுபட, அந்த ஆனந்த நடனத்தைத் தரிசிக்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும். பதஞ்சலி முனிவர் அருளிய யோகா சூத்திரம், இந்த ஆனந்த நடனத்தைத்தான் வலியுறுத்துகிறது!

வெங்கடேச தீட்சிதர் சொல்லச் சொல்ல, கோயிலும் அதன் பிரமாண்டமும் மனத்துள் விரிகிறது. அந்த பிரமாண்டத்தின் உள்ளே அணுவெனப் பொதிந்திருக்கும் விஷயங்களும் முக்கியமாக, சிதம்பர ரகசியமும் ஒன்றே ஒன்றைத்தான் வலியுறுத்துகின்றன.

"இங்கே எதுவுமில்லை! கர்வம், காமம், அலட்டல், அகங்காரம் என எதற்கும் இங்கே இடம் கிடையாது. ஒன்றுமில்லை. அமைதியாக ஆனந்தமாக வாழ, இதுவே சிறந்த வழி!"


தில்லை மூவாயிரம்பேர் என்று பெருங் கூட்டமாக இருந்த நிலை இப்போது இல்லை. தற்போதைய நிலவரப்படி சுமார் 299 தீட்சிதக் குடும்பங்களே உள்ளன.

நமக்கு போன்கால் வந்தால் எடுத்து "ஹலோ!" என்போம். "வணக்கம்" என்று சிலர் சொல்வார்கள். தில்லைவாழ் அந்தணர்களும் தில்லைவாழ் பெருமக்களும் போனை எடுக்கும்போதும், பேச்சை முடிக்கும்போதும் "திருச்சிற்றம்பலம்" என்கிறார்கள். "சிவசிதம்பரம்" என்கிறார்கள். தில்லைவாழ் அந்தணர்கள் "நடராஜர் இஷ்டம்", "நடராஜர் இஷ்டம்" என்று சகலத்தையும் அவன் பாதத்தில் சேர்த்து விடுகிறார்கள்.

ஆடல்வல்லானே இங்கே ஆட்ட நாயகன். நம்மை ஆட்டுவிப் பவனும் அவனே! அவனின்றி ஓர் அணுவும் அசையாது!

# ஆறுமுக நாவலர்

செல்வி இ.கிருபிகா,
உயர்தர வகுப்பு, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி



19ஆம் நூற்றாண்டிலே நமது நாடான இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்தது. அப்போது நாடெங்கினும் லௌகீகக் கல்வி ஊட்டும் கிறிஸ்துவப் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு நம்மவர் பலரை நன்னெறி ஒழுக்கம் விட்டுப் புன்னெறி அதனில் செலுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி வாய்ப்புப் பெற்று அரச பதவிகளையும், பிற சலுகைகளையும் பெறவிரும்பி நம்மவர் பலர் இப்பாடசாலைகளில் கல்வி கற்று மதம் மாறிப் பதவிகளையும் பெற்றனர். சைவமக்கள் மத்தியில் கிறிஸ்துவர்களின் இந்நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான தலைவர்களோ அன்றி ஏனைய அமைப்புக்களோ காணப்படவில்லை. அத்துடன் தமது கலாசாரத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தின் தாக்கத்தை உணராது உறங்கிக் கிடந்தனர் பலர். ஆனால் சில தூய உள்ளங்கள் செய்வதறியாது கடவுளின் கருணையை வேண்டி நின்றனர்.

இவ்வேளையில்தான் ஆறுமுகநாவலர் அவர்கள் நமது கலாசாரத்தின் காவலனாக 1822ஆம் ஆண்டு டிசெம்பர் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரில் கார்காத்த வேளாளர் குலத்தினரான கந்தருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் இளைய மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் ஆகும். கந்தர் அரச உத்தியோகத்தராகவும் கல்விமானாகவும் இருந்தமையால் ஆறுமுகம் தம் இளவயதிலேயே தமிழ் உணர்வு வாய்க்கப் பெற்றவரானார். இவர் பணி செய்தது சைவத்திற்கும் தமிழுக்கும் எனக்கூறலாம். அவரின் பணிகளால் தமிழ்மொழியும் இலங்கையும் நன்மையடைந்தன. எனவே அவரைத் தமிழுரைநடையின் தந்தை எனவும் தேசியவீரர் எனவும் கூறலாம்.

சைவ மறுமலர்ச்சிக்காக நாவலர் கையாண்ட வழிவகைகள் பல அவர் கிறிஸ்துவப் பாதிரியாரிடமிருந்தே அறிந்து கொண்டவையாகும். பல்லவர் காலத் தொடக்கத்திலே திருநாவுக்கரசர் சமணரிடம் பயின்று பின்பு சைவ மறுமலர்ச்சிக்கு பணியாற்றியதுபோல, சென்ற நூற்றாண்டிலே ஆறுமுகநாவலர் பணியாற்றினார்

நாவலரையும் சைவத்தையும் இணைத்துக் கூறும்போது, கிறிஸ்துவத்துக்கு எதிராகப் போராடி சைவத்துக்கு நாவலர் தலைமை தாங்கினார் என்று நினைப்பது பொதுவாக ஏற்படுகின்ற தவறு. சைவம் அக்காலத்தில் கிறிஸ்தவத்துக்கு எதிராகப் போராடவில்லை. சைவம் என்றும் ஒரு

தனியமைப்பு எதுவும் இருக்கவில்லை. குருக்கள்மார், கோயில் அதிகாரிகள், சைவப் பொதுமக்கள் என்போரின் ஒரு தொகுதியே நாவலர் காலச் சைவம். "யாழ்ப்பாணச் சமயநிலை", "நல்லூர்க் கந்தசாமி கோயில்" என்ற நாவலரின் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அவர்காலச் சைவ சமயத்தின் நிலையை உணரலாம். "முன்னோர் வழக்கம்" என்ற பெயரில் பரம்பரைச் சைவர்கள் சைவத்தின் அன்றைய இழிவு நிலையை உணராமலும் நீக்க முயலாமலும் வாழ்ந்தமையை நாவலர் கண்டித்திருக்கிறார். அவருடைய அக்கண்டனம் பாரதியாருடைய நடிப்புச் சுதேசிகளைக் கண்டிக்கும் பாடலோடு ஒப்பிடத்தக்கது.

பெரிய மனிதர்கள் பலர் பிற நாடுகளில் மதிப்புப் பெற்றபின்பே தாய் நாட்டில் மதிப்பைப் பெறுகிறார்கள். நாவலரை முதலில் மதித்தது தமிழ்நாடு. தமிழ்நாட்டிலே சைவத்தைப் பேணி வளர்க்கும் மடங்களும் ஆதீனங்களும் காணப்படுகின்றன. சைவப் பிரசாரகர் ஆறுமுகநாவலருக்கு "நாவலர்" என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது திருவாவடுதுறை ஆதீனமாகும். 18ஆம் நூற்றாண்டில் சிவஞான முனிவரை ஆதரித்த இந்த ஆதீனம் 19ஆம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலரைப் போற்றும் பேறு பெற்றது.

நாவலர் காலத்தில் கிறிஸ்துவ மதப்பிரசாரம் யாழ்ப்பாணத்தில் மிகத் தீவிரமாக நடைபெற்றிருந்தது. அப்பிரசாரமே நாவலர் மனதில் சைவசமய உணர்ச்சியை வளர்த்தது. நாவலரை உந்திய சக்தி கிறிஸ்துவ மதப் பிரசாரமே என்று துணிந்து கூறலாம். சைவர்களைப் பெருந்தொகையாக மதமாற்றம் செய்வதே கிறிஸ்துவப் பாதிரிமார்களின் நோக்கமாக இருந்தது. கிறிஸ்துவ மத நூலாகிய விவிலியத்தைக் கிறிஸ்துவர்களுக்கு மொழிபெயர்த்துக் கொடுத்தவர் ஆறுமுகநாவலராவார். அவர், கிறிஸ்துவர்கள் சைவசித்தாந்தத்தை உணராமல் யாழ்ப்பாணத்தில் சீரழிந்த நிலையிலிருந்த சைவசமயத்தின் நிலையைப் பிழையாக உணர்ந்தும், வேண்டுமென்றே திரித்துக் கூறியும் தமது மதத்தைக் பரப்புவதைக் கண்டார். சைவசித்தாந்த அறிவு சிறிதுமில்லாத பரம்பரைச் சைவர் பதில் கூற வகையறியாது வாய்மூடி மௌனிகளாக வாழ்வதையிட்டு மிகவும் மனம் வருந்தினார். சைவசமயத்தைப் பற்றிப் பாதிரிமார் கூறிய குறைபாடுகள் சைவத்தின் உயரிய தத்துவங்களுக்குப் பொருந்தாதெனவும் கிறிஸ்துவத்திற்கே அவை ஏற்புடையன எனவும் நாவலர் விவாதிக்கும் "சைவதூஷண பரிகாரம்" நாவலருடைய இரு சமய அறிவுக்குச் சான்று பகர்கின்றது.

நாவலர் தமிழகத்திலும் தமிழ் சைவப் பணிகளை ஆற்றியவர். இலங்கையிலும் தமிழகத்திலும் கிறிஸ்துவ சமயப் பண்பாட்டுத் தாக்கத்தினைக் குறிப்பிடத்தக்க வகையில் எதிர் கொண்டவர் எனலாம். இவருடைய செயற்பாடுகளினால் ஏற்பட்ட சைவசமயப் புத்துயிர்ப்பு, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டு, பின்னரே தமிழகத்திலும் ஏற்பட்டது. இவருடைய சைவசமயப் பணிகள், தமிழ்ப் பணிகள் நன்கு குறிப்பிடத்தக்கவை. "தமிழ் வசனநடை கைவந்த வல்லாளர்" என இவருடைய வசன நடையின் திறன் பாராட்டத்தக்கது. தமிழிலே தர்க்கரீதியிலான வாதங்களைத் திறம்பட நடத்தலாம் என்பதைத் தமிழுலகத்திற்கு உணர்த்தியவர் நாவலர். இவருடைய பேச்சுவன்மை, எழுத்துத் திறன் ஆகியன குறிப்பிடத்தக்கவை. சிறுவரும் ஏனையோரும் சமயத்தை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலே சைவ வினாவிடைகள், மதப் பிரசாரங்களைவிட, தமிழிலுள்ள பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் முதலியவற்றின் கதைகளை எளிமையான வசன நடையில் எழுதியுள்ளார். தமிழ்ப்புலமை பற்றிய இவரின் கட்டுரைகளும் மிகமுக்கியமானவை.

ஆகம முறையினாலான கோயில் வழிபாட்டினையும் கலைகளையும் வலியுறுத்திய நாவலர் இசைக்கலையிலே இயல்பான அறிவும் திருமுறைகளைப் பாடுவதில் ஈடுபாடும் உடையவராக

இருந்தார். அவர் தெய்வீகப் பண்ணிசையிலே நன்கு கவனம் செலுத்தினார். குறிப்பாகச் சைவத்திருமுறை இசையுடன் ஆலயங்களில் முறைப்படி இசைக்கப்பட வேண்டுமென்னும் நோக்கத்தடன் இந்தியாவில் இருந்து ஓதுவார்களை வரவழைத்து அவர்கள் மூலம் இவ் இசை ஆலயங்களில் இடம்பெறவும், இங்குள்ளவர்கள் இதனைக் கற்றுப் பயன்படுத்தவும் வழிவகுத்தார்.

நாவலரின் தேசாபிமானம், சமயாபிமானம் மட்டுமின்றி தமிழ்மக்களிடத்து மிகுந்த பற்றுள்ளவராகவும் அவர்களுக்கு நல்லுபதேசம் புகட்டவும் விரும்பினார் என்பதும் அதேவேளையிலே தமது உபதேசத்தை அவர்கள் மீது திணித்திலர் என்பதும் பின் வருவனவற்றால் புலப்படும்.

அதாவது "நம்மன்பர்களை நெடுங்கால அநுபவத்தால் அறிந்த உண்மைகளைத் தேசாபிமானத்தினாலும் சமயாபிமானத்தினாலும் உங்களுக்கு வெளிப்படுத்திய உங்களுக்கு நம்மைப் பகைவரெனக் கொண்டு தூஷித்துத் திரியாது மேலே பேசப்பட்ட குறைபாடுகளை விரைவில் அகற்றி உங்கள் இகபரலாபங்களை அடையும்படி முயலக்கடவீர். நம்மை நீங்கள் எப்படித் தூஷித்திடினும் உங்களுக்கு நன்மையாக முடிபவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துவதற்கு நாம் சிறிதும் தடைப்படாவண்ணம் சிவபெருமான் திருவருள் செய்க. பொதுப்படப் பலருக்கும் நன்மைகளைச் சொன்னோம். திருந்த விருப்பமில்லாதவர்கள் தமக்கு பயன்படாதாயினும் பிறர் சிலருக்காயினும் பயன்படலாமே என்றெண்ணி வாய்மூடிக் கொண்டிருக்கட்டும்" என்பது அவர் கூற்று. "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஒழிமின்" என்பதாகும் எனச் சங்ககாலப் புலவர் பெருமான் கூறியுள்ள கருத்தும் இங்கே காணப்படுகிறது.

நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் வெஸ்லியன் மிஷனறிமார் உருவாக்கிய தலைமைக் கல்லூரியிற் கற்றுப் பட்டம் பெற்றவர். அக்கல்லூரியிலேயே ஆங்கிலமும் தமிழும் போதிக்கும் ஆசிரியராக நியமிக்கப் பெற்றவர். வெஸ்லியன் மிஷனின் தலைமைக்குருவான பீற்றர் பேர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப்பண்டிதர்; கிறிஸ்துவக் கீர்த்தனைகளையும் வேறு வழிபாட்டு நூல்களையும் உருவாக்குவதற்கு உதவி புரிந்தார். பாதிரியார் உருவாக்கிய விவிலியத் தமிழ் நூலைச் செம்மைப்படுத்தி சென்னையிலே அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தவர் நாவலர். இதனால் இந்த நூல் ஆறுமுகமுநாவலரின் மொழிபெயர்ப்பு என்று வழங்கப்படுகின்றது. இவ்வாறான பணிகளைச் செய்த காலத்தில் சைவசமயத்தின் மீதான தனது நம்பிக்கையை அவர் எள்ளளவும் கைவிடவில்லை. அச்சமயத்திற்கு மூலமான நூல்களைப் படிப்பதிலும் புண்ணிய ஷேத்திரங்களைத் தரிசிப்பதிலும் ஈடுபட்டார்.

நாவலரவர்களுடைய வரலாற்றில் சிறப்பிடம் பெறும் அம்சங்களிலே முன்வருவது வித்தியா தருமம் ஆகும். முன்பு பௌத்தரும் சைனரும் சமகாலத்தில் கிறிஸ்துவரும் கல்வியைச் சமயப் பரம்பலுக்கு சிறப்பாகப் பயன்படுத்தியதை நாவலரவர்கள் அறியாதில்லை. நாவலரவர்களின் வித்தியா தருமத்தின் மூலவேராகக் கருதத்தக்கது அவர் தோற்றுவித்த திண்ணைப் பள்ளிகளாகும். விசுவாவசு வருடம்(1846) தை மாதம் காலையிலும் இரவு நேரங்களிலும் சைவசமயப் பிள்ளைகளைச் சேர்த்து வேதனங்கள் பெறாது இலவசமாகக் கற்பிக்கத் தொடங்கினார். திண்ணைப்பள்ளிகள் அக்காலத்திலே நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வந்தபோதும் இத் திண்ணைப்பள்ளிகள் மூலம் தான் செயற்படுத்தத் திட்டமிட்டிருந்த திட்டத்திற்கு அத்திவாரமாக இப்பள்ளிகள் வெற்றிகரமாக இயங்கியமை அவருக்குப் பெரும் ஊக்கத்தை தந்ததெனலாம். ஓய்வு ஒழிதலின்றி தம் ஆசிரியர்கள் வழங்கிய

வித்தியா தானத்தையும், அதனைச் சுயலாபம் கருதாது செய்தமையையும் உணர்ந்த மாணாக்கர்கள், ஆசிரியரின் இலட்சியப் பாதையிலே செல்ல ஆயத்தமாயினர். தம் முன்னோடித் திட்டம் அளித்த வெற்றியினைக் கண்ட நாவலரவர்கள் திண்ணைப்பள்ளி தொடங்கிய 32ஆம் மாதத்திலே கீலக வருடம் ஆவணிமாதம் ஐந்தாம் திகதி(1848) வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஸ்தாபித்தார்.

சைவப்பிரகாச வித்தியாசாலை நல்லமுறையில் செயற்படத் தொடங்கியதை அடுத்து நாவலரவர்கள் தம் வித்தியா திட்டத்தினை மேலும் விரிவாக்க எண்ணி, தமிழ் நாடெங்கும் சைவசமயம் வளர்ந்தோங்குவதற்கு ஏதுவாக சிதம்பர ஸ்தலத்திலே தாபிக்கப்படும் சைவப்பிரகாச வித்தியாசாலை குறித்துப் பிரசுரித்த, மகிமை பொருந்திய சைவசமையிகளுக்கு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் எழுதிய விஞ்ஞாபனம் ரௌத்திரி வருடம் வைகாசி மாதம் திகதி(1860) சென்னையிலே வெளிவந்தது. ரத்தாட்சி வருடம் ஐப்பசி மாதம் 28ஆம் திகதி(1864) சிதம்பரத்திலே சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவப்பெற்றது.

யாழ்ப்பாணத்திலே நாவலரவர்கள் வித்தியாநுபாலன இயந்திரசாலை என்ற பெயரிலே அச்சகம் ஒன்றை நிறுவினார். இவ்வச்சகமே ஈழத்திலே சைவத் தமிழர் நிறுவிய முதல் அச்சியந்திரசாலை என்பது குறிப்பிடத்தக்கது. 1870களிலே சென்னையிலும் வித்தியாநுபால இயந்திரசாலை என்ற பெயருடன் இரண்டாவது அச்சியந்திரசாலை நிறுவப்பட்டது. .வித்தியாசாலைக் கல்விக்கும் சைவப் பிரசாரத்திற்கும் நாவலவர்களுக்கு அச்சியந்திரம் பேருதவியாக அமைந்தது.

வசன நடையின் தந்தை எனன நாவலர் பெருமானைக் கூறுதல் தகும். அவரது தமிழ் நடை ஆற்றொழுக்குப் போன்றது. தமிழ் மரபு கடவாதது. தெளிவும் இனிமையும் பொருட்செறிவும் உடையது. குறியீடுகளை முதன்முதலில் வசன நடையில் புகுத்திய முதலுரிமை நாவலருக்கே உரியதாகும் நாவலர் பெருமானுக்குப் புராணத்திலே பெரியதோர் பற்றுண்டு. அதில் பரிபூரண நம்பிக்கையுமுண்டு.

நாவலர் பதிப்புகளில் ஒரு தனிச்சிறப்பைக் காணலாம் அங்கே பாட பேதங்கள். பிழை திருத்த அநுபந்தங்களைக் காணமுடியாது. இத்தகைய பதிப்புத் திறமை நாவலருக்கு அமைந்ததுபோல் வேறொருவருக்கும் வாய்த்ததில்லை.

குருக்கள்மாரின் கிரியை சார்ந்த அறியாமை நீங்க வேண்டுமெனவும் கோயில் பரிபாலகர்கள் ஒழுக்கசீலர்களாக மிளிர வேண்டுமெனவும் சைவப் பெருமக்கள் சிறந்த சமய அறிவுடையவராகத் திகழ வேண்டுமெனவும் விரும்பிய நாவலர் இம் முத்திறத்தாரிடையே நிலவிய குறைகளைக் களையும் நோக்கில் அவர்களைக் கண்டிக்கவும் தவறவில்லை.

கோயில்கள் ஆகம முறைப்படி அமைய வேண்டுமென்றும், அங்கு வேத பாராயணமும் தேவார திருவாசக பாராயணமும் சைவப் பிரசங்கங்களும் நிகழ வேண்டும் என்றும் நாவலர் வற்புறுத்தினார். சமுதாய வாழ்வினை ஆற்றுப்படுத்தும் கோயில்களிலே பொதுப் பெண்கள் நடனம், வாணவிளையாட்டு, சிற்றின்பப் பாடல்கள், உயிர்ப்பலி போன்றவை இடம்பெறுவதை நாவலர் பெரிதும் கண்டித்தார். திருவிழாக் காலங்களில் ஒழுக்கச் சீர்கேடுகள் தவிர்க்கப்படுவதை நாவலர் விரும்பினார். கோயில் ஒழுங்கு அனைவராலும் உறுதியாகப் பேணப்படுவதை நாவலர் விரும்பினார். சுருங்கக் கூறின் சமய நம்பிக்கைக்கு முதன்மை தராத விடயங்களை நாவலர் சீர்திருத்த முனைந்தார். பிற மதத்தவரின் தாக்குதலினால் சிதைவடைந்து காணப்பட்ட கோயில்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமெனவும் நாவலர் எடுத்துக்கூறினார்.

தமிழகத்திலும் இப்பிரசாரத்தை மேற்கொள்ள அவர் தவறவில்லை. சைவசாஸ்திர பிரமாணங்களைக் காட்டி அவர் திருப்பணியின் மேன்மையையும் பயன்களையும் பிரசாரங்களின் மூலம் எடுத்துக் கூறினார். பொது மக்களுக்கு சைவசமய உண்மைகளை எடுத்துரைக்கும் சைவப் பிரசாரகர்கள் உருவாக வேண்டுமென நாவலர் வற்புறுத்தினார்.

சைவசமயத்தினர் மதம் மாறுவதை நாவலர் கண்டித்தார். சம்பளம், சிபாரிசு, பொருள், உத்தியோகம் முதலியவற்றின் பொருட்டு மதம் மாறியவர்களை நாவலர் எதிர்த்ததன் மூலம் சமயத்தின் பாதுகாவலனாகத் திகழ்ந்தார். புறச்சமயப் பரவலைத் தடுக்க வேண்டியது அவசியம் என உணரப்பட்ட காலத்தில் சமய ஒழுக்கச் சிறப்புக்கு நாவலர் முதன்மை அளித்தார். சைவசமய மறுமலர்ச்சியில் நாவலர் தம்மை இணைத்துக் கொள்வதற்கு அனுசரணையாக அமைந்தது அவரது கடமை உணர்ச்சியும் அர்ப்பணிப்புமாகும். நாவலர் தமக்கென வாழாது தமிழுக்கும் சைவசமயத்திற்குமாக வாழ்ந்தவர்.

நாவலர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் உலோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தமை அவரது சமய மறுமலர்ச்சிச் செயற்பாட்டில் மற்றொரு சிறப்பம்சமாகும். தமிழிலே கட்டுரை என்பது நாவலரால் நல்ல முறையில் எழுதப்பட்டது. சிறந்த உரைநடையைக் கையாண்டாவர்; சைவ ஆங்கிலப் பாடசாலையை முதன்முதலில் ஆரம்பித்தவர்; பிற மத தூஷணங்களுக்குத் தகுந்த பரிகாரம் கண்டவர்; சமய நூல்களைப் பதிப்பித்தவர். இத்தகைய நற்பணிகளால் நாவலர் தமது காலத்தில் பழமையில் அமிழ்ந்து போகாமலும் புதுமையில் அடிபட்டுப் போகாமலும் இரண்டையும் உரியவாறு இனங்கண்டு தனக்கென ஒரு வெற்றிப் பாதையை வகுத்தமையினால் பலராலும் நன்கு மதித்துப் போற்றப்பட்டவர். சென்னை முதல் ஈழம் ஈறாகவுள்ள வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர் என நாவலரைத் தத்துவ விசாரணை பத்திராதிபர் வர்ணித்துள்ளமை வெறும் புகழ்ச்சியன்று; முற்றிலும் உண்மையே.

சைவ சமூக புனருத்தாரண சீலராய் வாழ்ந்த நாவலர் தமது வாழ்வின் இறுதியில் 1879 ஆண்டில் தமிழ் மக்களின் அபிலாசைகளை அரசாங்க சபையில் பிரதிநிதித்துவம் செய்யத் தகுதி வாய்ந்தவர் சேர் பொன். இராமநாதனே என்று கூறி, இவரைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் சட்டசபைக்கு சிபாரிசு செய்து அத்துறையிற் பெரும் பணியாற்றினார். நாவலரின் இலட்சியத்தை சிறப்பாக ஒப்பேற்றிய பெருமைக்குரியவர் சேர் பொன் இராமநாதன் ஆவார். நாவலர் தமது சமயப் பிரசாரங்களைத் தமிழகத்தோடு மட்டும் மட்டுப்படுத்தினார். சேர் பொன். இராமநாதன் அவர்கள் மேற்கு நாடுகள் வரை அதனை விஸ்தரித்து வெற்றியும் கண்டார். சமயத்திற்காக தான் தேடிய சொத்தின் பெரும்பகுதியை நாவலர் செலவிட்டார்.

நாவலரின் சமயப் பணிகளே இவரை ஐந்தாவது குரவர் எனக்கொள்ள வைக்கின்றன. இவர் சிவபதம் அடைந்தபோது இவர் பணியை மெச்சி சி.வை.தாமோதரம்பிள்ளை "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே" என்று பாட்டிசைத்து நாவலர் பணியின் அருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொண்டார். இது முழுக்க முழுக்க உண்மையாகும் உண்மையிலே நமது ஈழத்துச் சமுதாயத்தில் தோன்றிய முதல் இயக்கவாதி எமது நாவலர் என்றால் மிகையாகாது.

**முழுமையான ஆன்மிகஞானம் பெற்றுவிட்டபின் யாரும் பெருமைப்படக்கூடாது.**
**ஞானம் என்பது படிப்படியாக அநுபவத்தால் உண்டாவதாகும்.**
**அநுபவத்தால் ஞானம் பெற்றவன் செய்யும் செயல்கள் யாவும் உயர்வடைகின்றன.**
**Dr S இராதாகிருஷ்ணன்.**

# சிந்தனையின் பரிமாணங்களும் பரிணாமமும்

## கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

ஊக்கம் என்பதை உயர்வு நோக்கிய முயற்சிக்கான மனவெழுச்சி எனப் பொருள் கொள்ளலாம். முன்னேற்றத்தை விரும்பும் எல்லோருக்கும் ஊக்கம் இன்றியமையாதது. இவ்வூக்கத்துக்கு அடித்தளமாக அமைவது உயர்ந்த சிந்தனைகள். பண்பட்ட உயர்ந்த சிந்தனைகளை எழுத்து வடிவமாக்கி வெளிக்கொணர்வன சஞ்சிகைகள். இந்தவகையில் சைவசமயக் கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் எழுத்து வடிவமாக்கிக் கொணரும் "கலசம்" சஞ்சிகை நூறாவது முறை மலரும் இவ்வேளையில் கலசத்துக்கும் அதன் ஆசிரியர் குழுவுக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துவிட்டு தொடர்ந்து சிந்தனைபற்றி ஆராய்வோம்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றையது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

- திருக்குறள்

தாம் செய்வதற்காகச் சிந்திக்கும் கருமங்கள் எல்லாம் மேம்படு கருமங்களாகச் சிந்திக்க வேண்டும். அக்கருமத்தினால் அவ்வுயர்வை அடைய முடியாமல் போனாலுங்கூட அது அவ்வுயர்வை எய்திய தன்மையை ஒக்கும் என்பது இக்குறளின் பொருள். உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக் கொள்வோம். ஒரு நகரத்தின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் கோரப்பட்டால் பலரும் நல்ல திட்டங்களையே சமர்ப்பிப்பர். இவற்றிலே ஒரு சமர்ப்பணமே தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஏனையவையும் நல்ல திட்டங்களாகவே கருதப்படும். அவை எல்லாமே மேம்படு கருமங்களாகச் சிந்திக்கப்பட்டமையே இதற்கான காரணம்.

சிந்தனையின் பரிமாணங்களை அறிய இன்பம் என்ற சொல்லைக் கருத்தில் கொள்வோம். இச்சொல்லைக் கேட்டவுடன் ஒரு நடன நுணுக்கங்களைத் தெரிந்தவர் நடனத்தை நினைக்கின்றார். மது உண்பவர் மதுவை நினைக்கின்றார். ஒரு குத்துச்சண்டை வீரர் எதிர்வீரரை வீழ்த்தும் நிகழ்வை நினைக்கிறார். இந்தவிதமான பல கருத்துக்களை, உயர்ந்த கருத்துக்களைக் கொண்டிருப்பது சிந்தனையின் பல உயர் பரிமாணங்கள். சைவசமயப் பெரியார்களின் படைப்புகள் இவ்வாறான பல உயர் பரிமாணங்களைக் கொண்டிருக்கும். இப்பரிமாணங்களைக் கண்டறிந்து நம்முடைய நுகர்வுக்கு கொண்டு வருவன "கலசம்" போன்ற சஞ்சிகைகள். பல திறத்தவரும் தத்தமக்கேற்புடைய நூல்களில் அவற்றின் நயம் கண்டு இன்புறுவது இயற்கை. ஆனால் பலதிறத்தவராலும் நயம் காணும் வகையில் ஒரு நூலைப் படைக்க அறிஞர்களாலேயே முடியும். அந்தணர், யோகியர், இன்பம் நுகர்வோர், தர்க்கிகள், இயற்புலவர் எனப் பலதரப்பட்டவராலும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார் சிலாகிக்கப் படுகிறது எனப் பின்வரும் செய்யுள் சொல்கிறது.

ஆரணம் காண்என்பர் அந்தணர்
யோகியர் ஆகமத்தின்
காரணம் காண்என்பர் காமுகர்
காமநன்னூல் என்பர்
ஏரணம் காண்என்பர் எண்ணர்
எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக்
கோவையைச் செப்பிடினே."

இவ்வாறான திருக்கோவையார் போன்ற பலபடைப்புகள் சைவசமயத்தில் உள்ளன. இந்தப் பலபரிமாணங்களைக் கொண்ட நூல்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுக்கும்.

இனி, சிந்தனையின் பரிணாமம், எவ்வாறு நடைபெறுகிறது எனப் பார்ப்போம்.

கற்றறிவாளர் கருதிய காலத்துக்
கற்றறிவாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறிவாளர் கருதி உரை செய்யுங்
கற்றறிகாட்டக் கயலுள வாக்குமே!

திருமந்திரம் 291

கற்றறிந்தோர் சிந்திக்கும்பொழுது அவர்களின் சிந்தனையில் ஒரு கண்ணுருவாகியிருக்கும். அவர்கள் சிந்தித்து உரைக்கும்போது, அவர்களின் அறிவானது காட்ட அக்கண் அதற்குச் சமீபமாக உள்ளவற்றைத் தெளிவாக்கும். சமகால விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் இதையே செய்கின்றனர். ஒரு விடயம் சம்பந்தமாகத் தெளிவான விடயங்களைக் கற்றறிந்த பின் சிந்தனையினால் தெரிந்த விடயங்களுக்குச் சமீபமாக உள்ள தெரியாத விடயங்களை விளக்குகின்றனர். இவ்விளக்கங்கள் பின்னர் பரிசோதனைகள் மூலம் உறுதி செய்யப்படுகின்றன. சிந்தனையே அறிவை வளர்க்கிறது. சிந்திக்கும் பொழுது மாத்திரமே சிந்தனையிலே கண் இருக்கிறது.

இவ்வாறாகப் பார்க்கும் போது சிந்தனையின் வளர்ச்சிக்குச் சிந்தனையே கருவி என்பதும் பல பரிமாணங்களை உள்ளடக்கிய சிந்தனைகளே உயர்ந்த சிந்தனைகள் என்பதும் புலனாகின்றன. சமயம் ஆன்ம ஈடேற்றத்துக்கான மார்க்கம். இதனால் சமயசிந்தனைகள் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாதனவாகின்றன. சைவசமயத்திலே பல உயர்ந்த சிந்தனைகள் புராணங்களாகவும், திருமுறைகளாகவம் இருக்கின்றன. அவற்றிலே தேர்ந்தெடுத்தவற்றை கலசம் சஞ்சிகை எமக்குத் தருகின்றது. அவற்றை அத்திவாரமாகக் கொண்டு உயர்ந்த சிந்தனைகளை வளர்த்து ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.

## ஞானம் தரும் புதிய பார்வை

**தன்னைப் புரிந்துகொள்வதும் உணர்வதும் மிகப்பெரிய ஞானமாகும். கிரேக்க ஞானி சாக்கிரட்டீஸ் உட்பட பல பேரறிவாளர்களும் இதைக் கூறியிருக்கிறார்கள். புத்தரும் மகாவீரரும் இவ்வாறே முழு ஞானத்தைப் பெற்றவர்கள். அறியாமையைப் போக்கி, அறிவும் அநுபவமும் சேர்ந்து கிடைப்பதே ஞானம் என்றும் சாத்திர நூல்கள் விளக்குகின்றன.**

**ஒருவனை, பெற்ற ஞானத்தால் உலகையே புதிய நோக்கில் பார்க்கத் தூண்டும். அவனுள் புத்துணர்ச்சி பெருகும். அவன் புதுப் பிறவி எடுத்து, புது மனிதனாக உலவுவான். ஞானக்கண் மனிதனை உள்முகமாகப் பார்க்கத் தூண்டும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.**

**Dr S இராதாகிருஷ்ணன்.**

# "ஒப்புரவுக்கு ஒல்கா" மரம்



போரொன்று வந்ததுவே நாட்டில் அதனால்
பொதுசனங்கள் பலருமதில் அழிந்து போனார்
கார்முகில்கள் சூழ்ந்ததனால் பொழியும் மழைபோல்
கடகடெனக் குண்டுமழை பொழிந்த தாலே
வேருடனே பலமரங்கள் சாய்ந்து போக
வெகுவாகப் பலவயல்கள் அழிந்து போக
யாருடைய புண்ணியமோ குண்டு வீழ்ந்தும்
என்னுயிரை மட்டுமது வீழ்த்திற் றன்று.

என்தலையும் போனதினி என்ன செய்வேன்
என்றுநான் கவலையே கொண்ட தில்லை
நின்றுலகின் மீதினிலே நிதமும் நீங்கள்
தின்றிடநற் சுவையான பழங்கள் தந்தேன்
மென்றதன்பின் நீர்போடும் விதைகள் எல்லாம்
கன்றுபல ஆகிப்பின் பழங்கள் நல்கும்
நன்றிதுவென் றும்மக்கள் அவர்தம் மக்கள்
என்றென்றும் மகிழநான் பார்த்து நிற்பேன்.

தன்னிலைமை தாழ்ந்தாலும் பெரியோ ரென்றும்
தங்கடமை செய்வதற்குத் தயங்க மாட்டார்
என்றதனைச் சொல்வதற்குத் தானோ இறைவன்
என்தலையை எடுத்துமெனை வாழ வைத்தான்
என்னகுறை வாழ்க்கையிலே வந்திட் டாலும்
என்னைப்போல் பயன்தருவீர் மக்கள் நல்லீர்
சொன்னதொரு மரந்தானே என்றெள் ளாமல்
தொண்டுகளைத் தவறாமல் தொடர்ந்து செய்வீர்.

**- ஞாலக்கோன் -**

# "கற்பூரம்" காட்டி "ஆசீர்" சொல்லக் கூடாதா?

## சொல்லாராய்ச்சி

வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, இலண்டன்

ஆய்வுக் கட்டுரைகள் சிலவற்றை உள்ளடக்கிய நோக்கு என்ற ஒரு நூல் சென்ற ஆண்டு எனக்குக் கிடைத்தது. அதில், "தாய்மொழி பேணாத தமிழர்கள்" என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரை ஒன்று என் கவனத்தை ஈர்த்தது. அதில், "கத்தோலிக்க அன்பர்கள் சிலகாலமாக, இறை ஆசீர் வேண்டுகிறோம்" என்று எழுதி வருகிறார்கள். 'ஆசீர்' என்றொரு சொல் இல்லை; 'ஆசி' அல்லது 'ஆசீர்வாதம்' என்பவற்றில் ஒன்றையே தெரிவு செய்ய வேண்டும்" என்று நூலாசிரியர் எழுதியிருந்தார். அவர்களின் கூற்றின் குற்றநற்றம் பற்றி ஆய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம். ஆசி, ஆசீர்வாதம் என்ற இரண்டுமே வடமொழியிலிருந்து பெறப்பட்ட சொற்கள் அதாவது 'ஆசிஸ்' என்ற சமக்கிருதச் சொல்லிலிருந்து பெறப்பட்ட சொற்கள். ஆசி என்பது ஆசிஸ் என்ற சொல்லிலிருந்து சுருக்கப்பட்ட சொல். ஆசிஸ் என்ற சொல் தமிழாக்கம் பெறும்போது 'ஆசிடை' என்று வழங்குதலும் உண்டு. ஆயுஸ் என்ற வடசொல் 'ஆயுர்' என்று தமிழில் வழங்குவது போல, ஆசீர்வாதம் என்பது 'ஆசீஸ்வாத' என்ற வடமொழியிலிருந்து தமிழாக்கப்பட்ட சொல். 'ஆசீஸ்வாத' என்ற வடமொழிச் சொல் தனிச்சொல் அன்று. அது ஒரு கூட்டுச் சொல் 'ஆசீஸ்' என்ற சொல்லும், 'வாத' என்ற சொல்லும் புணர்ந்து விளைந்த கூட்டுச் சொல். 'வாத' என்றால் வடமொழியில் உரைத்தல், கூறுதல் என்று பொருள். இதுவே தமிழ் மொழியில் 'வாதம்' என்று ஆயிற்று. வாதம் என்றால் Utterance சொல், என்று சென்னைத் தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகின்றது. சேக்கிழாரின் பெரியபுராணத்தில் ஞானசம்பந்தர் பற்றிய 911ஆம் பாடல் :-

"அஞ்சியகன் றோடியவப் புத்தர் எல்லாம்
அதிசயித்து மீண்டுமுடன் அணைந்து கூடி"

என்று தொடங்குகின்றது. இப்பாடலின் மூன்றாமடி

"எஞ்சலின் மந்திரவாதம் அன்றி மெய்யோ"

என்று தொடர்கின்றது. இந்த அடியில் 'வாதம்' என்பது உரைப்பு, சொல்லல் என்னும் பொருளது. மந்திரவாதம் என்ற கூட்டுச்சொல்லில் வரும் 'வாதம்' என்பதும் இதே பொருளதே. மந்திரவாதம் என்றால் Uttering Mantras என்பது பொருள் அதாவது மந்திரம் செபிக்கை. இவ்வாறு மந்திரம் சொல்பவனுக்கு, மந்திரம் உரைப்பவனுக்கு மந்திரவாதி என்பது சமக்கிருதப் பெயர் இதுவே தமிழும் ஆயிற்று.

'ஆசீர்' என்ற வாழ்த்தை உரைக்கும் செயலுக்கு ஆசீர்வாதம் என்று பெயர் அந்தப் பெயர்ச் சொல்லிலிருந்து பிறந்ததுதான் 'ஆசீர்வதி' என்ற வினைச்சொல். சுன்னாகம் தந்த குமாரசாமிப்புலவர் "இலக்கண சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம்" என்ற ஒரு நூலையும் செய்தவர். 'வாதம்' என்னும் சொல், உரைத்தல் என்று பொருள் தரும் என்பதற்கு உதாரணங்களாக :-

1. அபவாதம் - நிந்தை சொல்லுதல்
2. பரிவாதம் - புறங்கூறல்
3. சம்வாதம் - நிகழ்ச்சி கூறுதல்
4. பிரதிவாதம் - மறுமொழிக்கூற்று

5. பிரவாதம் - அறிவித்தல்
6. உபவாதம் - வெளிப்பாடு செய்தல்

ஆகிய சொற்களை இலக்கண சந்திரிகைப் பகுதியில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதுவரை, ஆசீர் என்ற சொல்பற்றி இலக்கண ஆராய்ச்சி செய்தோம். இனி, ஆசீர் என்ற சொல்லுக்கு இலக்கிய ஆட்சி உண்டா என்று பார்ப்போம். வீரசோழியம் என்ற இலக்கண நூல் புத்தமித்திரர் எனப்பெயரிய தமிழ்ப் பவுத்த அறிஞர் ஒருவரால் ஆக்கப்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில், பல வடசொற்கள், தமிழில் நுழைந்துவிட்டதாலும், தமிழ்ச் சொற்கள் பல சிதைவடைந்து, சாதாரணர் மத்தியில் பெருவழக்குப் பெற்றுவிட்டதாலும், அத்தகைய சொற்கள் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுவிட்டதாலும் அவற்றுக்கு மதிப்பளித்து ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வடமொழி இலக்கணத்தை ஒட்டி வரையப்பட்ட இலக்கண நூல்தான் வீரசோழியம். இதில் அலங்காரப்படலம் (அணிப்படலம்) என்று ஒரு பகுதி உண்டு. வீரசோழியத்தின் 173ஆம் சூத்திரம் "ஒருங்கியல், பரிமாற்றம், ஆசி, என்னும் அலங்காரங்கள்" என்ற தலைப்பில் அமைந்திருக்கிறது. அந்தச் சூத்திரம் வருமாறு :-

"துப்பார் ஒருங்கியல் தூயவினை பண்பிரண்டு பொருட்கு
ஒப்பா ஒருசொல்லு வைப்பதுயர் பரிமாற்றமது
செப்பார் பொருள்மாறிடல் திகழாசியின் சீர்மைசொலின்
தப்பாத ஆசீர்வசனம் எனகுணர் தாழ்குழலே?"


என்பது அந்தச் சூத்திரம்.

மேற்படி சூத்திரத்தில் 'ஆசீர்' என்னும் சொல் தனிச் சொல்லாகப் பயிலப்பட்டிருக்கின்றது.

"ஆசியின் சீர்மை சொலின் தப்பாத ஆசீர் வசனம் என உணர்"

என்று முடிகிறது சூத்திரம். மேற்படி அடிக்கு உரை எழுதிய ஆசிரியர், ஆசி என்னும் அலங்காரம் ஆசீர் வசனம் சொல்லுதலாம் என்று எழுதிச் செல்கிறார்.

Johann Philip Fabricius என்ற யேர்மானியார் 1897இல் "தமிழ் - ஆங்கிலம் அகராதி" எனப் பெயரிய அகராதி ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்த அகராதி பிற்றைக்காலத்தில் பல தடவைகள் மீள் அச்சிடப்பட்டது. 1989இல் Asian Educational Services என்ற நிறுவனத்தினர் இதனை மீளப் பதிப்பித்தனர். அவர்களின் நான்காவது பதிப்பு 2006ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அந்தப் பதிப்பின் 39ஆம் பக்கத்தில் 'ஆசீர்' என்ற சொல் காணப்படுகின்றது. அந்தச் சொல்லை விளக்கும் போது Blessing என்று விளக்கம் தருகிறது.



ஆசீர்வாதம் என்ற சொல்லையும் அது தந்து, பின்வருமாறு விளக்கம் தருகிறது. "ஆசீர் வசனம் (ஆசீர்) Blessing; Congratulation, மங்களம்" என்று விளக்கம் தருகின்றது. அதாவது ஆசீர்வாதம் என்றாலும், ஆசீர்வசனம் என்றாலும், ஆசீர் என்றாலும் ஒன்றேயென்று அது விளக்கம் தருகின்றது.

கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பாரிய முயற்சியே எனினும், பெரிதாக நான் போற்றுவதில்லை. இருந்தாலும் அந்த அகராதி அதன் 2008ஆம் ஆண்டின் பதிப்பின் 98ஆம் பக்கத்தில் 'ஆசீர்' என்ற சொல்லைத் தருகின்றது. அவ்வாறு தருகின்ற அந்த அகராதி, 'ஆசீர்' என்ற சொல் இலங்கைச் சொல் என்று குறிக்கின்றது. அவர்களின் ஆராய்ச்சி இன்மையால் ஏற்பட்ட தவறு இது. ஆனால் ஆசீர் என்ற ஒரு சொல் இருக்கின்றது என்பதை அந்த அகராதி ஏற்றுக் கொண்டிருக்கிறது

என்பதுதான் இங்கே முக்கியம். இதுகாறும் கூறியவற்றால் 'ஆசீர்' என்ற ஒரு சொல் உண்டு என்பதும், அந்தச் சொல்லுக்கு இலக்கிய ஆட்சி உண்டென்பதும் அது நூறாண்டுகட்கு முற்பட்ட தமிழகராதியில் ஏறிவிட்டது என்பதும், பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரசோழியம் என்ற இலக்கண நூல், அப்படியொரு தமிழ்ச்சொல் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்பதும் இதனால் துலக்கம் பெறும். இனி, நூலாசிரியர் அவர்கள் குறித்திருந்த கற்பூர - கர்ப்பூரச் சிக்கல் பற்றி நோக்குவோம்.

கர்ப்பூரம் (கற்பூரம்) என்பதன் ஆங்கில வடிவம் Camphor என்பது. இன்றைய ஆங்கிலச் சொல்லான Camphor என்பது. அரேபியச் சொல் என்றும் "Kāfūr" என்றொலிக்கும் அரேபியச் சொல்லானது, உரோமாபுரிக்குள் நுழைந்து, இலத்தீன் மொழியில் "Camphora" என்று ஒலிமாறிற்று என்றும் பின்னர் இலத்தீனின் வழிமொழியாகிய பிரெஞ்சு மொழிக்குள் போய், "Camphre" என்று பெயர் மாற்றம் பெற்றதென்றும் அதன் பின்னர் ஆங்கில மொழிக்குள் புகுந்து "Camphor" எனப்படலாயிற்று என்றும், The Chambers Dictionary விளக்கம் தருகின்றது. Taiwan நாட்டில் வளருகின்ற கறுவாப்பட்டை மரத்தையொத்த ஒரு மரத்திலிருந்து பெறப்படும் நெய்யிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு திண்மம் என்றும், ஈயோட்டியாகவும், வாசனைப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்ற ஒன்று என்றும், அதே அகராதி கூறுகின்றது.

Camphor என்ற ஆங்கிலச் சொல் குறிக்கின்ற பொருள் அரேபிய மொழியில் KAFUR எனப்பட்டதென்றும், பிராகிருத மொழியில் KAPPŪRAM (கப்பூரம்) எனப்பட்டதென்றும், பின்னர் சமக்கிருதத்தில் KARPŪRAM எனப்பட்டதென்றும், The Shorter Oxford Dictionary விளக்கிச் சொல்கிறது.

மேற்படி பிராகிருத மொழி ஒலிப்பையும் சமக்கிருத மொழி ஒலிப்பையும் பார்க்கின்ற போது, இந்த வாசைனப் பொருளைக் 'கப்பூரம்' என்றும் 'கற்பூரம்' என்றும் முறையே பிராகிருதத்திலும் சமக்கிருதத்திலும் ஒலித்தார்கள் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

இனி, மேற்படி கற்பூரம், கர்ப்பூரம், கருப்பூரம், கப்பூரம் என்ற சொற்களுக்குத் தமிழிலக்கிய ஆட்சி உண்டா என்று பார்ப்போம்.



'கருப்பூரம்' என்ற சொல் சிலப்பதிகாரத்தில் வருகிறது. சிலப்பதிகாரத்தின் பதினான்காம் காதை ஆகிய "ஊர்காண் காதை"யில் வருகிறது. அக்காதையின் 108ஆம் 109ஆம் வரிகள் பின்வருமாறு:-

"அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகு கருப்பூரமும் சுமந்துடன் வந்த."

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் 567ஆம் பாடல் கருப்பூரம் என்ற சொல்லை ஆண்டிருக்கிறது. அந்தப்பாடல் "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ" என்று தொடங்குகின்றது. சிலப்பதிகாரம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குரியது. திவ்வியப் பிரபந்தம் எட்டாம் நூற்றாண்டுக்குரியது.
'சீவகசிந்தாமணி' என்ற சமணக்காப்பியம் எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுக்குரியது. அதில் வரும் ஒரு விருத்தப்பா 'கப்பூரம்' என்ற சொல்லை ஆள்கிறது.
"கர்ப்பூரதீபம்" என்ற தொடர், அரபத்த நாவலர் பதிப்பித்த "பரதசாஸ்திரம்" என்ற நூலில் ஆளப்பட்டிருப்பதாகச் சென்னைப் பேரகாரதி கூறுகின்றது. சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட "ஆங்கிலம் - தமிழ் அகராதி", Camphor என்ற சொல்லுக்கு விளக்கம் தரும்போது

'கற்பூரம்' என்றே எழுதியிருக்கிறது; கர்ப்பூரம் என்று எழுதவில்லை.
"கிரியா" வெளியிட்டிருக்கும் "தற்காலத் தமிழ் அகராதி"யும் 'கற்பூரம்' என்ற சொல்லையே தருகின்றது, கர்ப்பூரம் என்ற சொல்லைத் தரவில்லை. உவின்சுலோ அவர்களின் "ஆங்கிலம் - தமிழ்" அகராதியும் Camphor என்ற சொல்லுக்குக் கற்பூரம் என்றே விளக்கம் தருகின்றது.

சிங்காரவேலு முதலியார் எழுதி வெளியிட்ட "அபிதான சிந்தாமணி" என்ற சொற்களஞ்சியம் அதன் 385ஆம் பக்கத்தில் "கற்பூர ஆக்கம்" என்ற தலைப்பில் விளக்கம் தருகின்றது. அது Camphor பற்றிய விளக்கம் தான். அவரும் 'கற்பூர' என்றே அடைகொடுக்கிறார் 'கர்ப்பூர' என்று அடைகொடுக்கவில்லை என்பது மனம் கொள்ளத்தக்கது.

கற்பூரம் விற்கின்ற செட்டிக்குக் "கற்பூரச்செட்டி" என்று பெயர் என்று அவர் எழுதியிருக்கிறார். "இக்கற்பூர விளக்கும் நந்தா விளக்கும்" என்று தென்னிந்தியக் கல்வெட்டு ஒன்று கூறுவதாகச் சென்னைப் பேரகராதி 822ஆம் பக்கத்தில் குறித்திருக்கிறது.

தமிழ்நாட்டுப் பாண்டிய மன்னன் ஒருவனின் பெயர் குங்கும பாண்டியன். அவன் மகனின் பெயர் கற்பூர பாண்டியன் என்று அறிகின்றோம்.

இவற்றையெல்லாம் சிந்தனை செய்கின்றபோது, ஒரு விடயத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். விவாதத்துக்குரிய சொல் தமிழ்சொல் அன்று. தமிழல்லாத சொல்; வேற்றுமொழிச்சொல். தமிழல்லாத சொற்களை நாங்கள் ஒலிக்கும்போதும் எழுதும் போதும், அவற்றை அந்த வேற்று மொழியாளர்கள் ஒலிக்கின்ற படியே ஒலிக்கவேண்டும் என்றும் ஒலிக்கின்றபடியே எழுதவேண்டும், என்றும் சில தமிழறிஞர்கள் நினைக்கின்றார்கள். உலகத்து மொழிகளில் உள்ள ஒலிகளை எல்லாம் தமிழிலும் (எழுத்துக்கடன் வாங்கியேனும்) ஒலிக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். சம்பந்தப்பட்ட வேற்றுமொழிச்சொல்லின் உச்சரிப்பை முறையாகக் கற்றவர்கள் போலப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்.

திருக்கோணமலையை Tirukkonamalai என்று எழுதியிருக்கலாம் ஆனால் Trincomalee (ரிறிங்கோமலி) என்றுதான் இங்கிலீச்சுகாரன் (ஆங்கிலேயன்) எழுதினான். இஞ்சிவேர் என்ற தமிழ்ச் சொல்லை Iñchivēr என்று ஒலிக்கவும் எழுதவும் முடியும். அப்படியிருந்தும் Zingiberis என்றுதான் அந்த நாளைய கிரேக்கன் (Greek) எழுதினான். Gingiber என்றுதான் உரோமானியன் எழுதினான். அரிசி என்ற தமிழ்ச்சொல்லை Arisi என்று ஒலித்தும் எழுதியும் இருக்கலாம். ஆனால், யாழ்ப்பாணத்துக் கந்தரோடைத் தமிழரோடும், இந்தியாவின் தரங்கம்பாடித் தமிழரோடும் வியாபாரம் செய்த கிரேக்க நாட்டவர் Oryza என்றுதான் ஒலித்தார்கள் எழுதினார்கள். உரோமானிய வியாபாரிகளும் அப்படித்தான் செய்தார்கள். இந்தச் சொல்லையும் சொல்குறிக்கும் பண்டத்தையும் உள்வாங்கிய பிரான்சுக்காரன், உரோமானியர் ஒலித்தபடியோ எழுதியபடியோ ஒலிக்கவுமில்லை, எழுதவுமில்லை. அவன் Ris என்றே ஒலித்தான் ஒலித்தபடியே எழுதினான். "மிளகுதண்ணீர்" என்பதை Milagu Tanneer என்று ஒலித்திருக்கலாம் ஒலித்தபடி எழுதியிருக்கலாம். ஆனால் நம்மை ஆண்ட ஆங்கிலேயன் Mulligatawny (முள்ளிகாதோணி) என்றுதான் ஒலித்தான், எழுதினான். இதையும் அவர்கள் வேண்டுமென்றே செய்யவில்லை. பாளி மொழியாலும், பிராகிருத மொழியாலும் பாதிக்கப்பட்டுப் பழக்கப்பட்ட அவர்களுடைய வாய் இடம் தரவில்லை.

Burma என்ற நாடு இப்போது Myanmar என்று அழைக்கப்படுகிறது. அதன் பழைய பெயர் இதுதானாம். Burma என்ற நாட்டைத் தமிழர் 'பர்மா' என்றும் 'பருமா' என்றும் அழைக்கிறோம், எழுதுகிறோம். சிங்கள மக்கள் அவர்களின் மொழிச்சாயலுக்கு ஏற்பப் 'புருமா' என்று ஒலித்தார்கள், ஒலிக்கிறார்கள்.

இலங்கையில் Portuguese என்பதை நாங்கள் போர்த்துக்கேயர் என்று ஒலித்தோம், எழுதினோம். எங்களோடு வாழ்ந்த சிங்களர் அதனைப் 'புறுத்துக்கீசி' என்று ஒலித்தார்கள், எழுதினார்கள்.

Hollanders என்பதை நாங்கள், தமிழில் 'ஒல்லாந்தர்' என்று ஒலித்து, ஒலித்தபடியே எழுதினோம். சிங்களவர் Hollanders என்பதை 'லந்தேசி' என்று ஒலித்தார்கள், எழுதினார்கள். இவற்றில் தவறு எதுவும் இல்லை. அது அப்படித்தான் அதுதான் முறை. மொழிச்சாயலும் மொழிச்சால்பும் அப்படித்தான் ஒலிக்கவும் எழுதவும் வைக்கும். எதிர்நீச்சலடிக்க முனைவது முறையன்று.

ஆங்கிலமொழியிலே, குறித்த ஒரு சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிப்புக்கள் உண்டு. ஒரே ஆங்கிலச் சொல்லை, அமரிக்கர் ஒருவிதமாகவும், கனேடியர் ஒருவிதமாகவும், அவுத்திரேலியர் ஒருவிதமாகவும் ஒலிக்கிறார்கள். வேறுபாடு ஒலிப்பில் மட்டுமன்று; எழுத்துக்கூட்டலிலும் உண்டு. அமரிக்க எழுத்துக்கூட்டலும் பிரித்தானிய எழுத்துக்கூட்டலும் வேறுவேறு. Colour என்றும் Fibre என்றும் Plough என்றும் ஆங்கிலேயர் எழுதும் அதே ஒலிப்பை, அமரிக்கர் Color என்றும் Fiber என்றும் Plow என்றும் எழுதுகிறார்கள். இதுமட்டுமா? சம்பந்தப்பட்ட சொல்லை ஆக்குகின்ற எழுத்துக்களுக்கு உரியனவல்லாத ஒலிப்புக்களும் உண்டு. அதே போல ஒரே சொல்லுக்கு இரண்டுவித எழுத்துக்கூட்டலும் உண்டு. ஏன் அப்படி என்று சொல்லமுடியாது. ஆனால் அப்படி உண்டு. Victual என்ற சொல்லுக்கும், அதன ஒலிப்புக்கும் (உச்சரிப்புக்கும்) உறவே இல்லை. Tomb என்ற எழுத்துக்கூட்டலுக்கும் அதன் ஒலிப்புக்கும் உறவே இல்லை. Knife என்பதை எழுதியவாறு ஒலிப்பதில்லை. Debt என்பதும் அவ்வாறே. Yacht என்ற எழுத்துக்கூட்டலுக்கும் அது குறிக்கும் சொல்லின் ஒலிப்புக்கும் உறவே இல்லை. Hyperbole; Lichen; Indict; Hiccough; Monsieur; Mortgage; Plumber; Quay; Queue; Salmon; Sovereign; Viscount; Worry; Year ஆகிய சொற்களும் அவ்வாறே தொடர்பற்ற ஒலிப்புக் கொண்டவை.

Almanac; Carcass; Cipher; Despatch; Ecstasy; Judgment; Gild; Inquire; Jail; Jewellery; Lakh; Loathe; Mandolin; Medieval; Movable; Mirky; Pedlar; Programme; Pygmy; Racket; Rhyme; Syrup; Wagon ஆகிய சொற்களை இன்னொரு விதமாக எழுத்துக்கூட்டுகின்ற வழக்கம் ஆங்கில மொழியில் உண்டு. அதாவது Almanack; Carcase; Cypher; Dispatch; Extasy என்றெல்லாம் எழுத்துக்கூட்டப் பிரித்தானிய ஆங்கிலமொழி இடந்தருகின்றது. வேற்றுமொழிச் சொற்கள் Anglo Saxon மொழிக்குள் நுழைந்தபோது, அதனை அன்றைய பிரித்தானியாவின் வேறுவேறு பகுதியினர் வேறுவேறாக ஒலித்து வேறுவேறாக எழுத்துக்கூட்டியதன் விளைவு இது.

Dr. Samuel Johnson அவர்கள் முதன்முதலில் ஆங்கில மொழிச் சொற்களின் ஒலிப்பையும் எழுத்துக்கூட்டலையும் ஒரு சீர்மைப்படுத்த முயன்றார். ஆங்கில அகராதி ஒன்றை ஆக்குகின்ற பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டபோது இந்த ஒருசீர்மைப்பாடு பற்றி அவர் நிறையவே சிந்தித்து இயன்றவரை ஒருசீர்மைப் படுத்தினார். ஆனாலும் செப்பமாகச் செய்யமுடியவில்லை. மேற்காட்டிய சொற்கள் அவரது கட்டளையையும் மீறிவிட்டன. பின்னர்வந்த ஆங்கில அறிஞர்கள் "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" என்ற பொன்மொழியை உணர்ந்தவர்கள் போல, இருவேறு எழுத்துக் கூட்டல்களுக்கும் வாழ்வுதந்து, ஆங்கில அகராதியில் ஏற்றிவிட்டார்கள்.

வெவ்வேறு விதமாக எழுத்துக்கூட்டி எழுதிவிட்டு ஒரேவிதமாக ஒலிக்கின்ற சிக்கலோ குளறுபடியோ தமிழ்மொழியில் பெரிய அளவில் இல்லை. ஆங்கில மொழியில் நிறையவே உண்டு. பின்வருவன சில உதாரணங்கள் :-

| | | |
|---|---|---|
| 1. Adapter = Adaptor | 2. Aid = Aide | 3. Arc = Ark |
| 4. Bail = Bale | 5. Beat = Beet | 6.Callous = Callus |
| 7. Cent = Sent | 8. Compliment = Complement | |
| 9. Dam = Damn | 10. Draft = Draught | 11 Dual = Duel |
| 12. Earn = Urn | 13. Eave = Eve | 14. Faint = Feint |
| 15. Feat = Feet | 16. Flower = Flour | 17. Gage = Gauge |
| 18. Genes = Jeans | 19. Hail = Hale | 20. Hare = Hair |
| 21. Heel = Heal | 22. Incite = Insight | 23. Ion = Iron |
| 24. Jewel = Joule | 25. Knit = Nit | 26. Knot = Not |
| 27. Lead = Led | 28. Leak = Leek | 29. Made = Maid |
| 30. Mail = Male | 31. None = Nun | 32. Naval = Navel |
| 33. Oar = Ore | 34. Oh = Awe | 35. Pail = Pale |
| 36. Pare = Pair | 37. Rap = Wrap | 38. Read = Read |
| 39. Sale = Sail | 40. Sew = Sow | 41. Tail = Tale |
| 42. Team = Teem | 43. Vain = Vein | 44. Vale = Veil |
| 45. Warrior = Worrier | 46. Which = Witch | 47. Yolk = Yoke |
| 48. Your = You're | | |

தமிழ்மொழியில் மேற்படி குளறுபடிகள் இல்லையென்றாலும் சில குளறுபடிகள் இருக்கவே இருக்கின்றன. பின்வரும் சொற்களை உற்று நோக்குங்கள் :-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *1.* | இழிவு | = | இளிவு | *2.* | உழுந்து | = | உளுந்து |
| *3.* | மதில் | = | மதிள் | *4.* | பவளம் | = | பவழம் |
| *5.* | மஞ்சல் | = | மஞ்சள் | *6.* | செதில் | = | செதிள் |
| *7.* | வேலை | = | வேளை | *8.* | கருப்பு | = | கறுப்பு |
| *9.* | வரட்சி | = | வறட்சி | *10.* | குரைத்தல் | = | குலைத்தல் |
| *11.* | தரை | = | தறை | *12.* | முரித்தல் | = | முறித்தல் |
| *13.* | பண்டி | = | வண்டி | *14.* | நெருநல் | = | நென்னல் |
| *15.* | வேண்டா | = | வேண்டாம் | *16.* | பிரிவு | = | பிறிவு |
| *17.* | யானை | = | ஆனை | *18.* | யாறு | = | ஆறு |
| *19.* | யாடு | = | ஆடு | *20.* | மங்கலம் | = | மங்களம் |
| *21.* | வாழ்நா | = | வாணர் | *22.* | என்ணெய் | = | எண்ணை |
| *23.* | கோயில் | = | கோவில் | *24.* | கொழுகொம்பு | = | கொளுகொம்பு |
| *25.* | ஏமாறினேன் | = | ஏமாந்தேன் | *26.* | அங்கனம் | = | அங்ஙனம் |
| *27.* | மெல்ல | = | மெள்ள | *28.* | வர்ணம் | = | வண்ணம் |
| *29.* | சிரீதரன் | = | சிறீதரன் | *30.* | வியர்வை | = | வேர்வை |
| *31.* | துழாய் | = | துளசி | *32.* | துளை | = | தொளை |
| *33.* | புத்தகம் | = | பொத்தகம் | *34.* | ஐந்நூறு | = | ஐஞ்ஞூறு |
| *35.* | வெயில் | = | வெய்யில் | *36.* | புறனடை | = | புறநடை |

சுன்னாகம் குமாரசாமிப்புலவர் அவர்கள் எழுதிய இலக்கண சந்திரிகை என்ற நூலில் “வடசொல் வேறுபாடு” என்று ஓர் அத்தியாயம் உண்டு. அதாவது வடசொற்கள் தமிழ்மொழியில் உள்வாங்கப்படும்போது எவ்வாறு வேறுபடும் என்பதை விளக்குகின்ற அத்தியாயம் அது. அதிலே, ரகரத்தை இரண்டாம் எழுத்தாக உள்ள வடசொற்கள் தமிழில் எவ்வாறு வேறுபடும் என்பதற்குப் பின்வருவனவற்றை உதாரணங்களாகக் காட்டியிருக்கிறார் :-

*1.* கர்க்கடகம் - கற்கடகம் *2.* சார்வதீர்த்தம் - சாறுவதீர்த்தம் *3.* சர்வதீர்த்தம் - சறுவதீர்த்தம்

இவ்வாறே சர்ப்பம் என்பது சற்பம் என்றும், துர்ப்பாக்கியம் என்பது துற்பாக்கியம் என்றும், துர்க்குறி என்பது துற்குறி என்றும், ஏர்ப்பூசி என்பது ஏற்பூசி என்றும் மார்க்கண்டம் என்பது மாற்கண்டம் என்றும் எழுதப்படலாம் என்பதற்கு இலக்கிய ஆதாரம் உண்டென்பதையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

மேற்படி சொற்கள் தமிழ்மொழயில் ஏற்கப்பட்டு விட்டன. இலக்கியங்களிலும் ஏறிவிட்டன. வள்ளுவரே இழிவை இளிவு என்றும் எழுதலாம் என்று வழிகாட்டியிருக்கிறார். சூழ்ச்சியைச் சூட்சி என்று எழுதலாம் என்று நாவுகக்கரசர் வழிகாட்டி விட்டார். தேவார திருவாசகங்களில் ஆட்சிபெற்ற பேச்சுமொழிக்கே புத்தமித்திரனார் இலக்கணம் செய்தார். புகழ்ச்சியைப் புகட்சி என்னலாம் என்றதும் இகழ்ச்சியை இகட்சி என்னலாம் என்றதும் திகழ்ச்சியைத் திகட்சி என்னலாம் என்றதும் புத்தமித்திரனாரின் கண்டு பிடிப்புக்கள் அல்ல. தமிழ்நர் என்பதைத் தமிணர் என்றதும் வாழ்நாள் என்பதை வாணாள் என்றதும் புத்தமித்திரரின் கண்டு பிடிப்புக்கள் அல்ல. அவருக்குரிய பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பாடல்களிலும் கல்வெட்டுக்களிலும் மக்கள் மத்தியிலும் ஆட்சிபெற்று விட்ட பேச்சு மொழிக்கு இலக்கணம் செய்ததுதான் அவர் செய்த பணி. “சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்” என்று சொன்ன தொல்காப்பியரையே புத்தமித்திரரும் நேமிநாதரும் பின்பற்றினார்கள் என்று கூறுவது முறைபோலத் தெரிகிறது.

குறித்த ஒரு சொல், வேற்று மொழிச் சொல்லாக இருந்தால் மூலச் சொல்லின் ஒலி, இம்மியும் மாறாத வகையில் அதனைத் தமிழில் எழுத வேண்டும் என்ற விதியோ நியதியோ எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்றே தோன்றுகின்றது. இதனால்தான் கம்பனும் இலக்குவன் என்றும், கும்பகன்னன் என்றும் எழுதினான். இதனால்தான் Shakespeare என்ற பெயரை ஒரு சிலர் செகப்பிரியர் என்றும், வேறு சிலர் செகசிற்பியர் என்றும் எழுதுகிறார்கள். Coffee என்பதைச் சிலர் கோப்பி என்கிறார்கள், வேறு சிலர் காப்பி என்கிறார்கள். Apple ஐச் சிலர் ஆப்பிள் என்கிறார்கள், இன்னுஞ்சிலர் அப்பிள் என்கிறார்கள். இவை எதைக் காட்டுகின்றனவென்றால் வேற்றுமொழிச் சொற்களைத் தமிழ்மொழிக்குள் ஏற்கும்போது இப்படித்தான் எழுத வேண்டும் என்ற நியதி இல்லை என்பதே! அதாவது தொல்காப்பியரும் புத்தமித்திரனாரும் சொன்னது ஒன்றே ஒன்றுதான் உண்டு என்பதே! அதாவது வடசொற்கிளவிகளை ஏற்கும்போது, வட எழுத்துக்களை ஒருவவேண்டும் என்பதே.
மேற்கூறியவற்றையெல்லாம் தொகுத்து நோக்குகின்றபோது ‘கற்பூரம்’ என்ற சொல்லைத் தவறான சொல்லென்று கூறித் தூக்கி எறிவது முறையா என்று தோன்றுகின்றது. ‘கர்ப்பூரம்’ என்பதைக் கற்பூரம் என்று எழுதக்கூடாது என்று எழுதிய அறிஞரே, அவர் எழுதிய நூலில் அனுபூதி, அநுபூதி என்ற இரண்டு சொற்களையும் கையாண்டிருக்கிறார். விநோதன் வினோதன் என்ற இரண்டு சொற்களையும் ஆண்டிருக்கிறார். அனுபவி, அநுபவி என்ற இரண்டு சொற்களையும் கையாண்டிருக்கிறார். விபுலாநந்தர் என்பதை விபுலானந்தர் என்று இரண்டையும் எழுதியிருக்கிறார். கோயில், கோவில் என்ற இரண்டையும் ஆண்டிருக்கிறார். கலாசாரம் என்பதைக் கலாச்சாரம் என்று ஆண்டிருக்கிறார்.

கடிசொல் இல்லை காலத்துப் படினே என்பதும் இதைந்தன வரினும் இரைந்தன வரையார் என்பதும் நோக்கத்தக்க அறிவுரைகள். அவை நமக்கு வழிகாட்டட்டும்.

**ஒரே வழிதான்......**

சுற்றியுள்ள கயிற்றை அவிழ்ப்பதற்கு ஒரு வழிதான் உண்டு. எப்படிச் சுற்றினோமோ, அப்படியே மறுபடியும் திருப்பி அவிழ்க்கவேண்டும். அதுபோலத் தவறான செயல்களை நற்செயல்களாலும் பாவங்களைப் புண்ணியங்களாலும் போக்கிக்கொள்ளவேண்டும். **- காஞ்சி மகான் -**

# கலசமே நீ வாழி!

தமிழின் இசையில் தாயின் பால் சுரக்கத்
தத்தித் தத்தி வந்து நூறாவது இதழ்தொட்ட
தமிழ் மகளின் கலசமே நீ வாழி!
காலாண்டு இதழாக வந்தெம் இதயம் தொட்டாய்!
நீநடந்த பாதையினை நினைவுகூரும் வேளையிது
அட்டைப் படமெல்லாம் அட்டகாசப் புகைப்படங்கள்!
ஆசிரியர் தலையங்கம் முத்தான பொன்மொழிகள்!
பொங்கல் மலரில் புன்னகை பூத்துநிற்பாய்!
சித்திரைப் புத்தாண்டில் சிங்கார வடிவெடுப்பாய்!
புராணக் கதைகள் அறிவைப் புடம்போட
சமயக் கட்டுரைகள் சரளமாய்ப் புரியவைப்பாய்!
சித்தாந்த விஷயங்கள் சிந்தனைக்கு விருந்தாக
பழைமை ஆலயங்கள் புதுமைக்கு விருந்தாக
பயணக் கட்டுரைகள் பரவசத்தில் எமை ஆழ்த்த
படிப்போர் நெஞ்சத்தில் பரபரப்பு, ஒருவியப்பு!
நாமும் பயணிக்க வேண்டும் எனும் தவிப்பு
திருக்குறளின் மேன்மையினை மேலும் தெளிவிப்பாய்!
மொழிதெரியாச் சிறுவர்க்கு ஆங்கிலத்தில் அலங்கரிப்பாய்!
வியாபார விளம்பரங்கள் விதவிதமாய்க் கலர்ப்படங்கள்
விண்ணைத் தொடும் உன்தன் புகழில் வியக்கின்றோம்!
தெரியாத விஷயத்தைத் தெளிவிக்கும் தடாகம் நீ!
உன்னில் மூழ்கி எழும்போது மூச்சடைத்து நிற்கின்றோம்
ஆன்மிகக் கருத்தெல்லாம் அள்ளித் தருகின்றாய்!
ஆயுள் நீடிக்க அகத்திருந்து வாழ்த்துகிறோம்.
பக்கங்கள் நாற்பத்தெட்டு அத்தனையும் தேன்சொட்டு
கண்ணனும் தாத்தாவும் கடைசிப் பக்கங்களும்
கண்கவர் ஓவியமும் கருத்தான சம்பாஷனையும்
முத்தான விஷயங்கள் சத்தாகத் தந்திடுவாய்!
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் சாகா வரமுனக்கு
பூத்தது உன்புகழ் புலம்பெயர் நாட்டினிலே
வீசுது புகழ் மணம் இன்று தாய்நாட்டில்
இலவச இதழாய் வந்து இதயம் கவர்ந்தாய்!
இனியும் தொடரும் உன்சேவைக்கு
எம் இதய வாழ்த்துக்கள்!

- **பத்மா குணதாசன்** -

# சீ(ர்)காழி

## பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

சோழ நாட்டின் காவேரியின் வட கரையில் சோழர்களால் 11ஆம் நூற்றாண்டு அமைக்கப்பெற்ற ஆலயம். முன்பு சீகாழி என அழைக்கப்பட்டு நாளடைவில் சீர்காழி ஆகிவிட்டது. இங்கு இறைவன் மும்மூர்த்திகளான தத்துவத்தைக் கொண்டு அருள்பாலிக்கின்றார்.

1. இலிங்க வடிவம் : கீழேயுள்ள பிரமபுரிஸ்வரர் - பிரமன் பூசித்தது
2. குரு வடிவம் : நடுவிலுள்ள தோணியப்பர் ஞானப்பால் ஊட்டியது.
3. சங்கம வடிவம் : மேலேயுள்ள சட்டை நாதர் சிவன், விஷ்ணு சங்கமம்.

மேலும் வழிபடும் போது,

1. அருவமாக லிங்கம்
2. ரூபமாகத் தோணியப்பர்
3. அருவுருவமான சட்டை நாதர்

நால்வர்களாலும், அருணகிரிநாதர், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி போன்ற பலராலும் பாடப்பெற்ற சின்னக்கைலாயம் எனக் கருதப்படும். இத்திருத்தலத்திற்கு 12 பெயர்கள் உண்டு.

1. சீர்காழி : (ஸ்ரீகாளி) காளிதேவி சிதம்பர நடராசரோடு வாதாடிய குற்றம் நீங்க வழிபட்டதால்.
2. பிரமபுரம் : பிரமன் வழிபட்டதால்.
3. வேணுபுரம் : இறைவன் மூங்கில் (வேணு) வடிவில் தோன்றியதால்
4. புகலி : சூரனுக்குப் பயந்த தேவர்களுக்குப் புகலிடமாக விளங்கியதால்
5. வெங்குரு : குருபகவான் வழிபட்டு குருத்துவம் பெற்றதால்
6. தோணிபுரம் : பிரளய காலத்தில் இப்பதி தோணியாய் மிதந்ததாலும், இறைவன் இறைவியோடு தோணியில் காட்சி கொடுத்ததால்.
7. பூந்தராய் : பூமியை பிளந்து சென்று இரணியனைக் கொன்றவரான மூர்த்தி வழிபட்டதால்.
8. சிரபுரம் : சிரசு (தலை) கூராகிய இராகு கிரகம் பூசித்ததால்.
9. புறவம் : புறா வடிவில் வந்த அக்னியால். சிபிச்சக்கரவர்த்தி நற்கதி அடைந்ததால்.
10. சண்பை : சண்பை எனும் கோரைப்புல்லால் மடிந்த தம்குலத்தாரால் நேர்ந்த பழி தன்னைப் பற்றாதிருக்க கண்ணன் (திருமால்) வழிபட்டதால்
11. கொச்சைவயம் : கொச்சை (பழிச்சொல்) நீங்க பராசரர் பூசித்ததால்.
12. கழுமலம் : மலத்தொகுதி நீங்குமாறு உரோமசமுனிவர் வழிபட்டதால்.

இறைவன் : பிரமபுரீஸ்வரர், தோணியப்பர், சட்டைநாதர்
இறைவி : பெரியநாயகி, திருநிலைநாயகி
தலமரம் : பாரிசாதம்
தீர்த்தம் : பிரமதீர்த்தம் முதலாகவுள்ள 22 தீர்த்தங்கள்

“திருமுலைப் பால் உண்டார், மறுமுலைப்பால் உண்ணார்”என்பது சீர்காழியில் கூறப்படும் கூற்றாகும். முருகனின் அவதாரமாகிய திருஞானசம்பந்தர் அவதரித்ததும் திருமுலைப்பால் அருந்தியதும் சீர்காழியிலேதான்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியெ னுள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

சம்பந்தர் *3* வயதினிலே ஞானப்பால் அருந்தி, “தோடுடையசெவியன்” எனத் தேவாரம் பாடியதால் சீர்காழியை ஞானபூமி எனவும் கூறுவர்.

தருமையாதீனத் திருக்கோயில் மூன்று பகுதிகளாக, மாடிகளைக் கொண்டது. முழுமையாகப் பார்த்தால் சிறு குன்று போல் தோன்றும். இதனால் திரு தோணிமலை எனவும் அழைப்பர்.
முதல் மாடி அடித்தளத்தில் இலிங்க வடிவில் பிரமபுரீஸ்வரர் - பிரமன் பூசித்தது. பின் பக்கத்தில் திருமலை நாயகி, நடு மாடியில் தோணியப்பர் பெரியநாயகியோடு, மேல்மாடி சட்டைநாதர் சிவன், விஷ்ணு சங்கமம்.



**தரிசனம் :**
நாங்கள் இம்முறை சென்றபோது கும்பாபிஷேகம் நடைபெற்றுப் புதுப்பொலிவுடன் கோயில் பிரகாசித்தது. முன்பு சென்றபோது பழமையும் பாழடைந்ததுமான நிலையில் கண்டோம். அத்தோடு வௌவால்கள் அங்குமிங்குமாக பறப்பதையும் பார்த்துப் பதைபதைத்தோம். ஆலயத்திற்கு செல்லுமுன் ஓரிடத்தில் சிறார்கள் ஒன்று சேர்ந்து தேவாரம் பாடுவதைக் கேட்டு ஆனந்தித்தோம். மறுபுறத்தில் ஒரு பெண்மணி சொற்பொழிவு ஆற்றுவதைக் கண்டு பிரமித்தோம். பின்னர் பிரம்ம தீர்த்தத்தில் நீர் எடுத்துத் தலையில் தெளித்தோம். இங்கு தான் சம்பந்தர் ஞானப்பால் குடித்தது என்னும் அறிவிப்பு இருந்தது. நகரின் நடுவே நான்கு கோபுரங்களோடு “பெரிய கோயில்” எனக் கூறப்படும் இக்கோயிலுக்குக் கிழக்கு இராஜகோபுரம் தான் பிரதான வாயில். இக்கோபுரத்தில் திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாறு உள்ளது. கோபுர தரிசனம் செய்த பின்னர் உட் சென்றோம். கொடி மரத்துப் பிள்ளையார் இரு துவாரபாலகர் கொண்டு வீற்றிருப்பதை கண்ணுற்றோம். வணங்கி முன் சென்றோம்.

**அநுபவம்:**
நாங்கள் இருவரும் பூசைக்கு முன்னதாகவே சென்று பிரம்புரீஸ்வரர் வாசலை அண்டி நின்றோம். சில நிமிடங்கள் சென்ற பிறகு ஒருவர் எமை அணுகி “நான் தான் தலைவர்” முன் நிற்க வேண்டும் எனக் கோரினார். நாங்கள் ஒன்றும் பேசவில்லை. இறைவன் முன் தலைவர் ஏது? தம்பட்டம் ஏது? அவர் எமக்குப் பின் நின்று தான் அபிடேகம், ஆராதனை பூசை யாவும் பார்த்தார். எமக்கு பிரசாதமும் கிடைத்தது. இக்கணம் எமது யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் யாவரும் போற்றும் உரிமையாளரின் ஞாபகம் வந்தது. அவரை ஒருவருக்கும் தெரியாது. கூட்டத்தோடு கூட்டமாக எம்மோடு ஒருவராக இறை வழிபாடு செய்வார். இந்தச் செயலை, “எனது கோயில்,

நான் தான் தலைவன்" என்று மார் தட்டும் "இறை அன்பர்கள்'' கவனிக்கவேண்டும். சுயம்புலிங்கமாகிய பிரமபுரீஸ்வரரை வணங்கி விட்டு படிகள் ஏறி நடுமாடியை அடைந்தோம்.

**தோணியப்பர் ஆலயம்:**

கைலாய அமைப்பிலுள்ள இச் சந்நிதியில்தான் தோணியப்பர் விடையேறி "உமாமகேஸ்வர"ராகக் காட்சி கொடுத்தது. இங்கு ஞானப்பாலைக் குடித்த பிள்ளை சம்பந்தர், திருஞானசம்பந்தரானார். தோணியப்பருக்கு நான்கு காலப் பூசை நடைபெறுகிறது.

**வரலாறு:**

பிரளய காலத்தில் ஓம் என்ற மந்திரத்தைத் தோணியாக்கி இறைவன் இறைவியோடு காட்சி கொடுத்தமையால் இப்பெயராகும். மேலும் இக்காலத்தில் இப்பதி தோணி போல மிதந்ததும் ஒரு காரணமாகும்.

**சட்டைநாதர் ஆலயம்:**



தனிச் சிறப்பு வாய்ந்து காசி, காலபைரவருக்கு சமமாக கருதப்படும் இம்மூர்த்தியைக் குறுகலான வழியே நுழைந்து படிகள் ஏறி அடையலாம். வாரத்தில் ஒருநாள் வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணிக்கு மேல் அர்த்த யாமம் முடிந்தவுடன் புனுகு எண்ணெய் சாத்தி நெய்யில் செய்த வடை, பாயசம் நிவேதனமாகக் கொடுக்கப்படுகிறது.

**வரலாறு:**

விஷ்ணு வாமன அவதாரமெடுத்து தனது மூன்றாவது கால் அடியால் மாபலி சக்கரவர்த்தியைப் பூமிக்கு கீழே தள்ளி வென்றார். இதனால் கர்வம் கொண்டு வெகு மூர்க்கமாக இருந்தார். சிவபெருமான் இவரை அடக்கி அவரின் தோலை உரித்து சட்டையாக அணிந்தார். இதனால் சட்டைநாதர் என்ற பெயர். சீர்காழி கோயில் இப் பெயரில் தான் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**திருஞானசம்பந்தர் சந்நிதி:**

கீழ்ப்பிரகாரத்தில் தனிச்சந்நிதி உளது. அருகில் அம்பாள் நின்றநிலையில் காட்சி அளிக்கிறாள். சம்பந்தர் சந்நிதி சிவனுக்கும் அம்பாளுக்கும் நடுவில் இருப்பதால் இது சோமஸ்கந்த அமைப்பாக அமைகிறது.

அம்பாளை விட வேறு பல தெய்வங்களும் இக்கோயிலில் உள்ளன. இக்கோயில் சீர்காழிப் புகையிரத நிலையத்தில் இருந்து 2கி.மீ தூரத்தில் உள்ளது.

பின் குறிப்பு :

"பார்வதித் தாய் பெற்றெடுத்த பழனி முருகன்தான் சீர்காழி வந்துதித்த திருஞானசம்பந்தன்'' எனப்பல பாடல்களைப் பாடி எமை மகிழ்வித்து 55 வயதில் மறைந்த திரு கோவிந்தராஜன் பிறந்த இடம் சீர்காழியே.

பெரிய புராணப் பிரியர்களே!

இத்தலத்தோடு அப்பரை சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றிய திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயில், சுந்தரரை ஆட்கொண்ட திருவெண்ணெய் நல்லூர் (கிருபாபுரீஸ்வரர்) தலம், மாணிக்கவாசகரை திருவடி சூட்டி அருட் கண்ணாலே உபதேசித்த திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) இவை நான்கையும் தரிசித்து அநுபவித்தால் பெரிய புராணத்திற்கு மிக விளக்கங்கள் பெருகும் எனப்படுவதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

# சைவ முன்னேற்றச் சங்கமும் அதன் செயற்பாடுகளும்

திருமதி சரோஜா சந்திரகோபால்
கௌரவ பொதுச்செயலாளர்

சைவ முன்னேற்றச் சங்கம் ஒரு ஆல விருட்சம், கற்பக தரு. இதன் கருவில் உருவான சேய்கள், பாரின் பல பாகங்களிலும் வியாபித்து, பலருக்கு நிழல் தருகின்றன. அந்நிய மண்ணில் எமது சைவ சமயமும் தாய்த் தமிழ்மொழியும் தொலைந்துவிடக் கூடாதென்ற ஒரே தூர நோக்கில், 1977 இல் திரு இராமநாதன், திரு ஆனந்ததியாகர் உள்ளிட்ட ஒரு சில அன்பர்களால் ஆரம்பிக்கப்பட்டதே இச்சங்கம். தலைவர்களும், அவர்களின் வழி காட்டலில் செயற்குழுவும் வளர்த்த இந்த சங்கம் இவ்வருடம் 44 ஆண்டுகளை நிறைவுசெய்து 45ஆவது ஆண்டிற் கால்பதித்துள்ளது. தற்போது திரு. தர்ம இரவீந்திரமோகன் அவர்கள் தலைவராக உள்ளார்.

**நால்வர் தமிழ்க் கலை நிலையம்:**

“சைவ சமயக் கருத்தினூடாக சமூக சேவை” எனும் தாரக மந்திரத்துடன் முகிழ்ந்த சங்கத்தின் தலைப்பிள்ளை, நால்வர் தமிழ்க் கலை நிலையம். ஒரு வீட்டு அறையில் உருவான இப்பள்ளி, தன் குறிக்கோளில் இருந்து சிறிதேனும் விலகாது, எம் தமிழ்ச் சிறார்களுக்கு சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் போதித்து வருகின்றது. அத்துடன் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கும் நோக்குடன், நுண்கலைகளையும் பயிற்றுவிக்கின்றது. ஆலய தரிசனம், திருமுறைகள், சமய சம்பந்தப்பட்ட நாடகங்கள் மூலம் இச் சிறார்கள் தமது, சமய அறிவு, மொழித்திறன்களை வெளிக்காட்டி வருகின்றனர். நால்வர் தமிழ்க் கலை நிலையத்தின் அதிபராக அன்று முதல் இன்று வரை பணி புரிபவர் திரு சதாசிவம் ஆனந்ததியாகர் அவர்கள். நால்வர் தமிழ்க் கலை நிலையத்தின் பணிகள் சுமுகமாக நடை பெறுவதற்கான வழிவகைகளை தலைமை ஆசிரியருடன் கலந்தாலோசித்து, அதனை சங்க ஆட்சிக்குழுக் கூட்டத்தில் எடுத்துரைத்து ஆவன செய்தல், நிலையம் சம்பந்தமான நகர சபை அமர்வுகளில் பங்கெடுத்தல் போன்ற சிறப்புப் பணிகளைச் செவ்வனே செய்து முடிப்பவர் சங்கத்தின் **பாடசாலைச் செயலாளர்** திருமதி. கமலா பாலசுப்பிரமணியம் அவர்கள்.

**சமூக சேவை:**

சங்கத்தின் **சமூக சேவைச் செயலாளர்** திருமதி. வசந்தா மகாதேவன் அவர்கள். இச்சேவையின் கீழ், நால்வர் மூத்தோர் அமைப்பு உள்ளது. பிறந்த மண்ணை விட்டு, அந்நிய மண்ணில் கால்வைத்துச் சொந்த பந்தங்களை நினைத்து ஏங்கிய எமது மூத்தோர், இன்று மகிழ்வாக ஒவ்வொரு திங்கட்கிழமையும் சங்க மண்டபத்தில் கூடி, தாமே உணவு சமைத்து உண்டு மகிழ, பழைய நினைவுகளை மீட்க, பிறந்த நாள்களைக் கொண்டாட, மருத்துவ ஆலோசனை பெற, ஆன்மிகச் சொற்பொழிவுகள் கேட்க, பல்சுவை அரங்குகள் நடத்த என எம் மூத்தோர் மகிழ்வாக வாழ வழி சமைத்துள்ளது சங்கம். சமூகசேவைப் பிரிவின் மிக முக்கிய சேவைகளுள் ஒன்று அந்திம காலக் கிரியைகள். கிரியைகளை நிறைவேற்ற, சிவத்திரு பாலஸ்ரீ குருக்கள் ஐயா அவர்கள் பணியில் உள்ளார். பிறந்த மண்ணில் எப்படி எம் சொந்தங்களின் அந்திமக் கிரியைகளைச் செய்து அவர்களை வழியனுப்புகிறோமோ, அதே முறைகளை இங்கும்

கைக்கொண்டு மன நிம்மதி பெற இச்சேவை பெரிதும் உதவுகிறது. இச்சேவைகளை ஒழுங்கு செய்வதில், திரு குமாரசாமி சிதம்பரப்பிள்ளை அவர்களும் பேருதவி செய்து வருகின்றார்.

**அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் உடனுறை சிதம்பரேஸ்வரர் ஆலயம்**

ஆரம்பித்த நாளிலிருந்து அன்பர்களின் வீடுகளில் சிறப்பு வழிபாடுகள் நடத்திவந்த சங்கம் 1995 ஆம் ஆண்டில் தனக்குச் சொந்தமாக வாங்கிய மண்டபம் இன்று ஒரு அழகிய ஆலயமாக உருப்பெற்று, ஆன்மிக ஒளி வீசிப் பத்தர்களை மகிழ்விக்கின்றது. சைவர்கள் போற்றும் அத்தனை வழிபாடுகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள், என வாரத்தில் ஏழு நாள்களும், காலை, மதியம், மாலை, அர்த்தசாம பூஜைகள் என நடைபெற்று, ஆலயம் புதுப் பொலிவுடன் மிளிர்கின்றது. ஸ்ரீ நடராஜப்பெருமானின் ஆறு அபிஷேகங்களும் வருடந்தோறும் நடைபெறுகின்றன. இவ்வருடச் **சமயச் செயலாளர்** திருமதி பேபி சரோஜா கனகசபேசன் அவர்களது திறமையில் ஆலயம் ஆன்மிக ஒளியின் வழியில் செல்வதை மறுக்க முடியாது.

**வெளிநாட்டுத்திட்டங்கள்:**

சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஊடாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கான வாழ்வாதார உதவிகளைச் செய்து தருகின்றனர். COVID19 அனர்த்தத்தினால் பெரும் பாதிப்பு ஏற்பட்ட நாள்களில் கணிசமான அளவில் கைகொடுத்து உதவியது நமது சங்கம். உணவு, உடை, கல்வி எனப் பலவழிகளில் சங்கம் உதவிவருகிறது. பெருமைக்குரிய இத் திட்டத்தின் **செயலாளர்** திருமதி புவனேஸ்வரி சபாரத்தினம் அவர்கள்.

**கட்டடம்:**

சங்கத்தின் தற்போதைய **கட்டடச் செயலாளர்** திரு மாணிக்கம் ஜெயக்குமார் அவர்கள். கட்டட பொறியியல் பட்டதாரியான இவர், சங்க, ஆலய கட்டடத் தேவைகளை உடன் கவனிப்பவர். சமீபத்தில், சங்கத்திற்குச் சொந்தமான South end கடற்கரையில் அமைந்திருக்கும் அந்திமக் கிரியைகள் செய்யும் சிறு மனையினை மிகச்சிறப்பான முறையில் திருத்தி அமைத்து அனைவர் பாராட்டையும் பெற்றவர்.

**அங்கத்துவம்:**

சங்கம் என்றால் அதற்கு உறுப்பினர்கள் தேவை. புதிய அங்கத்தவர்களைச் சங்கத்துக்குள் கொண்டு வருவதற்கும் பழைய அங்கத்தவரின் சந்தாச் சேர்ப்பதற்கும் ஒருவர் தேவை. அந்தப் பணியைச் செய்பவர் **அங்கத்துவச் செயலாளர்** திரு. சுப்பிரமணியம் இரத்தினராசா அவர்கள். ஒரு சங்கத்திற்குப் பலம் சேர்த்து நீண்ட ஆயுள் கொடுப்பது அங்கத்தவர் எண்ணிக்கையே. ஆயுட்கால, வருடாந்த, மாதாந்த அங்கத்தவர்களுடன் தொடர்பு கொள்வது, சந்தாப் பணம் சரி செய்வது, புதிய அங்கத்தவர்களை சேர்ப்பது என தொடர்ந்து பணிபுரிபவர்.

**வெளியீட்டுத்துறை:**

சங்கத்தின் **வெளியீட்டுத்துறைச் செயலாளர்** திரு. சிவ தம்பு அவர்கள். வெளியீட்டுத்துறையின் கீழ் "கலசம்" என்னும் ஆன்மிகக் காலாண்டு இதழ் சஞ்சிகை, "தோரணம்" மாதாந்த மின்னிதழ் ஆகியன வெளிவருகின்றன.

**கலசம்:**

இலண்டனில் இருந்து இலவசமாக வெளிவரும் முதலாவது ஆன்மிகப் பத்திரிகை "கலசம்" இச் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. கதிரிப்பிள்ளை ஜெகதீஸ்வரம்பிள்ளை அவர்கள். கடந்த ஆண்டு 2020இல் கோவிட் பெருந்தொற்றுக்காரணமாக மூன்று இதழ்கள் வெளிவரவில்லை. இப்போது 2021 பொங்கலன்று தொடக்கம் மீண்டும் கலசம் வெளிவருகின்றது. ஈழத்திலும் பெருமளவில் விநியோகிக்கப்படுகிறது. சமய சிந்தனைகளை மக்கள் மனதில் நிலை பெறச்செய்யும் கட்டுரைகள்; புரட்சிகரமான ஆசிரியர் தலையங்கம் எனச் சங்கத்தின் குறிக்கோளைக் குறிப்பிட்டுக் காட்டும் சஞ்சிகை, கலசம்.

**தோரணம்:**

மாதாந்த மின்னஞ்சல் இதழ். சங்கத்தின் செயலாளர்கள், அவர்தம் செயற்பாடுகள், ஆலய வழிபாடுகள், சங்க நிகழ்வுகள், நிதி உதவி நிகழ்வுகள் என சங்கத்தினை வெளி உலகிற்குப் படம் பிடித்துக் காட்டும் சிறந்த சேவையைச் செய்து வருகின்றது. இந்த இதழினை வடிவமைத்து வெளிக்கொணர்பவர் சங்கத்தின் உப தலைவர் திரு. சோதிரட்ணம் நிரஞ்சன் அவர்கள்.

**பரீட்சை:**

இதன் **செயலாளர்** திருமதி பத்மா குணதாசன் அவர்கள். இலண்டனிலுள்ள பல பாடசாலைகளை இணைத்து அவர்களுக்கான சமயபாட நேர்முகப் பரீட்சைகளை வருடந்தோறும் இத்துறை நடாத்தி வந்த போதும், தற்சமயம் கோவிட் 19 அனர்த்தம் காரணமாக தற்காலிகமாக இப்பரீட்சை நிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளையில், Zoom வாயிலாக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு, இவ்வருடம் சமயபாடப் பரீட்சையும் நடந்தேறியுள்ளது குறிப்பிடத்தக்கது. Zoom வகுப்புகளின் ஒருங்கிணைப்பாளர் சங்கத்தின் உப தலைவர் திரு சோதிரட்ணம் நிரஞ்சன் அவர்கள்.

**யோக நிலையம் /அறிவொளி நிலையம்:**

யோக நிலையம் **திரு சிவ அசோகன்** உட்பட ஒன்பது அங்கத்தவர்களது கடினமான, தன்னலமற்ற சேவையில் சிறப்பாகச் செயல்படுகின்றது. இலங்கை, இந்தியா, மலேசியா, நேபாளம் என உலகெங்கும் பரந்து வாழும் மக்கள் தேவைக்கேற்ப யோக நிலையமும், அறிவொளி வளையமும் செய்யும் சேவைகளால் பயனடைபவர்கள் எண்ணிக்கை ஏராளம். எல்லா வயதினருக்கும் ஏற்ற வகையில் "யோகாசனம்" பயிற்சிகளை நடைமுறைப்படுத்தி வந்த யோக வகுப்புகள் கோவிட் 19 காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பினும், இச்சேவையை பலரும் மீண்டும் எதிர்பார்த்து இருக்கின்றனர்.

44 வருட வரலாற்றுப் பின்னணி கொண்ட சைவ முன்னேற்றச் சங்கம் இன்று ஒன்பது (9) காப்பாளர்கள், ஒன்பது (9) திட்டச் செயலாளர்கள், ஏழு (7) ஆட்சிக்குழு உறுப்பினர்கள் என இருபத்தைந்து (25) அங்கத்தவர்களுடன் சங்க அலுவல்களை நிர்வாகம் செய்து வருகின்றது. மேலுள்ள தகவலில் இந்தவருடச் செயற்குழுவில் பதவிவகிக்கும் செயலாளர்களின் பெயர்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பங்காற்றிய முன்னைய உறுப்பினர்களை நாம் மறந்துவிடலாகாது. அவர்களுக்கு எமது நன்றி என்றும் உரியது. இச் சங்கம் மென்மேலும் வளர வேண்டும். இளையவர்கள் இணைந்து சங்கத்தின் செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்து, எம் சமூகத்தினருக்கும், ஏனைய உதவி தேவைப்படுவோருக்கும் சேவை புரிய வேண்டுமென்பதே சங்கத்தின் குறிக்கோளாகும்.

# ANNA DHANAM

Enlightenment Circle

Saiva Munnetta Sanga

## Out Reach Projects – India – Aug'21

**Anna Dhanam provided (meal offerings) for Destitute People in Madurai town, South India during August'21**

Approximately 60 vegetarian meals were cooked and served daily to destitute people (mentally ill, elderly, homeless etc.) living in Madurai town (South India) by "Kanthimathi Ammal". She has been doing this for years despite, no income of her own.

Meals were cooked early in the morning every day and parcels are distributed from a special place in Madurai maintaining social distancing due to COVID-19 and served to the destitute people.





She was supplied with provisions to continue he services without any challenges. Kanthimathi Ammal follows Ramalinga Swamigal's (Vallalar) noble teachings of feeding the poor where possible.

**Nutritious vegetarian meals have been served to the hungry in Sri Lanka, India, Malaysia, Nepal etc. with your support.**





**Special thanks to our sponsors Mrs I Malagoda family; In memory of late Mrs S Inalsingh by her family and friends and all the well-wishers who wish to remain anonymous.**

Enlightenment Circle with the help of well-wishers provide financial support for this exceptional service by sponsoring the cost of 20 meals per day. I.e. this is approximately helping 500 hungry people per month.

**Sincere thanks go to Ms. M Kanagalakshmi from Chennai who is successfully coordinating all our activities very methodically in India.**

**Special Projects News**
**email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527**

**Page 1**

# கலசம் 75ஆவது இதழ் வெளியீடு
## 25.05.2014






# கலசம் 75ஆவது இதழ் வெளியீடு
# 25.05.2014


சிவஸ்ரீ நாகநாதசிவக் குருக்கள்


சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள்


சிவஸ்ரீ வசந்தன் குருக்கள்


திரு ச. ஆனந்ததியாகர்


திரு வ இ இராமநாதன்


திரு வை சிவனருட்செல்வர்

# ANNA DHANAM

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

## Out Reach Projects - London – Aug'21

**A special Anna Dhanam (feeding the hungry) during these difficult times due to Covid-19 in South East London for the month of August'21.**

The Government under emergency measures have temporarily housed all those who have been sleeping rough and are continuously supporting them.



Seva Street was providing 200 meals every Wednesday at Stratford Shopping Centre prior to the lockdown.

Having noticed the significance of such an initiative, Newham Council have approached Seva Street and they provide 235 - 250 meals every day to those who need support.

**Please join us to help make a difference to those who have been affected by homelessness by sponsoring any number of meals; with the help of volunteers, which costs only 50pence per hot meal.**



EC is privileged to support Seva Street by sponsoring hot meals once a month. We have witnessed the service provided by Seva Street and are touched by their commitment,dedication and enthusiasm.



**Hot nutritious vegetarian meals were sponsored by the Saiva Munnetta Sangam (UK). We are grateful for their thoughtful contribution.**



The Team

The number of people permanently living rough on London's streets increased by nearly a quarter in three months and the number of rough sleepers with mental health problems (a particularly vulnerable group) rose almost a third, from 934 to 1,220 people. They need support from us all.

**Nutritious vegetarian meals have been served to those in need in countries such as Sri Lanka, India, Malaysia, Nepal etc. This has only been possible with your support.**

**We have served meals:**
**During 2017 - over 11,875**
**During 2018 - over 12,250**
**During 2019 - over 13,860**
**During 2020 - over 11,500**

**Special Projects News**
**email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527**

**Page 1**

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட நாள்கள்

## நவம்பர் (05-11-2021) தொடக்கம் டிசம்பர் (31.12.21) வரை

| | | |
|---|---|---|
| *05.11.2021* | வெள்ளி | கந்தசட்டி விரதாரம்பம் |
| *10.11.2021* | புதன் | சூரசங்காரம் |
| *11.11.2021* | வியாழன் | முருகன் திருக்கல்யாணம் |
| *16.11.2021* | செவ்வாய் | பிரதோஷம் |
| *19.11.2021* | வெள்ளி | திருக்கார்த்திகை |
| *20.11.2021* | சனி | விநாயகர் விரதம் ஆரம்பம் |
| *27.11.2021* | சனி | ஆறுமுகநாவலர் குருபூசை |
| *02.12.2021* | வியாழன் | பிரதோஷ விரதம் |
| *09.12.2021* | வியாழன் | விநாயகர் விரதம் நிறைவு |
| *11.12.2021* | சனி | திருவெம்பாவைத் திருவிழா ஆரம்பம் |
| *16.12.2021* | வியாழன் | பிரதோஷம் |
| *19.12.2021* | ஞாயிறு | தேர்த் திருவிழா |
| *20.12.2021* | திங்கள் | திருவாதிரை நடேசர் அபிஷேகம் |
| *31.12.2021* | வெள்ளி | பிரதோஷம் |
| *14.12.2022* | திங்கள் | தைப்பொங்கல் |

**பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.**

**கோயில் திறந்திருக்கும் நேரம்:**

**காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை**
**மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை**

அன்பர்கள் அனைவரும் வந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# கலசத்தின் பயணம்




முதலாவது "கலசம்" இதழ் 1993ஆம் ஆண்டு தை மாதம் வெளியாகியது. மேற்கு நாட்டில் முதன்முதல் வெளியான "ஆன்மிக" இதழாகக் கலசம் மலர்ந்தது. திரு மு நற்குணதயாளன் அவர்களும் திரு ச ஆனந்ததியாகர் அவர்களும் இணைந்து ஆசிரியர்களாக இயங்கி வெளியிட்டார்கள். லண்டன் ஸ்ரீ முருகன் கோயிலில் வெளியீடு நடந்தது. சைவ முன்னேற்றச் சங்கத்துக்கே உரிய தனிப் பாணியில் கோலகலமாக அந்த விழா நடைபெற்றது. முதலில் சந்தா சேர்த்து வெளியான இவ்விதழ் கடந்த பல ஆண்டுகளாக இலவச ஆன்மிக இதழாகவே வருகிறது. 97ஆவது இதழிலிருந்து மின்னிதழாகவும் வெளிவருகிறது.

இன்று வந்திருப்பது கலசத்தின் நூறாவது இதழ். அதன் பயணத்தில் திரு நற்குணதயாளனைத் தொடர்ந்து திரு அற்புதானந்தன், திரு ஆனந்ததியாகர் ஆகியோர் ஆசிரியர்களாக இருந்தார்கள். 58 ஆவது இதழிலிருந்து 71 ஆவது இதழ்வரையும், பின்னர் 77ஆவது இதழிலிருந்து இன்றுவரையும் ஆசிரியராக இருந்து பணியாற்ற ஆண்டவன் எனக்கு அருள்பாலித்திருக்கிறான். ஆசிரியராக நான் பொறுப்பேற்ற முதலாவது இதழே சைவ முன்னேற்றச்சங்கத்தின் ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயக் கும்பாபிஷேகத்தோடு வெளிவந்தமையும் திருவருளே! ஆசிரியராகப் பொறுப்பேற்றபோது எனக்கு வழிகாட்டியாக இருந்து பெரிதும் உதவியவர் சிவத்திரு சு வயித்திநாதன் குருக்கள் அவர்கள். கலசத்தில் அவருடைய பங்களிப்பு அளவிடற்கரியது.

உதவி ஆசிரியராக, ஐந்தாவது இதழிலிருந்து இருபத்தாறாவது இதழ்வரை, நான் இருந்தேன். திரு அற்புதானந்தனும் பத்தாவது இதழிலிருந்து, ஆசிரியராக இருந்த காலம் தவிர, மீதி இதழ்களில் உதவி ஆசிரியராக இருக்கின்றார். ஆசிரியர் குழுவில் பெண்களின் பிரதிநிதியாகத் திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம் அவர்களும், செல்வி உமா மூர்த்தி அவர்களும் வெவ்வேறு காலங்களில் இருந்தனர். இப்போது திருமதி சுதர்சினி வாகீசன் அவர்கள் இருக்கிறார்கள்.

75ஆவது இதழ் வெளியீட்டு விழாவை ஒழுங்கு செய்ததுடன் 72ஆவது இதழிலிருந்து உதவி ஆசிரியராகவும் தற்போது இலங்கைப் பொறுப்பாளராகவும் இருப்பவர் திரு வை சிவனருட்செல்வர் அவர்கள். ஆசிரியரை அருகிலிருந்து இடைவிடாது ஊக்குவிப்பவர் இவர். கனவிலும் நனவிலும் கலசத்துக்காகவே உழைத்து வாழ்பவர்.

நிருவாகத்தில் அன்றுமுதல் இன்றுவரை இடைவெளியின்றி இருப்பவர் திரு இராமநாதன் அவர்கள். ஆரம்ப நாள்களில் கலசத்துக்குத் திரு சிவ அசோகன் அவர்கள் அளித்த பங்களிப்பு முக்கியமானது. நிதிக்குப் பொறுப்பாக இருந்து, இதழ்கள் தவறாது பிரசுரமாக முன்னின்று உழைத்த ஓர் அன்பர். கலசத்தை இணையத்தில் ஏற்றும் பணியைத் திரு சோ நிரஞ்சன் அவர்கள் செய்கிறார்கள். தற்போது திரு மா இந்துசேகரன் அவர்கள் நிருவாகத்திலும் திரு சி தம்பு அவர்கள் வெளியீட்டுப் பணியிலும் உதவுகிறார்கள். கலசம் விநியோகத்தில் திரு இரத்தினராசா அவர்கள் இருக்கிறார்கள்.

வேறும் பல அன்பர்கள் கலசத்தின் பயணத்தில் பல வகைகளில் உதவியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரதும் பெயர்களைப் பட்டியல் இடுவதென்றால் இடம் போதாது. திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், "அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்றதுபோல அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்..

கலசம் "செல்வம்" அச்சகத்திலும், பின்னர் "வாசன்" அச்சகத்திலும் அச்சாகியது. வடிவமைப்பிலும் சிக்கனமாக அச்சிட்டுத் தந்ததிலும் வாசன் அச்சகத்துக்குப் பெரும் பங்குண்டு. பின்னர் Setline Printers என்ற அச்சகத்தில் அச்சானது. தற்போது யாழ்ப்பாணத்தில் அச்சாகிறது. கலசத்தைப் பலகாலம் சிறப்பாக வடிவமைத்தவர் திருமதி தயா வாசுதேவன் அவர்கள். இப்போது யாழ்ப்பாணத்தில் திரு குகன் சிவசுந்தரம் அவர்கள் வடிவமைக்கிறார்கள்.

கலசம் இலவச இதழாக வரப் பெரிதும் உதவிய, விளம்பரம் தந்த அத்தனை நிறுவனங்களுக்கும் நன்றி. தொடர்ந்தும் அவர்களின் சேவை கலசத்துக்குத் தேவை. அதை அவர்கள் உதவ வேண்டிநிற்கிறோம்.

அச்சகத்துச் சிக்கல்களாலும், 2020 ஆம் ஆண்டு கொரோனாவின் தாக்கத்தாலும் சில கலச இதழ்கள் வெளியாகவில்லை. இனிவருங்காலத்தில் இவ்விதமான தடைகள் வாராதிருக்க இறையருள் துணைநிற்கட்டும்.

# மகத்தான மார்கழி

## திருமதி சுகந்தி இந்துசேகரன்

மனித வாழ்க்கைக்கு வழிபாடு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். எல்லாச் சமயங்களும் வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. உடல் நலத்துக்கு உணவு எவ்வளவு அவசியமானதோ, அவ்வாறே உயிர் நலத்துக்கு வழிபாடு அவசியமானதாகும். மனிதன் உயிர் வாழ்வதற்குக் காற்று மிகவும் முக்கியமானது. எமது மூச்சுக்காற்று இல்லாமற் போனால் நாம் எவ்வளவு துன்பப் படுகின்றோமோ, அவ்வாறே வழிபாட்டினை நாம் கடைப்பிடிக்காவிட்டால் நாம் பல துன்பங்களிற்கு ஆளாகின்றோம். எனவே, நாம் துன்பமின்றி இன்பமாக வாழ்வதற்கு இறை வழிபாட்டினை மேற்கொள்ளவேண்டும்.

மனிதர்களுக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒருநாளாகும். மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாகும். அதாவது, (அதிகாலை 4 மணி முதல் 6 மணிவரை) இது பிரம முகூர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. (இரவுக்காலம் முடிகின்ற வைகறைப் பொழுது) இக்காலைப் பொழுதில் தேவர்கள் இறைவனை வழிபடுவார்கள் என நம்பப்படுகிறது. தேவர்களுக்கே பிரமமுகூர்த்தம் ஆகையால் மார்கழி மாதம் மானுடருக்கு மிகவும் சிறந்ததாகப் புராண சாத்திரங்கள் கூறுகின்றன.

மார்கழி மாதத்தை பீடு மாதம் என்று கூறுவார்கள். பீடு என்றால், பெருமை என்று பொருள்படும். இதனால் பெருமைமிக்க மாதமாகக் கருதப்படுகிறது. நாளடைவில் இது மருவி பீடை மாதம் என ஆகிவிட்டது. மார்கழி மாதத்தில் சூரிய உதயத்துக்கு முன் (பிரம முகூர்த்தத்தில்) புவியின் சக்தியில் ஏற்படுகின்ற சில மாற்றங்களினால் “ஓசோன்” என்கின்ற இரசாயன வாயுப் படலம் உருவாக்கப்பட்டு காற்றில் நிறைந்திருப்பதால் காற்று சுத்தமாக்கப்படுகிறது என்று விஞ்ஞானம் கூறுகிறது. மாசுபடிந்த காற்றைச் சுவாசிப்பதால் நமது உடலுக்குப் பல தீமைகள் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து கொண்ட நம் பழங்குடியினர் இக்காலத்தில் அதிகாலையில் எழுந்து சுத்தமான காற்றைச் சுவாசிப்பதால் நம் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாகிறது என்பதனைக் கண்டறிந்தனர். இதனால் அதிகாலையில் எழுந்து நடைப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி செய்வது நன்று என வழக்கப்படுத்திக் கொண்டனர். இந்த அறிவியலின் அடிப்படையில் அனைவரும் எளிமையான முறையில் இயற்கைச் சக்தியைப் பெறுவதற்காகவே பெண்கள் அதிகாலைப் பொழுதில் எழுந்து குளித்து நீராடி கோலமிட்டு விளக்கேற்றி மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களைப் பாடுவார்கள். வைணவர்கள் ஆழ்வார்கள் பாசுரங்களைப் பாடி மகிழ்வர். எல்லோரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனைகள், பஜனைகள் செய்து வழிபடுவார்கள்.

ஆண்டாள் வைகறைப் பொழுதில் எழுந்து நாளுக்கொரு பாசுரமாகத் திருப்பாவை பாடி மகாவிஷ்ணுவைத் திருமணம் புரிந்து கொண்டதும் மார்கழி மாதத்தில் தான் எனக் கூறப்பட்டுள்ளது. இறை வழிபாட்டிற்கு உகந்த மாதம் ஆகையால் இம்மாதத்தில் இறைவனை வழிபடுவதைத் தவிர வேறெந்த மங்களகரமான நிகழ்ச்சிகளையும் செய்யக்கூடாது என்று சுப நிகழ்ச்சிகளைத் தவிர்த்தனர் நம் முன்னோர். இவ்வாறான நன்மைகளையும், சிறப்புக்களையும் கருதியே மார்கழி பக்திக்குரிய மாதம் என்றும், இறை வழிபாட்டுக்குரிய மாதம் என்றும் கூறப்பட்டுள்ளது. இறையாற்றல் நிரம்பப்பெற்ற தெய்வீக மாதமாகவும், ஆன்மீக மாதமாகவும் மார்கழி கொண்டாடப்படுகிறது. இக்காலத்தில் செய்யப்படும் இறைவழிபாட்டுக்குப் பல புண்ணியங்களைச் சேர்க்கும் தன்மை உண்டு என நம்பப்படுகிறது.

மார்கழி மாதத்தில் கன்னிப்பெண்கள் பாவை நோன்பு இருந்து இறைவனை வழிபட்டு வந்தால் விரைவில் திருமணம் நடைபெறும் என்பது ஒரு நம்பிக்கை.

பெண்கள் கோலம் இடும் பொழுது, அரிசிமா, தேங்காய்ப்பூ போன்றவற்றைப் பயன்படுத்துவார்கள். இவை குளிர்காலத்தில் ஈ, எறும்பு போன்ற சிறு பிராணிகளுக்கும், பறவைகளுக்கும் உணவாகின்றன. இது தர்மத்துக்கான செயலாகும். அன்னதானத்துக்குச் சமமானதாகும்.

நிலத்தை மெழுகும் போது பசுவின் சாணத்தைப் பயன்படுத்துவார்கள். பசுவின் சாணம் சிறந்த கிருமிநாசினி ஆகும். நமக்கு ஏற்படக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது. இவ்வாறாக அறிவியலோடு ஆன்மிகத்தை இணைத்து வாழ்வியலை அமைத்தனர் நம் முன்னோர்கள்.

மார்கழி மாதத்தில் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் "ஆருத்ரா தரிசனமும்" ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் "வைகுண்ட ஏகாதசியும்" வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. திருவாதிரை, அநுமன் ஜயந்தி, ஏகாதசி ஆகியவை மார்கழி மாதத்தில் வரும் வேறுசில விசேட நாள்களாகும்.

மார்கழி மாதத்துக்குப் பல புராணச் சிறப்புக்களும் உண்டு. மகாபாரத யுத்தம் மார்கழி மாதத்தில் தான் நடைபெற்றதாகப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன. தேவர்கள் பாற்கடலைக் கடைந்த போது எழுந்த விஷத்தை சிவபெருமான் உண்டு உலக மக்களைக் காப்பாற்றியதும் இம் மாதத்தில் என்றே கூறப்படுகிறது.

மரணத்தை வென்ற மார்க்கண்டேயர் பிறந்ததும் மார்கழியிலேயே! அகில உலகத்தையும் தன் கண் பார்வையினால் வாழ வைப்பவனாகிய கண்ணபிரான் தேவர்களின் வழிபாட்டுக்குரிய காலம் ஆகையினால் "மாதங்களில் நான் மார்கழி" என்று கீதையிலே கூறியுள்ளார். "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளாம்" என்று திருப்பாவையில் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக, சைவ சமயத்தில் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவெம்பாவையில் ஆன்மாவுக்கும், இறைவனுக்கும் இடையிலுள்ள சக்தியை எடுத்துரைத்து ஆன்மா இறை நிலையை அடைவதற்கான வழியை மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். இத்திருப்பாடல்கள் மார்கழி மாதத்தில் பாடப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

இத்தகைய புராணச் சிறப்புகளும், அறிவியல் உண்மைகளும், தெய்வீகத் தன்மையும் நிறைந்த "மகத்தான மார்கழி"யைத் தவறவிடாது காணுகின்ற கண்ணுக்கும், காணாத கருத்துக்கும் அப்பாற்பட்ட பரம்பொருளைப் பக்தியுடன் வணங்கி நற்கதி அடைவோமாக!



# பெரிய புராணம் சொல்லும் பண்பாடு

திரு ச ஆனந்ததியாகர்

**17.05.2021 அன்று சைவ முன்னேற்றச் சங்கம் நடத்திய சேக்கிழார் குருபூசையுடன் பெரியபுராணத் தொடர்ச் சொற் பொழிவின் நிறைவுவிழாவும் நடைபெற்றது. அந்நிகழ்வில் சங்க நால்வர் தமிழ்க் கலைநிலைய மாணவர்கள் பன்னிருவர் பங்கேற்று உரைச்சித்திரம் வழங்கினார்கள். அதன் உள்ளடக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.**



திருச்சிற்றம்பலம்

"மாசிலாத மணி திகழ் மேனி மேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளங்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்"

**பண்பாடு:**

வழிபடு என்பது வழிபாடு என்றும், கட்டுப்படு என்பது கட்டுப்பாடு என்றும் வழங்கப்படுவது போன்றே பண்படு என்பது பண்பாடு எனப்படும். பண்பாடு என்பதைப் பண்பு, குணம், இயல்பு, தன்மை, அழகு, முறைமை, நற்செய்கை என்றும் விளக்கலாம். ஒன்றைப் பண்படுத்தினால் அது செப்பமாகும்; சீர்திருத்தப்படும். பண்பு பண்படுதலால் பண்பாடாகின்றது. நிலத்தைப் பண்படுத்துவது போல் உள்ளத்தைப் பண்படுத்துவதால் பண்பட்ட மனம், பண்பட்ட மனிதப்பாங்கு உருவாகின்றது.

தனது குண நலன்களை உயர்த்துவதிலும், தன்னுடன் சூழ உள்ள உறவுகளின் நலன்களில் பங்கெடுப்பதும் அதில் கவனம் செலுத்துவதும் பண்பாடாகும். எம்மில் ஆழமான ஆனால் நுண்ணிய மாற்றங்களைப் பண்பாடு செய்கின்றது. உயர்ந்தோர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறை பண்பாடாகும். நல்ல நாகரிகத்தையும் பண்பாடு என்று சொல்வோரும் உண்டு. இவ்வாறே இயல்பு, சால்பு என்ற சொற்களும் பண்பைக் குறிக்கின்றன.

இன்று புற வளர்ச்சியுடன் நாகரிகம் என்ற சொல்லை நாம் தொடர்புபடுத்தினாலும் அக வளர்ச்சியையும் நாகரிகம் என்ற சொல் குறிக்கின்றது. என்னை நான் அலங்காரப்படுத்தி ஒப்பனை செய்து விழாவிற்குப் போவது நாகரிகம். அங்கு பெரியவர்களை மதித்து வணங்குவது பண்பாடாகும். பண்பாட்டில் பல கூறுகள் அடங்கியிருந்தாலும் எமது வாழ்க்கை, வழிபாட்டுடன் இசைந்திருப்பதால் சமயத்தில் பண்பாட்டின் முக்கியத்துவம் ஊன்றிப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். சமயத்தின் வெளிப்பாடே பண்பாடு; நல்ல பண்பாட்டின் கண்ணாடியே சமய வாழ்க்கை. இறை நெறியே பண்பாட்டின் அமைப்பு.

பெரிய புராணத்தில் பண்பாட்டின் முக்கிய நிகழ்வுகளை ஒவ்வொரு நாயன்மாருடைய வாழ்க்கை முறைகளிலும் காணலாம். அவர்கள் செய்த செயற்கரிய செயல்கள் எல்லாம் பண்பாட்டைக் காப்பாற்ற அவர்கள் செய்த தியாகத்தையே காட்டி நிற்கின்றன.
இதை விளக்க முதலில் சிலவற்றை தொகுத்து வகைப்படுத்திக் கொள்ளலாம்.

- தனி மனிதப் பண்பாடு
- கூட்டு வாழ்க்கைப் பண்பாடு
- கணவன் மனைவி உறவில் பண்பாடு
- சமுதாயத்தில் பெண்களின் பண்பாடு
- மன்னர்களின் பண்பாடு
- இனியவை கூறும் பண்பாடு
- சைவ நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும் பண்பாடு

என்ற சில தலைப்புக்களை மட்டுமே நாம் எடுத்துக் கொண்டு உங்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

**தனி மனிதப் பண்பாடு:**

அமர்நீதி நாயனார் வரலாறு காட்டும் நெறியல்லவா தனிமனிதப் பண்பாடு! "அடியவர் அடிமைத் தொண்டும் ஒத்ததால் ஒத்து நேர் நின்றதத் துலைதான்" என்றார் சேக்கிழார். இது ஒருவர் சொன்ன சொல்லைக் காக்கும் பண்பாடு. "முன்பு இவர் மேல் காணாத வெண்திருநீற்றின் பொலிவு கண்டு வணங்கியவர்" அல்லவா ஏனாதிநாத நாயனார். இது உயிர் இழக்கத் துணியும் பண்பாடு. "பேறின் இதன் மேல் உண்டோ ? ஏறுயர்த்தவர் தம் கையால் பிடித்த பெருமை. என் வலத்தில் மாறிலாய் நிற்க!" என்றார் சிவபெருமான் என்றால் கண்ணப்பரின் பண்புக்கு ஈடு உண்டோ? அது உறுப்பிழக்கத் துணியும் பண்பாட்டைக் காட்டுகின்றது. கலயனார் தம் ஒருப்பாடு கண்ட போதே "அண்ணலார் நேரே நின்றார்" என்று சேக்கிழார் பாடியது மன்னர்க்கு சிவனடியார் உதவும் பண்பைக் காட்டுகின்றது.

எங்குற்றார்? அப்பர்? எனக் கேட்டு, அப்பரே எனச் சம்பந்தரும், அடியேன் என்று நாவுக்கரசரும் ஒருவரை ஒருவர் பணிவில் முந்தும் பண்பாடு பெரிய புராணத்தில் பணிவை சொல்லித்தரும் இடம் அல்லவா? பணிவு வணங்கத்தக்க பண்பு என்று சேக்கிழார் சித்திரிக்கின்றார்.

தன் துயர் மறைத்துச் சிவனடியாரை ஓம்பியவர் அல்லவா அப்பூதியடிகள். மகனை இழந்த நிலையிலும் அமுது செய்விக்க வேண்டும் என்ற கொள்கையைச் சேக்கிழார் சொன்ன முறை என்னே அழகு? "இப்போது இங்கு அவன் உதவான்" என்றாரே! அப்பூதியடிகள் காட்டிய அமுது செய்விக்கும் பண்பாட்டின் மகிமைதான் எவ்வளவு உயர்ந்தது!
சேக்கிழார் சொல்கின்ற கன்னியின் பண்பாடும், சம்பந்தப் பெருமான் அவள் மெலிவு தீர்த்து திருமருகலில் காதலனை உயிர்ப்பித்த சமுதாயப் பண்பும் உயிர் வரச் செய்து உதவியமையும் நாம் கவனிக்க வேண்டியவை.
அருமையால் அடியேன் பெற்ற மகளைத் திருமணம் செய்க எனச் சிவநேசர் வேண்டிய போது அவள் எனக்கு மகள் என்ற சம்பந்தரின் தெய்வப் பண்பு உலகம் கவனத்தில் எடுத்துப் போற்ற வேண்டிய பண்பாடாகும் அது உயிர்பித்த பெண்ணை மகளாக்கிய பேராண்மை.

**கூட்டு வாழ்க்கைப் பண்பாடு:**

"அரசு கொள் கடன்கள் ஆற்றி மிகுதி கொண்டு அறங்கள் பேணி" வாழ்ந்த உயர் தன்மை சோழ நாட்டு மக்களின் பண்பாடு என்று சேக்கிழார் புகழ்ந்து பாடியுள்ளார். இது கூட்டு வாழ்க்கைப் பண்பாடாகும்.

“கேடும் ஆக்கமும் கெட்ட திருவில்” என்று திருவாரூரின் அடியார் பெருமை பாடியதை நாம் அறிவோம் அல்லவா? அடியார் பண்பு எது என்று ஒரு கேள்வி எழுமானால் அதற்கு இதுதான் விளக்கம் என்று பெரியபுராணம் சொல்கின்றது.

அடியாருக்காகப் பாகர் மூவரையும், செலுத்திய இருவரையம் கொன்ற எறிபத்தரின் பண்பாட்டை சேக்கிழார் புகழ்ந்துள்ளார். அது தவறிழைத்தார் எவரேனும் அவரைத் தண்டிக்கும் நேர்மைப் பண்பு.
கலிக்கம்பரும், கோட்புலியனாரும் உற்றவரையும் தண்டித்து அறம் காத்த பண்பையும் கோடிட்டுக் காட்டியுள்ளார் தெய்வச் சேக்கிழார்.

ஆரூரன் மறையவருக்கு அடிமைதான் எனத் தீர்ப்பளித்தனர் அவையினர். இது நீதிக்குக் கட்டுப்படும் பண்பாட்டைக் காட்டுகிறது. பழையனூர் வேளாளர் எழுபது பேர் வணிகனுக்காக உயிர் இழந்த வரலாறு புராணத்தில் மக்கள் சொல் காத்த பண்பைக் காட்டுகின்றது. விலங்குகளின் விந்தைப் பண்பாட்டையும் சேக்கிழார் பாடத் தவறவில்லை. சாத்தனூரில் மேய்ப்பானின்றிக் “கோ” குலங்கள் வந்தணைந்து கதறியமை கூறிய சேக்கிழார் விலங்குகளின் மன நிலையை வியந்த அநுபவம் அது. அரகர அரகர என்று ஒலி செய்து நாவுக்கரசரை வரவேற்ற நந்தவனத்துக் கிளிகளின் பண்பையும் போற்றிப் பாடினார் ஆசிரியர்.

“மாதரார் தாமிருந்த இடவகையில் தனி புகுதோம்” என்று காட்டுவது தழிழ் பண்பல்லவா? இது மகளிரை மதிக்கும் பண்பாடு. அதே இல்லத்தில் பின்பு அமுதுண்ண அழைத்த போது
“ஈங்கு நமக்கு தனி உண்ண ஒண்ணாது” என்ற ஈசனின் பாங்கு உடன் உண்ணும் பண்பாடல்லவா! சேக்கிழார், நாயன்மார்கள் வாழ்ந்த, அவதரித்த அவ்வவ் ஊர் மக்களின் பண்பாட்டையம் பெரிய புராணத்தில் உரைத்துள்ளார்.

கணவன் மனைவி உறவில் அவர்கள் காப்பாற்ற வேண்டிய பண்பாட்டைக் காட்டுகிறது பெரிய புராணம். இல்லறமாம் நல்லறத்தை புகழ்ந்து பாடியுள்ளார் சேக்கிழார். காஞ்சி காமகோட்டத்தில் திருக்கையால் தடுத்தும் நில்லாமை கண்டு வெள்ளம் பாயாமல் தடுக்கத் தன்னையே கொடுத்த தகைமைப் பண்பைக் காணலாம். அன்பால் ஈசனைக் காக்க, கணவனைத் தழுவிக் கொண்ட மனையாளாக அன்னை தன்னைக் காட்டுகின்றாள்.

“மாதவம் செய்த தென் திசை வாழந்திடவும் தீதிலாதத் திருத் தொண்டத் தொகை தரவும்” ஆரூரரைப் பெற்றளித்த பண்பு தெளிவாகத் தெரிகின்றது. இது நன் மக்களை ஈன்று நெறி காக்கும் பண்பு. நாவுக்கரசரை ஈன்று புகழடைந்த புகழனாரும் மாதினியாரும், சீர்காழியில் சம்பந்தரின் அருமைப் பெற்றோரும் காட்டியது சிவ நெறிக்காக மக்களைத் தந்த பண்பாகும். அரிவாட்டாயரும் அவர் மனைவியாரும் இறைவருக்கு ஒன்றிச் செய்த சிவபூசையானது இணைந்து சிவத் தொண்டு செய்யும் இல்லறத்தைக் காட்டுகின்றது.

வறுமையிலும் மாரி காலத்து இரவில் “பகல் வித்திய செந்நெல் மல்லல் நீர் முளை வாரி” விருந்தளித்த இல்லறம் இளையான்குடியில் வளர்ந்த பண்பல்லவா!“யாதொன்றும் இல்லையாகி இரு பகல் உணவு இன்றி” மக்களொடு துன்புற்ற போது “தாலி கொடுத்து நெற் கொள்ளும்” என்றாரே! அந்த வறுமையில் மனைவி செய்த தியாகம் வறுமையைத் தாங்கும் நெஞ்சுறுதி காட்டும் இல்லறத்தின் நெறி அது. “தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்” என்றதால் “மாதரார் தம்மை மனத்தினும் தீண்டேன்” என்ற திருநீலகண்டரதும் அவர் மனைவியாரதும் மாட்சிமை எமக்குக் காட்டுவது என்ன? இல்லறம் காக்கத் தீண்டாது வாழ்ந்த இருவரின் பெருமை காட்டுகின்ற புராணத்தின் சிறப்பல்லவா அது.

தென்னவன் கூன்பாண்டியருடன் சைவப் பண்பைக் கைவிடாமல் வாழ்ந்த மங்கையர்க்கரசியார் அகத்தில் ஒற்றுமையும், புறத்தில் வேற்றுமையும் கொண்டு வாழ்ந்த முறைமையை நாம் போற்றிப் பேச வேண்டும். ஒத்த கருத்துடையவராக இணைந்து வாழ்ந்த திருச்செங்காட்டங்குடிச் சிறுத்தொண்டரும் அவர் மனைவி திருவெண்காட்டு நங்கையும் காட்டிய மனையறத்தின் பண்பு செயற்கரிய செய்த பெருமை பெற்ற சிவ நெறி காத்த பண்பாடு.

**சமுதாயத்தில் பெண்களின் பண்பாடும் மகளிரின் தனிச் சிறப்பும்:**
இசைஞானியார், பரவையார், சங்கிலியார், தத்தை, மாதினியார், திலகவதியார், காரைக்காலம்மையார், பகவதியார், மங்கையர்க்கரசியார், பூம்பாவை, சிங்கடியார், வனப் பகையார், திருவெண்காட்டு நங்கை, சந்தனமாம் தையலார், மதங்க சூளாமணியார் என்பவர்கள் பெரிய புராணத்துள் பெயர் குறிப்பிடப்பட்ட பெண்கள்; குலப் பெருமை மிக்கவர்கள். பெயர் குறிப்பிடப்படாத திருநீலகண்ட குயவனாரின் மனைவி, அமர்நீதி நாயனாரின் மனைவி, அரிவாட்டயாரின் மனைவி, இயற்பகையார், மானக்கஞ்சாறனார், அப்பூதியடிகள் போன்ற செயற்கரிய செய்தவர்களின் வாழ்க்கைத் துணைநலமாக இருந்த பல பெண்கள் பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்த நல்லியல்பினராவார்கள்.

“அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்து உயிர்க்கும் அருள் தாங்கி” வாழ்ந்த திலகவதியார், திருமணம் நின்றபின் இறையருள் பரப்பி வாழ்ந்த நங்கை அல்லவா? அவர் காட்டிய தொண்டு வாழ்க்கை நாம் பார்த்து உணர்ந்து உய்ய வேண்டிய பண்பாகும். “எய்த வருங் கனி அளித்தார் யார்?” என்னும் கணவனுக்கு “செய்த படி சொல்வதே கடன்” என்றார் புனிதவதியார்.

தன்னைத் துறந்த கணவன் ஈங்கிவன் குறித்த கொள்கை இது. போற்றும் பேய் வடிவு அடியேனுக்கு வேண்டும் என்றார் அல்லவா? ஈசனைப் பேணும் பேறுபெற்ற அம்மையார் பண்பு சேக்கிழார் காட்டும் புனிதவதியாருடைய தனித்தன்மையாகும். இங்கு கணவரால் கைவிடப்பெற்ற பெண்கள் காட்டிய பண்பாட்டை சேக்கிழார் பாடிய அழகு தனி அல்லவா?

துறவு வாழ்க்கை ஏற்று வாழ்ந்து காட்டிய மாதர்களும்,
கணவரால் கைவிடப்பட்ட பெண்மை காட்டித்தந்த பண்பாடும்,
குழந்தையை அரியக் கொடுத்த பெண் ஒருவரின் குலப் பெருமை
இவை எல்லாம் நாம் படித்து அனுபவிக்க வேண்டிய அம்சங்கள்.

**மன்னர்களின் பண்பாடு**

“மாநிலங் காவலன் ஆவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லனோ!”

ஒரு மன்னன் அரசாட்சி செய்யும் போது அவனால் அம் மன்னனுடைய உறவினர்களால், பகைவர்களால், கள்வரால், வேறு உயிர்களால் வரும் பயம் ஐந்தும் தீர்த்து அரசாள வேண்டும் என்ற மிக முக்கிய பண்பாட்டைத் திருநகர்ச் சிறப்பில் சேக்கிழார் சொல்லிப் பாராட்டியுள்ளார். திருப்பள்ளித்தாமத்தைச் சிதறிய களிற்றை கொன்ற பத்தர் என்னையும் கொன்று அருளும் என்ற புகழ்ச் சோழர் பண்பும், தத்தா! அவர் நமர்! எனத் தடுத்த சேதி நாட்டு அரசர் மெய்ப்பொருள் நாயனார் காட்டிய நெறியும், “அடி வண்ணான் என்ன”, சேரர் பிரானும் “அடிச் சேரன் திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தீர்” என்று தாழ்ந்தோரைப் பணியும் மன்னரின் பண்பும் நாம் படித்து உணர சேக்கிழார் தந்துள்ள செல்வங்கள்.

மனக் கோயில் கட்டியவரிடம் கற்கோயில் கட்டிய காடவர் கோமான் காட்டிய பணிவும் மனம் மாறித் தவறுக்கு வருந்திய மன்னர் நாவுக்கரசருக்குத் தீங்கிழைத்த தவறை உணர்ந்து திருந்தி குணபரவீரச்சரம் ஆலயம் எழுப்பிய பல்லவனின் பெருந்தன்மையும், திருநீறு சாத்தி மந்திரமாவது நீறு எனச் சிவத்தின் பெருமை உணர்ந்து உய்ந்த பாண்டியராம் நின்ற சீர் நெடுமாறனார் பாங்கும் பாராட்டப்பட வேண்டியவை.

இவை எமக்கு அரசாட்சியும் அறமும் எப்படி ஒன்றினுக்கு மற்றையது துணையாக இருக்கவேண்டும் என ஒரு நாட்டின் மக்களையும், அங்கு நிலவ வேண்டிய அற வழிகளையும் சொல்லித் தருகின்றன அல்லவா?

**இனியவை கூறும் பண்பாடு:**

பெரியவர்களின் குறையினைக் கடிந்துகூறாத பண்பு சேக்கிழாரின் சொல் ஆட்சியில் காணக்கூடியதாக இருக்கின்றது. "இன்பத் துறையில் எளியர்" என்பது மங்கலமாகச் சொல்லிச் சிறப்பிக்கும் தனிப் பண்பு. "தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய" என்றது கொல்ல முனைந்தான் என்பதைச் சொல்லாமல் தவிர்த்த நல்ல பண்பல்லவா? இவ்வாறே பாண்டி நாடு தீ நெறியில் அழுந்திய நாடு என்று சொல்லாது "நன்று இல்லாத நெறியில் அழுந்திய நாடு" என்றமையும் கவனிக்கத் தக்கவை.

ஊர்ப் புலமைத் தொழில் செய்த ஒப்பிலவர் நந்தனாரை அர், ஆர் என்று மரியாதை விகுதி கொடுத்து ஒரு பாடலுக்குள் ஒன்பது இடங்களில் மரியாதை அளித்துப் பாடிய பண்பு அவர்களை உயர்த்திக் கூறி நல்லெண்ணம் பரப்பும் பண்பாகும். திண்ணனார் ஆற்று நீர் எடுத்து வந்த செய்தியை "மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு" என்றும், "மஞ்சன நீர் தன்னை விளைத்த அன்பு உமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார்" என்றும் முறைமை உயர்ந்த சொற்களைக் கொண்டு அழகுத் தமிழால் பாடிய சைவவழி சேக்கிழார் வழியாகும். ஐயர் எனும் மறைச் சொல்லை நந்தனாருக்கும், திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும், கண்ணப்பருக்கும் மட்டுமே வழங்கிய பெரியபுராணத்துச் சிறப்பு, மரியாதைச் சொற்களை தேர்ந்தெடுத்துக் கையாண்ட புலமையைக் காட்டுகின்றது.

"மானுடம் இவர் தாம் அல்லர்" என்று காரைக்கால் அம்மையாரைப் பார்த்து கணவன் சொன்னமை மனைவிக்கு மரியாதை சொல்லிய பண்பு. "இப்போது இங்கவன் உதவான்" என்பது பொய் தோன்றாமல் புகலும் பண்பு. "பையவே சென்று பாண்டியற்காக" என்று பாடியது மென்மையாகச் சொல்லி விளக்கும் பண்பு. தண்டியடிகளை குருடர் எனக் கூறாது "கண்காணார்", "அந்தமில்லா அறிவுடையார்" என்று விழித்தமை புண்படுத்தாது தெரிவிக்கும் பண்பு.
தகுதிக்கு ஏற்பத் தகைமை உரைக்கும் முறையை கழற்சிங்கரின் மனைவியைக் குறிப்பிடும் போது "எடுத்து மோந்தனளாம்", "சாயல் மாமயிலே போல்வாள்" என்று அவளுடைய குற்றத்திற்கு ஏற்ப செப்பிய தன்மையைக் காட்டுகின்றது.

**சைவ நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும் பண்பாடு:**

சைவ நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும் பண்பாடு ஒரு சமயப் பண்பாடு என்பதைச் சேக்கிழார் காட்டியுள்ளார் திருநீற்றின் பெருமையையும், அதனை அணியும் முறைகளும், பூசும் திருநீற்றின் வகைகள், அதன் மகிமை என்று சைவத்தின் சமயச் சின்னத்தை உயர்த்தி வைத்த பெரியபுராணம் எங்களுக்கு ஒரு வழிகாட்டியாகும். கண்டிகை அணியும் அடியார் மாண்பு, அவர்கள் கைக்கொண்ட கொள்கை என்பவை உருத்திராக்கத்தின் உண்மையை எங்களுக்குச் சொல்லித் தருகின்றது.

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்" அடியார் தமை அமுது செய்வித்தல் என்று வரைவிலக்கணம் செதுக்கியவர் சொன்னமை திருவமுது செய்விக்கும் பணியை, பசி போக்கும் புனிதப் பணியை உலகத்திற்கு எடுத்துக் காட்டும் பண்பாடாகும்.
அடியார் உடுப்பன தெரிந்து அவர்களுக்கு ஆடை அளிக்க வேண்டும் என்ற பண்பை புராணத்தின் வரலாறுகளில் நாம் காணலாம். மடங்கள் நிறுவித் திருப்பணி செய்தல் சைவனின் கடமை என்று சொல்லி வைத்தார் சேக்கிழார்.
விளக்கேற்றி ஆலயத்தில் இறைவனைப் பரவிய கணம் புல்லர் "வகையால் மனம் ஒன்றித் திருமுடியையே" அளித்ததையும் "வேட்கை போக்கி வளமருவும் நிழல் தரு தண்ணீர்ப் பந்தர் அமைத்த" சிவப்பணியையும் சேக்கிழார் போற்றிப் பரவியுள்ளார்.

கா வளர்த்தும், குளம் தொட்டும், நந்தவனம், சோலை அமைத்தும் அடியாருக்கும், சிவபெருமானுக்கும் தொண்டு புரிதல் உயர்ந்த பண்பாடு என பெரியபுராணத்துள் புகழப்படுகின்றது.

"புலர்வதன் முன் திருவலகுப் பணி மாறிப் புனிறகன்ற நலமலி ஆன் சாணத்தால் நன்கு திருமெழுக்கிட்டு" என்று சேக்கிழார் பாடித் திருவலகிடுவதையும் மெழுக்கிடுவதையும் பாராட்டியமையும், "மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்து பலர் புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார்" என்பதும் சரியைத் தொண்டின் முக்கியத்துவத்தை எங்களுக்கு உணர்த்துகின்றன.

பெரியபுராணம் பண்பாட்டைக் கண்ணாடியாகக் காட்டி நிற்கின்றது என்றால் மிகையல்ல. அடியார் பெருமை சொல்ல வந்த சேக்கிழார் பெருமான் அதன் வாயிலாக சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பாடித் தந்துள்ளார் என்பதை ஒரு சில உதாரணங்கள் வாயிலாக சிறுவர்கள் நாம் இங்கு பகிர்ந்து கொள்ள முயன்றோம்.

"சங்கரனைச் சார்ந்த கதை தான் கேட்கும் தன்மையராய்
அங்கணனை மிக விரும்பி அயல் அறியா அன்பினால்
கங்கை நதி மதி இதழி காதலிக்கும் திருமுடியார்
செங்கமல மலர்ப் பாதம் சேர்வதனுக்கு உரியார்கள்"

மாணவர்கள் அனைவர் சார்பாகவும் இந்த வாய்ப்பிற்கு பணிவான நன்றியைத் தெரிவித்து நிறைவு செய்கின்றோம்.

நன்றி வணக்கம்.

உதவிய நூல்கள்:

1. திருத்தொண்டர் புராணம். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், 1954
2. பன்னிரு திருமுறைகள். இராம.லெட்சுமணன், சகுந்தலை நிலையம், மண்ணடி, சென்னை. 2017
3. பெரியபுராணம் காட்டும் பண்பு.,டாக்டர்.சொ. பரமசிவம், பட்டுப் பதிப்பகம், சென்னை, 1992.
4. இந்து சமய பாடம். நா. கணபதிப்பிள்ளை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, 1973

# மகாகவி பாரதியாரின் அதீத பக்தி

## அநுஜா

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்” என்று ஆசைப்பட்டார் கவிஞர் பாரதி. அவரின் கனவு இன்று நனவாகி உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழரின் முயற்சியால் தமிழ் வளர்கிறது. பாரதியார் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மனிதநேயம் மிக்கவர் என்பதை எவரும் அறிவர். ஆனால் அவரின் அதீத கடவுள் பக்தியையும், ஆன்மிகத்தில் உயர் நிலையையும் அவரது பக்திக் பாடல்களைப் படித்து உணர்ந்தால் மட்டுமே அறிய முடியும். இந்து சமயத்தில் பல தெய்வ வழிபாடு பண்டுதொட்டே இருந்துவருகிறது. இவர் அந்த எல்லாக் கடவுளரையும் போற்றிப் பாடியுள்ளார். கண்ணன் மீதுகொண்ட தீவிர பக்தியினால் பல உறவு முறைகளில் கண்ணனைக் கற்பனை செய்து பாடியுள்ளார்.

பக்தியினால் நாம் பெறக்கூடும் நன்மைகள் எவை என்பதைப் பின்வரும் பாடல் கூறுகிறது.

பக்தியினாலே தெய்வ பக்தியினாலே - இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி
சித்தம் தெளியும் - இங்கு
செய்கையனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் - நல்ல
வீரருறவு கிடைத்திடும் மனத்திடைத்
தத்துவமுண்டாகும் - நெஞ்சில்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்



கணபதியை வணங்கி அவர் கேட்கும் வரம் எது? மனதிற் சஞ்சலம் இல்லாமல் மதியில் (அறிவில்) இருளே தோன்றாமல் நினைக்கும்பொழுது நின் மவுன நிலை வந்திட “நீ செயல் வேண்டும்”.

எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பேன் கேளாய் கணபதி
மனத்திற் சலன மில்லாமல் மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன நிலைவந் திடநீ செயல் வேண்டும்
கனக்குஞ் செல்வம் நூறுவயது இவையும் தரநீ கடவாய்

“சும்மா இரு சொல்லற” என்பதுபோல முழுமனதாகத் தியானிக்கும் திறத்தை வேண்டி நிற்கிறார் அவர். தவஞ்செய்து இறைவனை அடைய ஏங்கும் பாரதியார், சிவனிடமே தமக்கு அபயம் அளித்து அருளும்படி வேண்டுகிறார்.

தவமே புரியும் வகையறியேன் சலியாதுற நெஞ்சறியாது
சிவமே நாடிப் பொழுதனைத்துந் தயங்கித் தயங்கி நிற்பேனை
நவமாமணிகள் புனைந்த முடி நாதா கருணாலயனே தத்
துவமாகிய பிரணவமே அஞ்சேலென்று சொல்லுதியே

முருகக் கடவுளைப் பிரார்த்தித்து வேண்டுவதும் தவஞ்செய்யும் திறனைத் தரும்படியே ஆகும்

முருகா முருகா முருகா
வருவாய் மயில்மீதினியே
வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறனும் தனமும் மனமும்

இயற்கை அழகை அணுவணுவாக இரசித்து மகிழ்ந்த பாரதியார், அங்கே இறைசக்தி ஊடுருவி நிற்பதையும் உணர்ந்து போற்றுகிறார்.

எத்தனை கோடியின்பம் வைத்தாய் - எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!
சித்தினை அசித்துடன் இணைத்தாய் - அங்கு
சேரும் ஐம்பூதத்து வியனுல கமைத்தாய்
அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபல நல் லழகுகள் சமைத்தாய்.

அதுமட்டுமல்லாமல் "இறையருளை முழுமையாக உணர்ந்து பக்தியினால் முத்தி பெறும் நிலை யையும் ஆக்கியுள்ளாய்." என்பதனைக் கூறுகிறது பின்வரும் பாடல்.

முத்தியென்றோரு நிலை சமைத்தாய் - அங்கு
முழுதினையும் உணரும் உணர்வ மைத்தாய்
பக்தி என்றொரு நிலை வகுத்தாய் - எங்கள்
பரமா பரமா பரமா

பக்தியின் உச்சத்தில் அடியவர்களுக்கு மெய்ஞ்ஞானம் பிறக்கும். அதனால் ஞானிகள் எங்கும் எதிலும் இறைவனையே காண்பார்கள். நந்தலாலா என்ற சிறிய பாடலில் பாரதியாரும் இயற்கையில் இறைவனைக் காணும் மனப்பக்குவம் எய்தியிருப்பதைக் காணலாம். "காக்கைச் சிறகினிலே நந்தலாலா" பாடலில், கரியநிறம் கண்ணனை நினைக்கவைக்கிறது. மரங்களைப் பார்க்குந்தோறும் கண்ணனின் பச்சைமாமலைபோல் மேனி தெரிகிறது. எங்கே எந்த ஒலி கேட்டாலும் கண்ணனின் குழலோசையாகவே அது கேட்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, நெருப்பைத் தொட்டாலும் கண்ணனைத் தொட்டுப் பார்ப்பதுபோல மகிழ்ச்சி ஏற்படுகிறது. என்னே பாரதியின் பக்தி!

விநாயகர், முருகன், கண்ணன், சிவன், சக்தி, சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை, காளி என நாம் வணங்கும் தெய்வங்கள்மீது பல பாடல்கள் பாடிப் போற்றியிருக்கிறார். ஆனால், கண்ணன்மீது பாரதியாருக்கு அளவுகடந்த பக்தி இருப்பதை, கண்ணனை அவர் எத்னையோ உறவுமுறைகளில் பாடி மகிழ்ந்ததிலிருந்து அறியமுடிகிறது. அவையாவன, கண்ணன் என் தாய், கண்ணன் என் தந்தை, கண்ணன் என் சற்குரு, கண்ணன் அரசன், கண்ணன் என் தோழன், கண்ணன் என் விளையாட்டுப்பிள்ளை, கண்ணன் சேவகன், கண்ணன் என் சீடன், கண்ணன் என் ஆண்டான், கண்ணம்மா என் குழந்தை, கண்ணன் என் காதலன், என் காதலி, கண்ணன் என் குலதெய்வம் என்பனவாகும். இவற்றுள் "கண்ணன் என் தாய்" என்றும் மிக அற்புதமானது. இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே இந்தப் பாடலில் உள்ளடக்கிச் சித்திரித்திருக்கிறார். பஞ்சபூதங்களினாலான இயற்கைத் தோற்றம், ஐம்புலன்களினால் நாம் அநுபவிக்கும் இன்பம், உலகில் வாழும் உயிரினங்கள், அவற்றின் இயல்பு, மக்களின் மூடநம்பிக்கைகள், மக்கள் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய இன்பதுன்பம், வெற்றி தோல்வி எல்லாவற்றையும் இந்தப் பாடலில் கண்ணனாகிய

தாய் கதையாகச் சொல்லி மகிழ்வதாகவும் தனக்கென்றே வழங்கப்பட்ட பொம்மைகள் என்றும் உருவகப்படுத்திக் கூறுகிறார். சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், ஆறு, மலை, கடல், கூட்டம் கூட்டமாக வானத்தில் ஓடும் மேகங்கள், உணவுப் பொருள்கள், பூக்கள் எல்லாமே தனக்குத் தாய் தந்தவை என்று பாரதியார் கூறுகிறார். அதுமட்டுமன்றி, எல்லா உயிரினங்களும் தனக்குத் தோழர் என்றும் காதலித்து மகிழவும் பிரிவில் துயருறவும் பெண்களைப் படைத்தார் என்றும், எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் நான் விரும்புமுன்பே தந்துவிடுகிறாள் என்றும் பாடுகிறார், இப்பாடலில் வரும் முதல் வரிகள் மிகவும் சுவாரஸ்யமானவை, கண்ணனாகிய தாய் பூமியாகிய மடியில் வைத்து வானமெனும் கையால் அணைத்து,

உண்ண உண்ணத் தெவிட்டாதே - அம்மை
உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்
வண்ணமுற வைத்தெனக்கே - என்தன்
வாயினிற் கொண் டூட்டுமோர் வண்மையுடையாள்
கண்ணனெனும் பெயருடையாள்

இவ்வாறே ஒவ்வொரு பாடல் வரியிலும் கண்ணனைத் தனக்கு மிக நெருங்கிய உறவினனாகச் சொல்லும் அழகே தனித்தன்மை வாய்ந்தது.

நவவித பக்திகளில் இறுதியானது ஆன்மநிவேதனம். இறைவனிடம் தன் உடல், பொருள், ஆவி யாவற்றையும் அர்ப்பணிப்பதாகும். அதேபோலப் பாரதியாரும் தன்னைச் சக்திக்கு ஆத்மசமர்ப்பணம் செய்வதாக ஒரு பாடலில் கூறுகிறார். அது ஒரு நீண்ட பாடல். உடல் உறுப்புக்களாகிய கை, கால், நெஞ்சு, வயிறு போன்றவற்றோடு மனம், மதி போன்றவற்றையும் சக்திக்குச் சமர்ப்பணம் செய்வதாக அப்பாடல் அமைந்துள்ளது.

நிறைவாக, பாரதியார் தான் குருவிடம் உபதேசம் பெற்றதை செந்தமிழில் உலகத்துக்கு உணர்த்துகிறேன் என்று கூறும் பாடல் வரிகள் பின்வருமாறு

தேசிகன்கை காட்டியெனக் குரைத்த செய்தி
    செந்தமிழில் உலகத்தார்க் குணர்த்து கின்றேன்
“வாசியை நீ கும்பகத்தால் வலியக் கட்டி
    மண்போலே சுவர்போலே வாழ்தல் வேண்டும்
தேசுடைய பரிதியுருக் கிணற்றி னுள்ளே
    தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்
பேசுவதிற் பயனில்லை அநுப வத்தால்
    பேரின்பம் எய்துவதே ஞானம்” என்றான்

39 ஆண்டுகளே உலகில் வாழ்ந்த மகாகவி வாழ்வை முழுமையாக அநுபவித்து உணர்ந்தவராக பாடல்களைப் பாடியுள்ளார். “நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்” என்று திருமூலர் கூறியதுபோல பாரதியாரும் தனது அநுபவங்களை பாடல்களாக வடித்து யாமும் படித்துப் பயனுற எங்களுக்கு அளித்துள்ளார். மனிதர்களாகிய நாம் இறைவனை அடைய எமது மனத்தை அதற்கேற்றவாறு பக்குவப்படுத்தல் அவசியமாகும். அதற்கு ஏற்ற வழிவகைகளை நாம் கடைப்பிடித்தல் வேண்டும். பாரதி பாடல்கள் அதற்குத் துணைநிற்கும்.

**(பாரதியின் நூறாவது ஆண்டு நினைவு 2021)**

# சைவமும் தமிழும்

## சிவஸ்ரீ பா வசந்தன் குருக்கள்

இன்று எமது சமயம் நிலைத்து நிற்பதற்குக் காரணமாக வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்ற வடமொழி நூல்களும், பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்தம், விநாயகர் அகவல், கந்தரநுபூதி, கந்தரலங்காரம் போன்ற தெய்வ அருட்பாடல்கள், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்ற புராணங்கள் ஆகிய பல நூல்கள் அத்திவாரமாக இருந்துள்ளன. இவற்றுள் எதையுமே நாம் தூக்கி எறிய முடியாத அளவுக்கு இவை பின்னிப் பிணைந்து சேர்ந்து வருவதைக் காணலாம். வடமொழி வல்லாளர்கள், ஓதுவார் மூர்த்திகள் போன்றோர் இம்மரபை இடைவிடாது ஆலயங்களில் பின்பற்றி வருகிறார்கள். ஆலய அறங்காவலர், உபயகாரர், அடியார்களும் இதில் பெருங்கவனம் எடுத்து வருகிறார்கள்.

இந்த நிலையைக் குழப்பச் சிலர் முயன்றாலும், இறைவனால் அருளப்பட்ட வேதங்களும் ஆகமங்களும், அவருடைய அடியார்களால் அருளப்பட்ட தமிழ்வழித் திருப்பாடல்களும் இணைந்து புனித ஆலயங்களில் உண்மைச் சைவர்களால் காப்பாற்றப்பட்டுக்கொண்டிருக்கும். வேதம் என்பது இறைவனின் வாக்கால் அருளப்பட்டு ரிஷிகளால் வெளிப்படுத்தப்பட்ட மந்திர வாக்கியங்களாகும். அதனால் இது தேவபாஷை எனப்பட்டது. வேத, ஆகமங்கள் ஆழமான தத்துவக் கருத்துக்கள் நிறைந்தவை. புரியவில்லை என்று சொல்பவர்கள் இறைவனையும் புரியாதவர்கள் என்றுதான் நாம் கருதவேண்டும். சமஸ்கிருதம் இலக்கணம், இலக்கியம் கொண்ட ஒரு மொழி. பேச்சுவழக்கில் இல்லையென்றாலும் எழுத்துவழக்கில் இன்றும் பல்கலைக் கழகங்களில் பாடமாக இருப்பதை அறியலாம். இறைவனைப்பற்றிய பல செய்திகளைத் தந்த நூல்களில் வடமொழி நூல்களுக்குப் பெரும் பங்குண்டு.

ஒருகாலத்தில் ரிஷிகள், முனிவர்கள் மத்தியில் பேச்சுவழக்கில் சமஸ்கிருதம் இருந்துள்ளது. இதற்கு உதாரணம் பதினெண்புராணங்கள். அங்கு இறைவனும் இவர்களுடன் பேசிய மொழியாக இம்மொழி திகழ்ந்துள்ளது. தேவபாஷை என்ற பெயரும் ஏற்பட்டது. அவ்வாறான வேதங்கள், புராணங்கள் என்பன வடமொழி, தென்மொழி இரண்டையும் நன்கு அறிந்த அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டன. இதற்கு நல்ல உதாரணம் மிகப் பெரிய புராணமாக விளங்கிய கந்தபுராணம். இதனைக் கச்சியப்ப சிவாசாரியார் பாடல் வழியில் ஆக்கி, தமிழின் கவித்துவத்திற்கு மிகவும் பெருமை சேர்த்தவர். இன்றுவரை, வேத விற்பன்னர்கள், ஆகம அறிஞர்கள் இவற்றைக் காப்பாற்றிக்கொள்ளும் இடமாக ஆலயங்கள், பொது மடங்கள் விளங்குகின்றன.

“இறைவனுக்குத் தமிழ் விளங்காதா?” என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அதே இறைவன்தான் ஆகமங்களில் வடமொழி மந்திரங்களை எங்கே எவ்வாறு சொல்லவேண்டும் என்று அருளியுள்ளார். நாயன்மார்கள் அற்புதங்களைச் செய்தார்கள் என்று நம்புபவர்கள் அதே நாயன்மார்கள் சொன்ன வடமொழியின் உயர்வை ஏற்க மறுப்பது அவர்களின் அறியாமையை எடுத்துக் காட்டுகிறது.

சாதாரண மக்கள் எவ்வாறு வழிபாடு செய்யவேண்டும் என்பதை வலியுறுத்துவதே ஆகமங்கள். ஒருவரது வீட்டுக்குச் செல்ல அவரே வழி சொல்வதுபோல இறைவன் தன்னை அடைவதற்குச் சொன்ன வழியே ஆகமங்கள். நாயன்மார்கள், ஞானிகளுடைய அருட்தன்மை வேறு. அவர்களோடு நம்மை ஒப்பிடுதல் பொருத்தமற்ற செயலாகும்.

ஆகமங்கள் விதிநூல்கள். திருமுறை, அருட்பாடல்கள் ஆகியவை துதிநூல்கள். விதி நூல்கள் வடமொழியில் உள்ளதால் அவற்றைக் கற்றுத் தேர்ந்து, மூவகைத் தீட்சை பெற்று, அதில் சொன்னபடி வேதாகம அடையாளங்களாகிய பஞ்சகச்சம், உருத்திராட்சம், சிகை, பூணூல், உத்தரியம் போன்றவற்றைத் தரித்து, பரார்த்த பூசையாகிய ஆலய வழிபாட்டைச் செய்தலே இறைவன் வகுத்த ஆகமச் சட்டமாக விளங்குகிறது. இதை மாற்றியமைக்க ஒரு சில வேதாகம விரோதிகள் விரும்பினாலும் உண்மைச் சைவர்கள் ஒருபோதும் மூலநிலைகளை மாற்ற விரும்பமாட்டார்கள்.

வேதங்கள், ஆகமங்கள் ஆலயங்களுடன் மிக நெருக்கமுடையவை. இவற்றுக்குத் துணையாகப் புராணங்கள், திருமுறைகள், சைவசித்தாந்தம் என்பவை மிகப்பழங்காலந் தொட்டே போற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வேதங்களில் அக்கினி வழிபாடு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகமங்களில் கும்ப வழிபாடு கூறப்பட்டுள்ளது. இவை இரண்டும் சேர்ந்து, கும்பம் - அக்னி வழிபாடாக வடமொழி நூல்களிற் சொல்லப்பட்டவையே இன்றும் ஆலயங்களிற் காணப்படுகின்றன. அவற்றைச் செய்துகொண்டு, அதே வேளை, இவை நடைபெறும்பொழுது திருமுறைகளை ஓதுவார்கள் ஓதுவதும் பலகாலம் நடைமுறையில் உள்ளது. ஒருசிலர் யாகம், கும்பம் என்று வைத்துக்கொண்டு அங்கு தாங்கள் ஞானிகள்போல, இறைவனுக்குத் தமிழ் புரியும் என்று வியாக்கியானம் செய்து இறைவன் சொன்ன முறையில் எந்தவித அநுஷ்டானமும் இல்லாமல், ஞானவாக்குகளைக் கூறாமல், தங்கள் கற்பனைச் சொற்களைப் புகுத்தி தாம் பாவந்தேடுவதோடு நில்லாமல் மக்களையும் பாவ வழிக்குள் இழுக்கிறார்கள்.

தமிழ் என்பதும் தெய்வீக மொழி. நாயன்மார்களுக்கு இறைவன் அடியெடுத்துக் கொடுத்த மொழிதான். ஆனால் திருமுறைகள் துதிப்பாடல்கள். தோத்திரப்பாடல்கள் என்ற வகைக்குள் அவை அடங்கும். சாஸ்திர விதிகளை உள்ளடக்கியவை அல்ல. இதனைப் புரியாமல், வடமொழி முறைக்குத் தமிழில் மந்திரம் என்று சொல்லித் திருமுறைகளை ஓதுவதால் திருமுறைக்குரிய மரியாதையைக் குறைப்பதோடு, இறைவனின் திருவாக்கினை அவமதிக்கும் செயலுக்கும் ஆளாகிறார்கள். தமிழர்களில் ஒருசிலர் இவ்வாறு இருந்தாலும் பெரும்பான்மையான சைவர்கள் இவர்களது கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதில்லை என்பதே உண்மை.

மேலும் சிவனை வழிபடும் தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், சிந்தி, குஜராத்தி, கன்னடம் போன்ற பிறமொழி அன்பர்கள் வேத மந்திரங்களை இறைவனின் மருந்தாகக் காதாற் கேட்டுப் பருகி இன்புறுவார்கள். தமிழ்த் திருமுறைகளிலும் அருட்பாடல்களிலும் பல வடமொழிச் சொற்கள் கலந்திருப்பதே இந்த இரு மொழிகளையும் பிரிக்க இயலாது என்பதை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

மூவகைத் தீட்சை செய்து முப்புரி நூல்த ரித்து
ஆவகை ஐந்தின் வகையால் ஆகமக் கிரியை ஆற்றி
பூவகை கையிற் கொண்டு புனிதமாம் வேதம் ஓதி
நாவகை நல்லோர் நவில நாடுகள் வளம்பெ றும்மே!

திருமுறை தன்னால் போற்றித் தினமுமே இறைவன் கருணை
பெருகவே பாடிப் பணிதல் பெருமையாம் அன்பர் கட்கு
உருவமாம் தெய்வ மூர்த்தி உணர்த்திடும் உண்மை வழியை
திருவென மதிப்போ மென்றும் திகழ்வதும் நன்மை தானே!

# செய்ந்நன்றி மறவாமை

## தில்லையூரான்

பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவநாயனார் 2000 ஆண்டுகட்கு முன்பு பெரும்பாலும் தூய செந்தமிழில் இயற்றிய திருக்குறள் நூல் இன்றும் உலகப்புகழ் பெற்று விளங்குகிறது. பதினெட்டுக்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அறிஞர்களாலும் சான்றோர்களாலும் போற்றப்படுகின்றது. தமிழ் இலக்கியங்களிற் பல திருக்குறளை மேற்கோள் காட்டுவதை நாம் அறிவோம். அது 1330 அருங்குறள்களால் 133 அதிகாரங்களைக் கொண்டு அறம் பொருள் இன்பம் என்ற முப்பால் பிரிவாக இயற்றப்பட்டுள்ளது. அறத்துப்பால் 24 அதிகாரங்களைக் கொண்டது. ஒரு அதிகாரத்தில் 10 குறள்கள் உள்ளன. செய்ந்நன்றி அறிதல் என்பது அறத்துப்பாலில் 11ஆவது அதிகாரம். அந்த அதிகாரத்துக் குறள்களில் செய்யாமற் செய்த உதவி, பயன் தூக்கார் செய்த உதவி, தினைத்துணை செய்த உதவி, உதவி வரைத்தன் றுதவி, துன்பத்துள் துப்பாயர் நட்பு, விழுமம் துடைத்தவர் நட்பு, கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த நன்று ஒன்று என 9 குறள்களால் எடுத்தோதி மகுடம் வைத்தாற்போல்

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

என்று பத்தாவது குறளை அமைத்துள்ளார். முதற் குறளில் கூறப்பட்ட செய்யாமற் செய்த உதவிதான் இக்குறளிற் காட்டப்பட்டுள்ளது என்று நாம் நம்பலாம். பெரும்பாலும் உலகியல் நடைமுறையை வைத்து இந்த அதிகாரம் வகுக்கப்பட்டுள்ளது என்று எண்ண இடமுண்டு.

இந்தச் செய்ந்நன்றி அறிதல் ஆன்மிக இயல் சைவசித்தாந்தத்தில் எப்படிக் கையாளப் பட்டுள்ளது என்பதை ஒரு எடுத்துக்காட்டால் மட்டும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உயிர்கள் ஆதியில் மும்மலத்தினாலும் பந்திக்கப்பட்டு இருட்டறையில் கண்ணில்லாக் குழவிகள் போல் வருந்திக்கொண்டிருக்கும். அப்பொழுது. அவ்வுயிர்கள்மேல் கழிவிரக்கம் கொண்டு சர்வசீவ தயாபரனான சிவபெருமான் தன்னின் என்றும் பிரிவறியாப் பராசக்தியின் ஒரு கூறாகிய சிவசக்தியைத் தன் ஆணையால் அவ்வுயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களை மாயையினின்றும் தோற்றுவிக்கச் செய்வார். அதன்மூலம் ஆணவ மலமறைப்பை வலிகுன்றச்செய்யும் பேருபகாரத்தைச் செய்துகொண்டிருக்கிறார். அவ்வுயிர்கள் மாநுடப் பிறப்பெய்தி உய்வதற்கு எல்லையற்ற முயற்சியுடன் கூடிய தவம் செய்திருக்க வேண்டும். இதனை, சைவசித்தாந்த நூல் சிவஞான சித்தியார் ஒரு திருவிருத்தத்தில்

“அண்டசம் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயு தத்தோ (டு)
எண்தரு நால் எண்பத்து நான்குநூ றாயி ரத்தால்
உண்டுபல் யோனியெல்லாம் ஒழித்துமா நுடத்து தித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரி யங்காண்”

என்று இயம்புகிறது.

ஔவைப் பிராட்டியார், “அரிது அரிது மானிடராகப் பிறப்பது அரிது” என்றும் திருவள்ளுவர், “பிறவிப் பெருங்கடல் நீந்துவர்” என்றும் கூறியிருப்பதை நாம் காணலாம். மாநுடப்பிறவி

எதற்காகத் தரப்பட்டுள்ளது என்பதைச் சிவஞானசித்தியார் இன்னும் ஒரு செய்யுளில்,

மாநுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்(கு) காயம்
ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரண்பணிக் காக அன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனைஅர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ

என்று அருணந்தி சிவாசாரியார் வருந்துகின்றார்.

பிறப்பை அறுப்பதற்கே இறைவன் மாநுடப் பிறவியைக் கொடுக்கின்றான். அரன் பணி முக்கரணங்களாலும் எப்படிச் செய்யலாம் என்பதை மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் வரும் திருச்சதகத்தில் "சுட்டறுத்தல்" என்ற பிரிவில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் மலர்ப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே

"இரண்டுமிலித் தனியனேன்" என்றது சைவசித்தாந்தத்தில் சத்துமின்றி அசத்துமின்றி சதசத்தாகிய ஆன்மாவைக் குறிக்கும் என்று கூறப்படுகிறது. ஆன்மா அது சார்ந்ததன் வண்ணம் அதன் அறிவு, இச்சை, செயல் எல்லாம் நிகழ்வதால் அதைத் தனியனேன் என்று கூறுவது பொருத்தமே.

இறைவன் எவ்வாறு உயிர்களுக்கு கைம்மாறு கருதாத பேருதவியை எக்காலத்திலும் ஒழியாது செய்துகொண்டிருக்கின்றான் என்பதைச் சைவ சித்தாந்தம் காட்டும் உபகாரமென்றும் காணும் உபகாரம் என்றும் இருவகையாக எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. முதலிற் காட்டும் உபகாரம் என்ன என்பதைப் பார்ப்போம்.

எங்கள் கண்கள் புறக்காட்சியில் ஓர் உருவத்தைப் பார்க்கின்றன. அதை எங்கள் கண்ணாற் கண்டோமென்று சொல்கின்றோம். ஆனால் அதன் உண்மைதான் என்ன? கண்கள் கருவிகள், அறிவற்றன, சடம். கதிரொளி அல்லது விளக்கொளி கண்ணொளியோடு அத்துவிதமாகக் கலந்தபோதுதான் கண்கள் காண்கின்றன. அவ்வாறு கலந்தபோதும் ஆன்ம அறிவு கண்ணொளியுடன் அத்துவிதமாகக் கலக்காவிட்டால் காட்சி முற்றுப்பெறுவதில்லை. ஆன்ம அறிவும் மலபந்தச் சேர்க்கையால் தானாக ஒன்றையும் அறியாது, உணராது. வியாபக அறிவுடைய அமலனாகிய பரமேஸ்வரன் அறிவிக்கவே ஆன்மா அறியும் ஆற்றலைப் பெறுகின்றது. ஆகவே பரமேஸ்வரன் அத்துவிதமாக அறிவிக்க ஆன்மா அறிந்து கண்ணொளியுடன் கலந்து புறக்காட்சியில் ஓர் உருவத்தைக் காண்கின்றது. இந்தப் பரமேஸ்வரனின் கைம்மாறு கருதாது செய்யும் பேருதவியை, "காட்டும் உபகாரம்" என்று சித்தாந்தம் சொல்கின்றது.

மற்றது "காணும் உபகாரம்". பரமேஸ்வரன் சர்வக்ஞன், பேரறிவாளன், கருணாகரன். சதா ஆன்மாக்களுக்கு காட்டும் உபகாரத்தைச் செய்துகொண்டு இருக்கின்றான். கண்கள் ஓர்

உருவத்தைக் காணும்பொழுது பரமேஸ்வரனும் உடன்சென்று அத்துவிதமாக அந்த உருவத்தைக் காண்கின்றான். இன்னும் ஒரு வகையில் சொல்லும்பொழுது பரமேஸ்வரன் ஆன்மாவை அதிட்டிக்கொண்டு சென்று உருவத்துடன் கலந்துகொண்டு நிற்றலே காணும் உபகாரம் என்று சொல்லப்படும். இந்த இரண்டு உபகாரங்களும் ஆன்மா பெத்த நிலையில் (சகலத்தில்) இருக்கும்பொழுது உலகக் காட்சிகளாகவும் சீவமுத்தி நிலையில் இருக்கும்பொழுது பரமேஸ்வரனைக் காணும் காட்சியாகவும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்த இரண்டு, நாம் செய்யாமற் செய்யும், அரிய உதவிகளைச் செய்துகொண்டிருக்கும் பரமேஸ்வரனை நாம் என்றும் மறவாமல் அன்பு செலுத்தி அவன் திருவடிகளை வழிபடக்கடவோம் என்று சிவஞானபோதம் பதினொராம் சூத்திரம் போதிக்கின்றது.

“காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணா உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே”

அயராமையால் - மறக்காமையால் - அன்பு விளைய அன்பால் அரன் கழல் செல்லும்.

“சிவன்செய லாலே எல்லாம் வருமெனத் தேறேன் நாளும்
அவந்தரு நினைவை யெல்லாம் அகற்றிலேன் ஆசை வெள்ளம்
கவர்ந்துகொண் டிழுப்ப அந்தக் கட்டிலே அகப்பட்டு ஐயோ
பவந்தனை ஈட்டி ஈட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே”

- தாயுமான சுவாமிகள்

# பஞ்சபுராணம் ஓதுதல்

கோயில்களில் நடைபெறும் நித்திய நைமித்திய வழிபாடுகளில் பஞ்சபுராணம் ஓதுதல் முக்கிய அங்கமாகும். **தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்** என்பவையே அதில் ஓதப்படும். வேறு புராணங்கள் ஓதலாகாது. பஞ்சபுராணம் ஓதத் தொடங்குமுன்னரும் நிறைவு செய்தபின்னரும் **“திருச்சிற்றம்பலம்”** என்று சொல்லவேண்டும்.

திருப்பாடல் வரிகளை **ஒருமுறை மட்டுமே ஓதல்வேண்டும்;** திருப்பி ஓதல் ஆகாது. பண்ணிசைக் கச்சேரிகளில் மட்டுமே ஒருமுறைக்குமேல் வரிகளைப் பாடலாம்.

திருப்பாடல்களச் சொற்பிழை இன்றி ஓதவேண்டும். சொற்களைப் பொருள் சிதையாமல் உச்சரிக்கவேண்டும். இசைக்காகச் சொற்களை நீட்டியோ குறுக்கியோ பொருட்சிதைவு வருவதுபோலப் பாடக்கூடாது. உதாரணமாக, சொற்றுணை வேதியன் **சோதி** வானவன் என்பதை, சொற்றுணை வேதியன் **சோதீ** வானவன் என்றோ, முதல்வன் **முக்கண்ணன்** என்பதை முதல்வன் **மூக்கண்ணன்** என்றோ **மற்றுப் பற்றெனக்** கின்றி என்பதை **மாற்றுப் பாற்றெனக்** கின்றி என்றோ ஓதுவது தவறு.

திருப்புகழோ, அபிராமி அந்தாதியோ அல்லது வேறு அருட்பாடல்களோ ஓத விரும்பினால் அவை பெரியபுராணம் ஓதிய பின்னரே ஓதப்படல்வேண்டும்.

# திருக்கேதீஸ்வரம்

- ரா.கிஷாலினி -
**கலைமகள் அறநெறிப் பாடசாலை, தரம் 7, தேனுடையான், மன்னார்**

சிவபூமி எனத் திருமூலரும் அநுக்கிரக நிலம் என மாணிக்கவாசகரும் போற்றும் திருநாடு ஈழம். இங்கு வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகவும் புராதனமான இரு தலங்கள் இருக்கின்றன. இதனுள் மன்னாரிலுள்ள மாதோட்டத்தில் இருக்கும் திருக்கேதீஸ்வரமும், திருக்கோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வர ஆலயமும் இந்நாட்டுச் சைவர்களது இரு கண்களாகும். இவை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பெற்ற திருத்தலங்களாகும். திருக்கேதீச்சரத்தில் இறைவன் பெயர் கேதீச்சரநாதர், இறைவி பெயர் கௌரி அம்பாள் ஆகும்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தை அமைத்தவன் இராவணனின் மாமனாகிய மயன் என்பது மரபு. “கேது” என்னும் அசுரன் வழிபட்ட தலம் என்பதால் ‘கேதீஸ்வரம்’ எனப் பெயர் வந்திருக்கலாம். தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற்ற காலத்து, விட்டுணு மூர்த்தியால் தலை வெட்டுண்டும், அமிர்தம் உண்ட காரணத்தினால் இறவாத கேது இத்தலத்தினை அடைந்து பாலாவித் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சுயம்புலிங்க மூர்த்தியை நியமமாகப் பல வருடங்கள் பூசித்துத் தவம் செய்து, விரும்பிய வரங்கள் பெற்றதாகவும், கேதுவினால் பூசிக்கப்பட்டவர் என்ற காரணத்தினால் கேதீஸ்வரர் என்று சிவலிங்க மூர்த்திக்குப் பெயர் வழங்குவதாயிற்று என்றும் வரலாற்றிலிருந்து அறியப்படுகிறது. இத் தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் அமையப்பெற்ற திருத்தலமாகும். இங்கு தீர்த்தம் விசேடமாக விளங்குகின்றது. இத்தலத்தின் மகிமையை எடுத்துக் கூறும் நூல் தட்சிண கைலாயமான்மியமாகும். இக் கோயில் இருக்கும் இடத்திற்கு மாதோட்டம் எனப் பெயர் வரக்காரணம், சூரபத்மனுடைய மனைவியின் தகப்பனுடைய பெயர் “துவட்டா” என்பதாகும். அவனுக்குப் பலகாலமாகப் பிள்ளைப் பேறில்லாதிருந்து இந்த ஆலயத்தில் வந்து பாலாவியில் நீராடி, கேதீச்சர நாதரை வணங்கி வந்தமையால் அவனுக்கு ஒரு பிள்ளைப் பாக்கியம் கிடைத்தது. இதனால் அவன் அந்த இடத்தை நகரமாக்கி வாழத்தலைப்பட்டானாம். “துவட்டா” என்ற பெயர் கொண்ட அவனால் உருவாக்கப்பட்ட நகரமாகையால் அதன்பெயர் “துவட்டா” ஆகி, பின்பு பெருநகரமானபோது “மாதுவட்டா” ஆகியதாகவும், காலக்கிரமத்தில் அச்சொல் திரிபடைந்து “மாதோட்டம்” எனப் பெயர்பெற்றதாகவும் குறிப்பிடப்படுகின்றது. மகாதுவஷ்டா என்னும் தேவதச்சன் பாலாவித்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சுயம்பு லிங்கமாகிய கேதீச்சரநாதனை நியமமாகப் பலகாலம் பூசித்துத் தவஞ்செய்து, விசுவகன்மா என்ற புத்திரனையும், இஷ்ட சித்திகளையும் பெற்றான் என்றும் அதுமுதல் இந்த நகரம் “மகாதுவஷ்டாபுரம்” எனவும் பெயர் பெற்றது என்றும் தட்சிண கைலாசமான்மியம் கூறுகின்றது. “மகாதுவஷ்டாபுரம்” என்பது “மாதோட்டம்” ஆக மருவியது என்பர். இது பழைய நூல்களில் காணப்படுகிறது. “மாதோட்டம்” என்பதன் சுருங்கிய மரூஉ மொழிப் பெயராக “மாந்தை” என்ற பெயரும் உண்டு.

இராமர், மண்டோதரி, அகத்தியர் என்போரும் இவ்வாலயத்தில் வழிபட்டிருக்கின்றனர். அடியவர்க்கு அருள்பாலிப்பதற்காக தேவர்கள் அர்த்தஜாமப் பூசை செய்வதாகக் கூறுவார்கள். தேவர்களின் அர்த்தஜாமப் பூசை புரட்டாதி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசித் திதியாகும். மன்னாரும்

மாதோட்டப் பகுதியும் யாழ்ப்பாணத்து அரசின் பகுதியாகவே இருந்தது. ஈழத் தமிழர்களின் வாழ்வு, தாழ்வுகளுக்கேற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் வந்த திருக்கேதீஸ்வரம் யாழ்ப்பாணத்து அரசர்களின் வீழ்ச்சியுடன் இருந்த இடம் தெரியாத நிலைக்குள்ளாயிற்று.

இந்தப் பதியை புதுப்பிக்கும் முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். “மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் திருக்கேதீஸ்வரம் என்னும் தேன்பொந்து உளது; அதனைச் சென்றடையுங்கள்” எனச் சைவ உலகிற்கு விஞ்ஞாபனம் விடுத்தார். அவரது எண்ணம் சிறிது சிறிதாக சைவ மக்களின் உள்ளத்தில் தைத்து அதனைக் கொண்டு சைவப் பெருமக்கள் பலரின் முயற்சிகளினால், பழைய கோயில் இருந்த இடமும், பழைய காலத்துச் சிவலிங்கமும் கண்டு பிடிக்கப்பட்டன. இதனோடும் கோயிலோடும் சேர்ந்த 40 ஏக்கர் நிலம் தென்னிந்திய நாட்டுக்கோட்டை நகரவாசியான பெரியார் ஸ்ரீ பழனியப்ப செட்டியாரினால் விலைக்கு வாங்கப்பட்டது. இவ்வாலயம் காடுமண்டிக் கிடந்தமையால் இதனையும் புதுப்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பல ஆண்டுகளாகப் பல சைவப் பெரியார்களின் அரும்பெரும் முயற்சிகளினால் 1948 ஐப்பசி 24ஆம் நாள் கொழும்பிலுள்ள பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோயிலில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு ஆலயத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று இவ்வாலயத்தில் நடக்கும் விழாக்களில் சிறப்பும் மகிமையும் வாய்ந்தது மாசி மாதத்தில் நடைபெறும் மகாசிவராத்திரியாகும். திருப்பணிச்சபையாரின் முயற்சிகளினால் கற்கோயில் திருப்பணியும் இராச கோபுர வேலைகளும் நிறைவுற்றிருந்தன. அங்கு திருஞானசம்பந்தர் மடம், திருநாவுக்கரசர் மடம், நாவலர் மடம், அப்பர் மடம், நகரத்தார் மடம், அம்மா மடம், சிவராத்திரி மடம், கௌரி மடம் ஆகியன உள்ளன. “அங்கம்மொழி அன்னாரவர் அமரர் தெழுதேத்த, வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்... திருக்கேதீச்சரத்தானே” என்று சுந்தரர் பாடிய திருக்கேதீச்சர பாசுரமும், “செய்யகேது தலையற்ற அந்நாள் திருந்தும் பூசைகள் செய்து முடிப்போன், வையம் போற்றிட நற்கதி யுற்றிடும் மாவலி கங்கை நாடெங்கள் நாடே” என்ற “கதிரமலைப் பள்ளு” நூலின் பாடலும் இவ்வாலய வரலாற்றைக் குறிப்பனவேயாகும்.

(அங்கம் ஒழி அன்னாரவர் - விட்டுணுவின் வாளால் வெட்டுண்டு தலை வேறு உடல் வேறாய் நீக்கப் பெற்ற - அமிர்தமுண்ட அத்தன்மையராகி இராகு கேதுக்கள், அமரர் தொழுதேத்த - மரிக்காதவராய் வணங்கித் துதிக்க, திருக்கேதீச்சரத்தான் - திருக்கேதீச்சரத்தில் வீற்றிருந்து அருள்பாலித்தான் - என்று இவ்வரலாற்றுக்கு இயைப் பொருள் கொள்ளக் கிடந்தது)

**(தொடர்ச்சி 76ஆம் பக்கம்)**



# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## - சிவபுத்திரன் -

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைப் பற்றி எழுதுவதற்கு முன் அவர் வாழ்ந்த காலகட்டத்தை அறிந்து கொள்வது நல்லது. தென்னாடு முழுவதும் சமணசமயமும் பௌத்த மதமும் மேலோங்கியிருந்த காலமது. சைவசமயத்தை வேருடன் அழிப்பதற்காகவே தோன்றிய மதங்கள் என்று கூடச் சொல்லலாம். திருநீறு அணிந்து சென்றாலே குற்றம் என்று கூறும் ஒரு காலகட்டம். ஒரு இருண்டகாலம். அரசன் எவ்வழி குடிமக்களும் அவ்வழி என்பதுபோல அரசர்கள் மதம் மாறியபோது மக்களும் மாறுவது சில சமயங்களில் மறுதலிக்க முடியாததுதான். ஆகவே சைவசமயம் மிகவும் நலிந்துபோய்ப் பொலிவிழந்து போயிருந்தது.

ஞானசம்பந்தரின் ஆயுட்காலம் கிட்டத்தட்டப் பதினாறு வருடங்கள். இந்தப் பதினாறு வருடங்களில் மூன்று(3) வயதிலிருந்து பதினாறு(16) வயதுவரை அவர் இறைவனை நோக்கி அருளிய அருட்பாடல்கள் நான்காயிரத்து இருநூற்று எண்பத்தாறு (4286). பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிட்ட நாயன்மார்களினால் அருளப்பட்ட அருட்பாடல்களின் தொகை எண்ணாயிரத்து இருநூற்றைம்பது (8250) ஆகும். அவர்கள் அனைவரும் அருளியவைக்குப் பாதிக்குமேல் ஞானசம்பந்தர் பதின்மூன்று வருடங்களில் தந்துள்ளார் என்பது தெளிவு.

ஞானசம்பந்தர் இந்தப் பதின்மூன்று வருடங்களில் சைவசமயத்துக்கும் தமிழுக்கும் செய்த தொண்டுகளைச் சாதாரண ஒருவரினால் செய்து முடிக்க இயலாது. அது இறையருளால் மட்டுமே சாத்தியப்படும். இறைவனால் சைவசமயத்தை மீண்டும் எழுச்சி பெறச்செய்ய அனுப்பப்பட்ட ஒரு தூதன் என்றே அவரைச் சொல்லலாம். சைவசமயிகள் எல்லோரும் ஏன் எமது சமயத்திற்கு இந்த இழிநிலை என்று நொந்து எல்லாம் வல்ல அந்தப் பரம்பொருளிடம் இறைஞ்சிய நிலை. பரந்து விரிந்த தமிழகம் எங்கும் ஒரு மந்த நிலை. ஆலயங்களுக்கு சென்றுகூடச் சுதந்திரமாக வழிபட முடியாமல் தவித்த காலம். "இதுவும் கர்ம வினைதான். என்ன பாவங்களை நாம் செய்தோம். எமது சமயத்திற்கு இப்படி ஒரு நிலை ஏன் வந்தது" என மக்கள் ஏங்கினார்கள்.

உள்ளன்புடன் வழிபடுபவர்களுக்கு இறைவன் ஏதோ ஒரு வழியில் உதவ ஓடிவருபவன் அல்லவா! எல்லாம் அவன் செயல். அவனன்றி எதுவும் அசைவதில்லை அல்லவா! அவன் தாள் வணங்குபவரை அவன் என்றுமே கைவிட்டதில்லை. இந்த இறைவனுக்குக் கூட எங்கோ ஒரு தென்னாட்டின் ஒரு மூலையில் இருந்து இடையறாது ஒரு அந்தணனுடைய வேண்டுகோள் வருகிறது. அந்தணன் என்பவன் யார்? அவனுக்கு ஏற்றத்தாழ்வுகள் கிடையாது. அவனுக்கு எல்லோரும் ஒன்றே! மனித குலத்திற்கு எவன் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்துச் சேவை செய்கிறானோ அவனே உண்மையான பக்தன். அவன் மேற் குலத்தவனாக இருந்தாலும் சரி கீழ்க் குலத்தவனாக இருந்தாலும் சரி. இதையே வள்ளுவரும்-

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்று கூறுகிறார்.

ஞானசம்பந்தர் அவதரித்த இடம் சீர்காழி. "சோழவளநாடு சோறுடைத்து" என்ற கூற்றுக்கேற்பச் சகல இயற்கை வளங்களும் நிறைந்த ஊர் அது. வளங்கள் நிறைந்த ஊர் என்றால் அங்கே

எல்லாம் இருக்கும் என்பார்கள். வறுமை அங்கே கிடையாது எல்லோரும் உன்னதமான குணங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள். அங்கே ஆலயங்களுக்கும் குறைவில்லை. மக்களுக்கு உள்ள குறை ஒன்றேதான். காலம் காலமாக சைவமும் தமிழும் தழைத்தோங்கிய தம் நாட்டில் இப்போது சமணர்களாலும் பௌத்தர்களாலும் ஏற்பட்ட ஊடுருவலால் எங்கே சைவத்துக்கும் தமிழுக்கும் பாதிப்பேற்பட்டுவிடுமோ என்றதொரு அச்சம் சைவசமயம் சார்ந்த பெரியோர்களுக்கும் தமிழாய்ந்த அறிஞருக்கும் ஏற்பட்டதில் வியப்பில்லை. மாற்றுமதத்தின் அடாவடித்தனங்களால் எதுவும் செய்ய முடியாத நிலை, இப்படியான சூழ்நிலைகளில் மௌனமாக இருப்பதே சிறந்தது என்ற நிலை.!

சீர்காழிப்பதிக்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உள. பல வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்ட ஊர் அது. பிரம்மன் பூசித்ததும், இந்திரன் புகலிடம் தேடி இருந்ததும் என ஒவ்வொரு வரலாற்றுக்கும் ஒவ்வொரு பெயர் கொண்ட ஊர் சீர்காழி.

இவ்வளவு பெருமை வாய்ந்த அந்த ஊரிலே, சிவபாதவிருதயர் என்ற அந்தணருக்கும் பகவதி என்ற துணைவியாருக்கும் ஞானசம்பந்தர் மகனாக அவதரித்தார். சிவனே கதி என்று வாழ்ந்த குடும்பம் அது. சகல வளங்களும் நிறைந்த ஊரானபடியால் குழந்தை கேட்டதெல்லாம் கிடைத்தது. நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்பதுபோல அந்தக் குடும்பம் அந்தக் குழந்தையைச் சீராட்டி வளர்த்து வந்தது. இதனாலோ என்னவோ, அந்தக் குழந்தை தகப்பன் போகும் இடமெல்லாம் தானும் வரவேண்டுமென்று அடம்பிடித்தபடியே இருக்க, தகப்பனாரும் ஆலயம் போனால் என்ன, குளிக்கப் போனாலென்ன குழந்தையை அழைத்துச் செல்வது ஒரு வழக்கமாகிவிட்டது.

அப்படியொருமுறை ஆலயத் திருக்குளத்தில் குளிப்பதற்கு குழந்தையுடன் போகிறார். குளக் கரையில் எவரையும் காணோம். என்ன செய்வது; யார் பொறுப்பில் குழந்தையைக் கவனித்துக் கொள்ளச் செய்வது என்று யோசித்துவிட்டு, சரி குளித்துக்கொண்டே குழந்தையைக் கவனிப்போம் என எண்ணி இறைவனை வணங்கி, கரையில் பிள்ளையை இருத்திவிட்டு நீராட இறங்கிவிட்டார் தகப்பனாகிய சிவபாதவிருதயர். குழந்தையை பார்க்கிறார். குழந்தையோ மூழ்கி மூழ்கியெழும் தகப்பனாரைப் பார்த்துக் கொண்டு தன்பாட்டில் இருந்தது. குழந்தை திடீரென அழத்துவங்கியது. காரணம் மூழ்கியெழும் தகப்பனாரைக் காணவில்லை. என்ன காரணம் என்று குழந்தைக்குப் புரியவில்லை. அது சத்தமிட்டு உருண்டு புரண்டு மணலில் அழத் துவங்கியது. தகப்பனாரோ மூச்சை உள்ளிழுத்து நீரின் அடிமட்டம்வரை சென்று சம்மணம்மிட்டு யோகநிலையில் ஆழ்ந்துவிட்டார். ஹடயோகநிலையில் இருந்த சிவபாவிருதயர் தன்னை மறந்தார், குழந்தையை மறந்தார். ஏதோ ஒருவித சுகானந்த நிலை. அது அநுபவித்தவர்களுக்குத்தான் அந்த இன்பநிலை புரியும். பிள்ளை அழுதது. "அப்பா! அப்பா!!" என்ற சத்தம் மெதுவாகத் தொடங்கி, வீறிட்டு அலறலாக மாற, ஹடயோக நிலையில் இருந்த தகப்பனாரை மெல்லிதாய்த் தாக்கத் தொடங்கியது. அவர் தன்னுணர்வுக்கு வந்து மேலே கரையிலிருந்த பிள்ளையைப் பார்க்க வருவதற்குள், இங்கே பிள்ளை அழுத குரல், எங்கும் வியாபித்திருக்கும் இறைவனுக்கு கேட்டதில் வியப்பில்லைத்தானே.! இறைவனிடம் தவமிருந்து பெற்ற பிள்ளையல்லவா! மனித குலத்தின் ஒவ்வொரு அசைவுகளும் அவனுடையதுதானே! அவனின்றி அணுவும் அசையாது என்பது தானே எமது தெளிவு. பிள்ளை அழும் சத்தம் சக்தியை உலுக்க, "ஐயனே! எம்மால் வரமளிக்கப்பட்ட குழந்தை அழும் சத்தம் கேட்கிறதே! ஐயனே! வாருங்கள்! என்ன வென்று பார்ப்போம்" என ஐயனை வேண்ட, இங்கே குழந்தைக்கு வானத்தில் ஏதோ ஒளிமயமாகத் தெரிய, அந்த ஒளியின் உருவமாக இறைவனும் இறைவியும் குளக்கரையில் இடபத்தின் மீதமர்ந்து காட்சி கொடுக்க, அழுவதை நிறுத்திய குழந்தை அக்காட்சியை விநோதமாகப் பார்க்கிறது. "இது யார்?" என நினைத்துப் பிரமித்த நிலையில் இருப்பதற்கிடையில், இப்போது

ரிஷபத்தின் மீதமர்ந்திருந்த இறைவியின் மடியில் குழந்தை.! யாருக்கும் கிடைக்காத பாக்கியம் அக்குழந்தைக்கு. கண்ணிமைத்து மூடுவதற்கிடையில் அழுத பிள்ளைக்கு உலகமாதாவின் அமுது (பால்) கிடைத்து விடுகிறது. கண்கொட்டாமல் இறைவனையும் இறைவியையும் பார்த்துக் கொண்டே மாதா தந்த ஞானப்பாலை உண்ட குழந்தை பசியாறிய பின் "அப்பா எங்கே?" என்று குளத்தைப் பார்க்க, அன்னையும் அப்பனும் குழந்தையை இருந்த இடத்தில் அமர வைத்து மறைந்து விடுகிறார்கள். சிவபாதவிருதயர் ஹடயோக நிலையிலிருந்து மேலேழுந்து வருவதற்குள் இந்த அதிசயம் நிகழ்ந்து விட்டது. கரைக்கு வந்த தகப்பனார் பிள்ளையின் கடைவாயில் இருந்து பால் வடிந்து இருப்பதைக் கண்டு, சுற்றுமுற்றும் பார்க்கிறார். எவரையும் காணோம். அருகிலிருந்த ஒரு குச்சித் தடியால் குழந்தையை அடிக்க முயல்கிறார். மீண்டும் ஒரு அதிசயம் நிகழ்கிறது. குழந்தை வானப்பரவெளியைத் தன் கையால் சுட்டிக்காட்டி, தன் மழலைக் குரலால் பாடத் தொடங்குகிறது:

"தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரம்மாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே"

சிவபாதவிருதயரும் பிள்ளை காட்டும் திசையைப் பார்க்க அங்கே ரிஷப வாகனத்தில் இறைவன் இறைவியுடன் காட்சி கொடுக்கிறார். ஞானப்பாலுண்ட பிள்ளை இரண்டாவது தடவையாக அக்காட்சியைக் காண்கிறது. ஞானப்பாலுண்ட பிள்ளைக்கு இரண்டாவது தரிசனம் கிடைக்கிறது. அன்றிலிருந்து அப்பிள்ளை இறைவனுடைய பிள்ளையாகிறது.

அந்தக் காட்சி தந்தையான சிவபாதவிருதயருக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் அங்கு நடந்தவற்றை அவர் குறிப்பால் உணர்ந்துகொள்கிறார்.

அன்று ஞானப்பாலுண்டபடியால் இப்போது ஞானசம்பந்தப் பிள்ளையாகித் தென்னாடு முழுதும் தன் பிஞ்சுக்கால்களால் நடந்தே பயணம் செய்து பற்பல அற்புதங்களைச் செய்து மீண்டும் தென்னாட்டில் சைவசமயம் எழுச்சிபெறச் செய்தது. அந்த எழுச்சிதான் இற்றைவரை சைவசமயத்தைக் கட்டிக் காத்து வருகிறது. அவருடைய பதிகங்கள் இரண்டு தேவாரங்களைப் பார்ப்போம்.

இறைவனையும் அவனுடைய தொடர்புகளையும் காட்டு இரண்டு தேவாரங்கள்:

கண் காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும்பிறை காட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர் காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடை காட்டும் கொடியானே

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடு துறையரனே

ஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் யாவற்றிலும் இறைவன் ஞானசம்பந்தர் மூலமாக செய்த அவனுடைய செயல்கள் எல்லாவற்றையும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.

திருப்புகழ் அருளிய அருணகிரியார் முருகபக்தர் என்பது யாவரும் அறிந்த ஒன்று. அவருடையை சில பாடல்களில் ஞானசம்பந்தரை முருகனாகவே காண்பதைக் காணலாம்.

“மூல மந்திர மோத லிங்கிலை......” என்று தொடங்கும் திருப்புகழில்:

பீலி வெந்துய ராலி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டரு - ளெழுதேடு
பேணி யங்கெதி ராறு சென்றிட
மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு - முருகோனே

என்று பாடியதன் மூலம் முருகனே சைவத்தமிழ் மக்களின் குறை தீர ஞானசம்பந்தராக அவதரித்தான் என்பது கவனிக்கத்தக்கது.

ஞானசம்பந்தர் அருளிய பதிகங்கள் ஒவ்வொன்றும் கருத்தாழமிக்கவை; உள்ளத்தை ஒருமுகப்படுத்தகூடிய பதிகங்கள்; உள்ளத்தைத் தெளிவுபடுத்தக்கூடிய பதிகங்கள். பதிகங்களை மனமுருகப்பாடி இறையருளைப் பெற முயல்வோம்.
(பி.கு: திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் செய்தருளிய அற்புதங்களை பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம்)



72ஆம் பக்கத் தொடர்ச்சி.....
கி.பி 7ஆம் நூற்றாண்டினராகிய சம்பந்தர் சுவாமிகள் தேவாரத்தில், “கடல்வாய்ப் பொன்னிலங்கிய முத்து மாமணிகளும் பொருந்திய மாதோட்டத்து, ....கேதீச்சரத்துள்ளாரே” என வருவதாலும், 9ஆம் நூற்றாண்டினராகி சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகத்தில் “வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்”, “பாலாவியில் கரைமேல்”, “திருக்கேதீச்சரத்தானே!” என்று கூறப்படுவதாலும், அவர்கள் காலத்தில் வணிகத்துறையில் வளஞ்சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியமை, இந்நகரத்தின் பழமையும் பிரசித்தியும் கி.பி. 1ஆம் நூற்றாண்டினராகிய தொலமி, பிலினி என்னும் யாத்திரிகர்கள் இந்நகரைப் “பாலாவி மண்டல நகரம்” என்று தம் நூல்களிற் குறிப்பிட்டு, இது தொடர்பாக எழுதியமை ஆகியவற்றால் அறியக் கிடைக்கின்றது.

# பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோயில்

## மிருசுவிலூர் இளஞ்சைவப்புலவர் கமலநாதன் கயிலைவாசன்

சோழ நாட்டிலே தோன்றிய கண்ணகியைத் தெய்வமாகப் போற்றும் வழிபாடு இலங்கையில் உள்ள தமிழ், சிங்கள மக்களிடையே பெரிதும் போற்றப்படும் விடயமாகக் காணப்படுகிறது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலே இலங்கை மன்னனாகிய கஜபாகு மன்னனால் கண்ணகி வழிபாடு இலங்கையில் ஆரம்பமானது என இலக்கியங்கள் கூறுகின்றன. கண்ணகியோடு தொடர்புடைய இதிகாசக் கதைகளும், ஐதீகங்களும் பலவாகக் காணப்படுகின்றன. எனினும் இளங்கோ வடிக-ளின் சிலப்பதிகாரத்தின் மூலம் கண்ணகியின் சிறப்பையும் வரலாற்றையும் நன்கு அறிய முடிகின்றது.

தீராத நோய்களைத் தீர்க்க எண்ணிக் கண்ணகியை வழிபடும் வழக்கம் நாடெங்கிலும் காணப்படுகிறது. கண்ணகியின் அருளால் ஆகாதது எதுவும் இல்லை என்பது இவ்வழிபாட்டை மேற்கொள்ளும் பக்தர்களுடைய அசையாத நம்பிக்கையாகக் காணப்படுகின்றது. ஈழத்தின் பல பகுதிகளிலும் கண்ணகி கோயில்கள் காணப்படினும் அவற்றுள் பலவகைச் சிறப்புக்களையும் கொண்டவை தென்மராட்சியில் அமைந்துள்ள கண்ணகியம்மன் ஆலயங்களாகவே காணப்படுகின்றன. இவற்றுள் யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரிக்கு அண்மையில் உள்ள மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகியம்மன் கோயிலும் ஒன்றாகக் காணப்படுகின்றது. கண்ணகியம்மன் என்ற பெயருக்கு அடைமொழியாகவுள்ள பன்றித் தலைச்சி எனும் நாமம் அன்னையின் அற்புதத்தை விளக்குவதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறாக பன்றித்தலைச்சி என்ற பெயர் ஏற்பட ஐதீகமாக ஒரு கதை வழக்கிலுள்ளது. கண்ணகி அம்மன் மீது அபார பக்தி கொண்ட ஒருவர் ஆத்திரத்தினால் பகையாளி ஒருவரு-டைய ஆட்டின் தலையை வெட்டிவிட்டார். ஆத்திரம் தீர்ந்த போது, தான் செய்த தவறை உணர்ந்தார். இதனால் மனம் வருந்தி, சட்டத்தின் பிடியில் அகப்படாது இருக்கக் கண்ணகி அம்மனிடம் தன்னைக் காப்பாற்றுமாறு சரணாகதியடைந்தார். தவறை உணர்ந்த பக்தனுக்கு அன்னையும் கருணை செய்தார். குற்றச்சாட்டை ஏற்று வெட்டப்பட்ட தலையைக் காணவந்த காவலாளிகள் ஆட்டுத்தலைக்குப் பதிலாக பன்றித்தலை இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர். ஆத்திரகாரப் பக்தனும் தண்டனையில் இருந்து காப்பாற்றப்பட்டார். பின்பு அன்னை பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இச்சம்பவத்தின் பின் கண்ணகி அம்மனின் திருநாமம் பன்றித்தலைச்சி என்று அடைமொழியிடப்பட்டு வழங்கப்படுவதாகக் கூறுவர். கண்ணகி அம்மன் என்ற திருநாமத்திலும் மேலாக பன்றித்தலைச்சி என்ற பெயரே யாவரும் அறிந்த பெயராகக் காணப்படுகின்றது.

பன்றித்தலைச்சி அம்மன் அமைந்துள்ள காணியின் பெயர் அத்தாய் வளவு என்பதாகும். இக்காணியில் பன்றித்தலைச்சி கண்ணகியம்மன் கோயிலோடு, பன்றித்தலைச்சிப் பிள்ளையார் கோயிலும், கந்தசாமியார் கோயிலும், பரிவார மூர்த்திகளின் சந்நிதிகளும் திருக்குளமும் அமைந்துள்ளன. இங்கு வெவ்வேறு முறையான பூசை முறைகள் காணப்பட்டுள்ளன. தற்போதுள்ள பன்றித்தலைச்சி அம்மன் கோயில், ஆதியில், தற்போதுள்ள கோயிலுக்கு வடக்கு முகமாக இருந்ததெனக் கூறுவர். பழைய கண்ணகியம்மன் கோயில் இருந்த இடத்தில் செங்கல் கட்டட இடிபாடுகளை இன்றும் காணலாம். பிள்ளையார் கோயிலும், கந்தசுவாமியார் கோயிலும் தற்போதுள்ள பன்றித்தலைச்சிக் கண்ணகியம்மன் கோயிலுக்கு மேற்குப்பக்கமாக இருந்ததற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. இவையாவும் காலப்போக்கில் பன்றித்தலைச்சிக் கண்ணகியம்மன் கோயில் அமைப்பில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.



தற்போதுள்ள பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோயில் கி.பி.1950 ஆம் ஆண்டு நாகர் கதிர்காமர் என்பவரால் வைரக் கற்களைக்கொண்டு கட்டப்பட்டுள்ளது. முன்னர் அழிந்ததாகக் கூறப்படும் செங்கற் கோயிற் கட்டடத்தையும் நாகர் கதிர்காமரின் முன்னோர்களே கட்டினார்கள் என்பது கர்ண பரம்பரைக் கதையாகக் காணப்படுகின்றது. பன்றித்தலைச்சி என்கின்ற சொற்றொடரை அறியாதார் இலங்கையில் இல்லை என்றே கூறலாம். இங்கு பங்குனித் திங்களும் புகழ்பெற்றுக் காணப்படுகின்றது. ஏனைய சைவசமயக் கோயில்களுக்குப் போவதற்கும் இக்கோயிலுக்குப் போவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. இங்கு செல்பவர்கள் இங்குள்ள தீர்த்தத்தில் நீராடியே செல்வர். அத்தோடு கிராமிய முறையில் தாங்களே பொங்கல் செய்தும் பலகார வகைகள் செய்தும் படைப்பார்கள். வசதியற்றவர்கள் சர்க்கரைப் பொங்கலாவது அன்னையின் சந்நிதியில் படைத்து ஆனந்திப்பர். படைத்தவற்றை கோயில் வாசலில் தாங்களே அம்பாளுக்கு நிவேதித்து வணங்குவார்கள்.

ஆதிகாலத்தில் போக்குவரத்து வசதிகள் காணப்படாத நிலையில் யாழ்ப்பாணத்தின் நாலாபுறத்திலிருந்தும் மக்கள் கால் நடையாகவும், மாட்டுவண்டிகள் மூலமும் இக்கோயிலுக்கு வருவதை ஒரு கடமையாகக் கொண்டிருந்தார்கள். இக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தாகசாந்தி அளிப்பதற்காக பல மைல்களுக்கு அப்பாலிருந்தே தண்ணீர்ப் பந்தல்கள் போடப்பட்டிருக்கும். பங்குனித் திங்களில் நடைபெறும் பொங்கல் வைகறையிலேயே ஆரம்ப மாகிவிடும். மாலை வரைக்கும் பொங்கல் தொடர்ந்து மக்களால் நடாத்தப்படும். கோயில் வெளி வீதி பெரும் நிலப்பரப்பைக் கொண்டு காணப்படுவதால் வருகின்ற அடியவர்கள் யாவரும் இப்பொங்கலை இட நெருக்கடியின்றிச் செய்வர். பொங்கல் செய்வதற்குரிய பொருள்களோடு வந்து இப் பகுதியில் காணப்படும் கற்களை வைத்து அதனை அடுப்பாக்கி பொங்கலிடுவர். இந்நாளில் தமது நேர்த்திகளை நிறைவேற்றும் அடியவர்கள் காவடி எடுத்து நடைபவனியாக மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகியம்மன் கோயிலை வந்தடைவர். இக் காவடிகள் காலை முதல், மாலை வரை தொடர்ந்து வந்தவாறு காணப்படும். பாற்காவடிகள், செடிற்காவடிகள், பறவைக்காவடிகள், தூக்குக் காவடிகள் எனப் பலதரப்பட்ட காவடிகள் வரும். இவை சங்ககால மக்களின் மடலேறுதல், வரைபாய்தல் என்பவற்றினை வெளிப்படுத்துவதாக அமையும். கோயிலில் நடைபெறும் பொங்கலன்று புகைமூட்டத்தை பல மைல்களுக்கப்பாலும் காணமுடியும்.

கொடிய நோய்கள் ஏற்படும் போது அன்னையைப் பிரார்த்தித்து சுகமடைவோர் தமது நேர்த்தியை செய்து முடிக்க, பொங்கல் தினத்தன்று இங்கு கூடுவார்கள். நோய் ஏற்பட்ட காலத்தில் கண்ணகியின் அருளை வேண்டிச் சுகம் பெற்றோர் கொடுக்கும் கண்மடல்கள் ஏராளம். பங்குனித் திங்கள் விரதம் போலக் கார்த்திகைச் சோமவார விரதமும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. பன்றித் தலைச்சி அம்மனை வேண்டி விரதமிருப்பர். பங்குனிப் பொங்கலன்று பொங்கியே தமது விரதத்தினை நிறைவு செய்வர். இன்றைய நவீன காலத்தில் கூட பல மருத்துவ வசதிகள் இருந்தும் இவ்வாலயத்தின் மூலமே மக்கள் தமது நோயைக் குணப்படுத்துகின்றனர்.

பன்றித்தலைச்சி என்பது இங்கு எழுந்தருளியுள்ள கண்ணகி அம்மனையே குறிக்கும். பன்றித்தலைச்சி என்பதற்கு ஆட்டுத்தலையை பன்றித்தலையாக்கிய தெய்வமென்றும், யாவற்றுக்கும் மேலாகப் பண்டுதொட்டு இத்தலத்தினள் என்றும் பொருள்பட “பண்டுத்தலத் தெய்வம்” என்று அழைக்கப்பட்டு பின்னாளில் பன்றித்தலைச்சி என்று மருவியதென்றும் கூறுவர். பன்றித்தலைச்சி அம்மன் என்ற பெயரே மக்களிடையே பெருவழக்காகக் காணப்படுவதோடு

இப்பெயரே அருளாட்சியுடைய பெயராகவும் விளங்குகின்றது. கண்ணகித் தெய்வம் கிராமியத் தெய்வமாக இருப்பினும் இன்று நாகரிகம் கருதியும் அந்நியச் செலாவணியாலும் ஆகம முறைக்குள் வந்துவிட்டது. இருப்பினும் அதன் பொங்கல், வழிபாட்டு, படையல் முறைகள் கிராமியப் பூசை முறைகளினையே வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆரம்ப காலத்திலிருந்து இக் கோயிலினை நாகர் கதிர்காமரே பராமரித்து பூசையும் செய்து வந்துள்ளனர். பின்னர் இவரது மகனான வேலாயுதர் கோயில் பராமரிப்பைத் தொடர்ந்து செய்துவந்தார். கி.பி. 1800 ஆம் ஆண்டில் வேலாயுதரின் மகனான கதிர்காமர் என்பவர் கோயில் நிர்வாகத்தையும் பூசை முதலியவற்றின் பொறுப்பையும் ஏற்றார். அப்பொழுது இவரின் மகனான அப்பாக்குட்டி என்பவர் இவருக்குத் துணையாக இருந்துள்ளார்.

கி.பி. 1900 ஆம் ஆண்டளவில் கோயில் முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இக்காலப் பகுதியில் வேலாயுத உடையாரின் மகன் கதிர்காமர் கோயில் நிர்வாகத்தையும் பூசை முறை-களையும் ஏற்று நடத்திவந்தார். அக்காலப்பகுதியில் பங்குனித்திங்களில் நடைபெறும் விழாக்களில் சுவாமி வலம் வருவது கிடையாது. பூசைமுறைகளையும் மரபுவழியாக கதிர்காமர் பரம்பரையினரே செய்து வந்தனர். இவர் காலத்தில் இம் முறைகளில் மாற்றம் ஏற்பட்டது. பங்குனித் திங்கள் திருவிழாவும் வீதி வலம் வருதலும் மாலை 5.00 மணிக்கு முன் நடைபெற வேண்டும் என்ற விதிமுறைகளையும் ஏற்படுத்தினர். கோயில் திருக்குளத்தைத் திருத்தியமைத்து வெள்ளைக் கற்களால் படிக்கட்டுகளும் இவரால் கட்டப்பட்டன.

கி. பி. 1934 ஆம் ஆண்டில் சின்னப்பா செல்லத்துரை என்பவர் நிர்வாகப் பொறுப்பை ஏற்று கோயில் விதிமுறைகளில் மேலும் பல மாற்றங்களைச் செய்தார். திங்கட்கிழமைகளில் கண்ணகி அம்மனுக்கு இரண்டு நேரப் பூசையும் மற்றைய நாள்களில் அபிஷேகமும், விளக்கு வைத்தலும் மாத்திரம் நடைபெற்று வந்ததை இவர் மாற்றியமைத்தார். கி. பி. 1939 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு நேர நித்தியப் பூசை செய்யும் வழக்கத்தினை நடைமுறைப்படுத்தினார். இவ்வாண்டிலேயே வெளிமண்டபமும் கட்டப்பட்டது. 1940 - 1942 க்கும் இடைப்பட்ட காலத்தில் கண்ணகி அம்மனின் அர்த்த மண்டபம், சபா மண்டபம், தரிசன மண்டபம் என்பன கட்டப்பட்டன. ஆரம்பத்தில் ஆசனத்தில் கும்பம் வைத்து முகம் சாத்தி அம்மனுக்கு பூசை நடைபெற்று வந்தது. 1943 ஆம் ஆண்டு சின்னப்பா சிவகுரு என்பவர் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற போது இவ் வழக்கத்தைக் கைவிட்டார். 1946 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் கண்ணகி அம்மனின் தாமிர விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, மகா கும்பாபிஷேகம் முதன் முதலாக நடைபெற்றது. இதே ஆண்டு மார்கழித் திருவெம்பாவையில் கொடியேற்றத் திருவிழாவையும் முதன் முதலாக ஆரம்பித்து ஆலய நெறிமுறைகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். 1949 ஆம் ஆண்டில் கோயிலுக்குச் சுற்றுமதில் கட்டப்பட்டது. இதே ஆண்டில் வைரவர் கோயில், யாகமண்டபம், மணிக்கோபுரம் ஆகியவற்றைக் கட்டும் வேலைகள் ஆரம்பமாகின. அடுத்த ஆண்டில் இருந்து இங்கு நான்கு நேரப் பூசை நடைபெற்றது. பின்னர் 1952 ஆம் ஆண்டில் இருந்து ஆறு காலப் பூசையாக மாற்றம் பெற்றது. 1955 இல் சம்புரோட்சன கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1958ஆம் ஆண்டு சிவகாமி அம்மன் தாமிர விக்கிரகத்தைப் புதிதாகப் பிரதிஷ்டை செய்தனர்.

கி.பி 1750 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கண்ணகி அம்மனின் மூலஸ்தானமும் நீராவி மண்டப உப பீடமும் பழுதடைந்து காணப்பட்டமையால் ஏறக்குறைய 240 வருடங்களின் பின் 1989 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் நடைபெற்றது. மூலஸ்தானம், நீராவி மண்டபம், விமானம் என்பனவும் சிவகாசி அம்மன் கோயில், பிள்ளையார் கோயில், கந்தசாமி கோயில், வைரவர் கோயில், நாகதம்பிரான் கோயில், சனீச்சரன் கோயில் ஆகியவற்றின் விமானங்களும் அமைக்கப்பட்டன. வைரக்கற்களால் ஸ்தம்பக்குறடும் அழகாக அமைக்கப்பட்டு 1991 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. ஆரம்பகாலத்தில் கிராமிய முறைப்படி வணங்கப்பட்ட இக்கோயில் தற்காலத்தில் ஆகமமுறை தழுவிய கோயிலாக வளர்ச்சியடைந்துவிட்டது.

# காலத்தால் அழியாத இசைக்கருவிகளும் எமது சமயமும்

திருமதி தனலட்சுமி குலசேகரம்

நாம் தற்காலத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இசைக்கருவிகள், பல ஆண்டுகளுக்கு முன்பாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. நாயன்மார், திருமூலர் சேக்கிழார் ஆகியோரால் பாடப்பெற்ற திருப்பாடல்களில் இக்கருவிகள் பயன்படுத்தப்பட்டமை சொல்லப்பட்டிருக்கின்றது. தொல்காப்பியத்திலும், சிலப்பதிகாரத்திலும் இக்கருவிகள் பற்றி எடுத்தாளப்பட்டுள்ளன.

இறைவனைப் போற்றிப் பாடும் போதும், இறை ஸ்தலங்களின் பெருமை பற்றிப் புகழும் போதும், நாயன்மார்களின் செயல்களை வர்ணிக்கும் போதும் சேக்கிழார் பெரியபுராணப் பாடல்களில் இசைக்கருவிகள் ஒலிக்க நடைபெற்றது போல் வர்ணித்துள்ளார்.

திருஞானசம்பந்தர் பாடலில் சில பாடல்களின் வரிகள்

1. தலையிலங்கும் பிறை தாழ் வடஞ்சூலந் தமருகம்
   அலையிலங்கும் புனலேற்ற வர்க்கும் மடியார்க்குமே
2. மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கள் மிடைந்துகளும் வேதவனமே.
3. சீரேற்ற முடைத்தாய் செங்காட்டங் குடியதனுள்
   காரேற்ற கொன்றையான் கணபதீச்சரத்தானே.
4. பிறையும் பெரும்புனல் சேர்சடை சடையினாரும் பேடைவண்
   டறையும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே.
5. தண்டுடுக்கை தாளம் தக்கை சார நடம்பயில்வார்
   பண்டிடுக்கண் டீரநல்கும் பல்லவனீச்சரமே.
6. துடிகளோடு முழவம் விம்மவே ............
   அடிகள் சோற்றுத்துறை சென்றடைவோமே.
7. விட்டபுன் சடையினான் மேதகும் முழவொடுங்
   கொட்டமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே.

திருநாவுக்கரசர் பாடல்களின் சில வரிகள்

1. சுற்றுமே தொண்டைவாய் உமையோர் பாகங்
   கூடுமே குடமுழவம் வீணை தாளங்
   குறுநடைய சிறுபூதம் முழக்க மாக்கூத்
   தாடுமே அந்தடக்கை அனலேந் தும்மே
   அவனாகில் அதிகை வீரட்டானமே
2. மெய்யடியார் உள்ளத்து வித்துக் கண்டாய்
   பைகிளரும் நாக மசைத்தான் கண்டாய்
   பராபரன் கண்டாய்பா சூரான்கண்டாய்
   ........ மறைக் காட்டுறையும் மணாளன் றாளே.

3.....தக்கையொடு தாளங் கறங்கக் கண்டேன்
மழையார் திருமிடறும் மற்றுங் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே.

இவ்வாறு இந்த வாத்தியங்கள் சேர்த்து ஒலிக்கச்செய்து எமது சைவப் பெரியோர் பாடியுள்ளனர். வாத்தியங்களின் படங்களும் இங்கே தரப்பட்டுள்ளன.


மணி
வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் பாடல் மணி முழவோசையும்
கீத ஓசையும் மாய்க் கிளர்உற்றவே. 12.0087
– சேக்கிழார்


பம்பை
நெடுஞ் சடை கரந்திட நெறித்த பம்பையும்
இடும் பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்து வேட்கோவர் தம் மனையில் நண்ணினார். 12.0371
– சேக்கிழார்


குடமுழா
பாடுமே மொழியாமே நால்வே தமும்
படர்சடைமேல் ஒளிதிகழ்ப் பனிவெண் திங்கள்
சூடுமே அரைதிகழ்த் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தொண்டைவாய் உமையோர் பாகங்
கூடுமே குடமுழவம் வீணை தாளங்
குறுநடைய சிறுபூதம் முழக்க மாக்கூத்
தாடுமே அந்தடக்கை அனலேந் தும்மே
அவனாகில் அதிகைவீரட்ட னாமே. 6.4.5
– திருநாவுக்கரசர்


வீணை
கைகிளரும் வீணை வலவன் கண்டாய்
காபாலி கண்டாய் திகழுஞ் சோதி
மெய்க்கிளரும் ஞானவிளக்குக் கண்டாய்
மெய்யடியார் உள்ளத்து வித்துக் கண்டாய்
பைகிளரும் நாக மசைத்தான் கண்டாய்
பராபரன் கண்டாய்பா சூரான் கண்டாய்
வைக்கிளருங் கூர்வாட் படையான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் றானே.6.23.2.
– திருநாவுக்கரசர்


யாழ்
ஞானம் உண்டார்கேட்டு அருளின் நல்ல இசை யாழ்ப் பெரும் பாணர்க்கு
ஆன படியால் சிறப்பு அருளி அமரும் நாளில் அவர் பாடும்
மேன்மை பதிகத்து இசை யாழில் இடப் பெற்று உடனே மேயின்
பாணர்களத்தார் பெருமணித்தில் உடனே பரமர் தாள் அடைந்தார். 12.4225
– சேக்கிழார்


தமருகம்
கடையிலங் கும்மழு கட்டங்கம் கண்டிகை குண்டலம்
விலையிலங் கும்மணி மாடத்தர் வீழிமி ழலையார்
தலையிலங் கும்பிறை தாழ்வடஞ் சூலந் தமருகம்
அலையிலங் கும்புன லேற்றவர்க் கும்மடி யார்க்குமே. 3.9.4.
திருஞான சம்பந்தர்


துத்திரி (துத்தேரி)
கத்திரிகை துத்திரிக றங்குதுடி தக்கையொ டிடக்கைபடகம்
எத்தனையு லப்பில்கரு வித்திரள லம்பஇமை யோர்கள்பரச
ஒத்தற மிதித்துநட மிட்டவொரு வர்க்கிடம தென்பருலகில்
மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கள் மிடைந்துகளும்
வேதவனமே. 3.76.5
– திருஞானசம்பந்தர்


திருச்சின்னம்
திருச்சின்னம் பணிமாறக் கேட்ட நால்திசை உள்ளோர்
பெருக்கின்ற ஆர்வத்தால் பிள்ளையார் தமைச் சூழ்ந்த
நெருக்கின் இடையவர் காணா வகை நிலத்துப் பணிந்து உள்ளம்
உருக்கி எழும் மனம் பொங்கத் தொண்டர்
குழாத்துடன் அணைந்தார். 12.2831
– சேக்கிழார்


சங்கு
வாரேற்ற பறையொலியுஞ் சங்கொலியும் வந்தியம்ப
ஊரேற்ற செல்வத்தோ டோங்கியசீர் விழவோச்
சீரேற்ற முடைத்தாய் செங்காட்டங் குடியதனுள்
காரேற்ற கொன்றையான் கணபதீச் சரத்தானே. 1.61.2
– திருஞானசம்பந்தர்


கொம்பு
வெல் படைத் தருகன் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம் தோறும்
கொல் எறி குத்து என்று ஆர்த்து குழுமிய ஓசை அன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி
கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும். 12.0654
– சேக்கிழார்


தக்கை (உடல்)
குழையார் திருத்தோடு காதிற் கண்டேன்
கொக்கரையுஞ் சச்சரியுங் கொள்கை கண்டேன்
இழையார் புரிநூல் வலத்தே கண்டேன்
ஏழிசை யாழ்வீணை முரலக் கண்டேன்
தழையார் சடைகண்டேன் தன்மை கண்டேன்
தக்கையொடு தாளங் கறங்கக் கண்டேன்
மழையார் திருமிடறும் மற்றுங் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே.6.77.7
– திருநாவுக்கரசர்


கண்டை
(தவண்டை)
சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன் துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொரு படை மிடைந்த பொற்பின்
மங்குல வான கிளர்ச்சி நாண மருங்கு எழுந்து இயம்பி மல்க. 12.581
– சேக்கிழார்


கொக்கரை
கொக்கரை குழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க ஆட லுகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பர் ஆரூரரே. 5.7.1
– திருநாவுக்கரசர்


திமிலை
சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன் துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொரு படை மிடைந்த பொற்பின்
மங்குல் வான் கிளர்ச்சி நாண மருங்கு எழுந்து இயம்பி மல்க. 12.581
– சேக்கிழார்


இடக்கை
கத்திரிகை துத்திரக நங்குதுடி தக்கையொடு இடக்கை
எத்தனையு லப்பில்கரு வித்திரள லம்பஇமை யோர்கள்பரச
ஒத்தற மிதித்துநட மிட்டவொரு வர்க்கிடம
மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கள் மிடைந்துகறும் 3.76.5
– திருஞானசம்பந்தர்


குழல்
( புல்லாங்குழல் )
பறையுஞ் சிறுகுழலும் யாழும்பூதம் பயிற்றவே
மறையும் பலபாடி மயானத்துறையும் மைந்தனார்
பிறையும் பெரும்புனல்சேர் சடையினாரும் பேடைவண்
டறையும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. 1.45.6
– திருஞானசம்பந்தர்


சிறுபறை
( கஞ்சிரா )
துளைபடு குழலிசை துடியொடு சிறுபறை
கிளையொடு படலிகை கிளையொடு கிளர்தர
வளையொடு வயிரிசை மருவிய மழையென
சூளாமணி – 936.


தாரை
சங்கு துந்துபி தாரை பேரி இம்முதல்
பொங்கு பல்லிய நாதம் பொழிந்து எழ
அங்கணன் அருளால் அவை கொண்டு உடன்
பொங்கு காதல் எதிர் கொளாப் போதுவார். 12.2101
– சேக்கிழார்


தாளம்
சங்கொடு தாரை சின்னம் தனிப் பெரும் காளம் தாளம்
வங்கியம் ஏனை மற்று மலர் துளைக் கருவி எல்லாம்
பொங்கிய ஒலியின் ஓங்கிப் பூசுரர் வேத கீதம்
எங்கணும் எழுந்து மல்கத் திருமணம் எழுந்தது அன்றே 12.3097
– சேக்கிழார்


சிலம்பு
அங்கே அடற்பெரும் தேரெல் லாம்தொழச்
சிங்கா தனத்தே சிவன்இருந் தானென்று
சங்குஆர் வளையும் சிலம்பும் சரேலெனப்
பொங்குஆர் குழலியும் போற்றிஎன் றானே. 10.2356
– திருமூலர்


பறை
தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தியாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப
– தொல்காப்பியம்


துடி
துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்கா டரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகள் சேர்வது அந்துறையின் நடைவோமே.1.28.6
– திருஞானசம்பந்தர்


உடுக்கை
உண்டுடுக்கை யின்றியேநின் றூர்நகவேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற்போர்த்தார் கண்டறியாதவிடந்
தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம்பயில்வார்
பண்டிடுக்கண் தீரநல்கும் பல்லவனீச்சரமே. 1.65.10
– திருஞானசம்பந்தர்


முரசு
நரியைக் குதிரைசெய் வானும் நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானை முன்னோட முன்பணிந் தன்பர்கள் ஏத்த
அரவரைச் சாத்திநின் றானும் ஆரூ ரமர்ந்தஅம் மானே. 4.4.2
– திருநாவுக்கரசர்


தண்ணுமை
யாழும் குழலும் சீரு மிடறும்
தாழ்குரற்று தண்ணுமை யாடலொடு இவற்றின்
இசைந்து பாடல் இசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொருள் இயங்கு
சிலம்பு – அரங் (26–29)
இளங்கோவடிகள்


கொட்டு
தட்டொடு தழைமயில் பீலிகொள் சமணரும்
பட்டுடை விரிதுகிலி னார்கள்சொற் பயனிலை
விட்டபுன் சடையினான் மேதகு முழவொடுங்
கொட்டமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே. 2.99.10
– திருஞானசம்பந்தர்

# திருமந்திரம் கூறும் மறுமை பற்றிய சிந்தனைகள்

- திரு.க.குணரத்தினம் - ஆசிரியர், டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி

சைவ நாயன்மார்களால் பாடப்பெற்ற பக்தி இலக்கியங்களில் "திருமந்திரம்" என்பது தனித்துவமான ஒன்றாகும். ஏனைய சமய இலக்கியங்கள் இறை பக்தியை, அடியார் பக்தியைப் பாடுபொருளாகக் கொண்டவை. திருமந்திரம் ஒரு சமய தத்துவ நூலாக மிளிர்கின்றது. இது "தமிழ் ஆகமம்", "தமிழ் மூவாயிரம்" என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகின்றது. அந்த வகையிலே திருமந்திரத்தைத் தத்துவ நூலாக நோக்குவதே மிகவும் பொருத்தமுடையது. பசுவாகிய ஆன்மா பதியாகிய இறைவனை அடைவதே ஆன்ம இலட்சியம். இதில் பசுவாகிய ஆன்மா பதியாகி இறைவனை அடைவதற்குத் தடையாக இருப்பவை பாசங்களாகும். எனவே பசுவாகிய ஆன்மா பாசங்களில் இருந்து விடுபட்டு பதியாகிய இறைவனை அடைவதற்கான மார்க்கங்கள் அல்லது வழிகளைக் கூறும் நூல் திருமந்திரம் ஆகும்.

திருமந்திரம் கூறும் மறுமை பற்றி நோக்குகின்றபோது மறுமை என்றால் முத்தி, மோட்சம், விடுதலை என்றெல்லாம் தத்துவ சாத்திர நூல்கள் இயம்புகின்றன. அந்த வகையிலே முத்தி அல்லது மோட்சம் இரண்டு வகைப்படும்:-

1. ஜீவன் முத்தி  2. பரமுத்தி

ஜீவன் முத்தி என்பது உடலோடு உயிர் இருக்கின்றபோதே அடையப்பெறும் முத்தியாகும். பரமுத்தி என்பது உடலை விட்டு உயிர் பிரிந்த பின்னர் ஆன்மா இறைவனுடன் சேருவது ஆகும். திருமூலர் கோட்பாட்டின்படி பார்த்தால் ஜீவன் முத்தி நிலை பற்றியே அதிகம் வலியுறுத்துகின்றார். சித்தம் சிவமாகி சித்தத்தினுள்ளே சிவனைக் காண்பதே திருமந்திரத்தின் முடிபு. ஆன்மா உலகப் பற்றுக்களிலும் தளைகளிலும் இருந்து விடுபடவேண்டும் என்பதற்காகவே அறநெறி சார்ந்த விழுமியங்களை முதலில் கூறுகின்றார். அன்புடைமை, நடுவு நிலைமை, புலால் மறுத்தல், கொல்லாமை, கள்ளுண்ணாமை, மகளிர் இழிவு, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகியவற்றை எடுத்துக்கூறி, மொத்தத்தில் உலகியல் வாழ்க்கையின் நிலையாமைத் தத்துவத்தைக் கூறி ஆன்மாவைப் பக்குவ நிலைக்குள் கொண்டு வருகின்றார். அதன் பின்னர் படிப்படியாக இறைவனை அடைவதற்கான மார்க்கங்களை வலியுறுத்துகின்றார். மறுமைக்கான மார்க்கங்களாக சைவ நாற்பாதங்கள் (சரியை கிரியை, யோகம், ஞானம்), சிவசின்னங்கள், (விபூதி, திருவைந்தெழுத்து, உருத்திராக்கம்), சிவபூசை, குருபூசை போன்றவற்றை வலியுறுத்துகின்றார்.

எனவே மறுமைக்கான மார்க்கங்களைப் பின்பற்றி வருகின்றபோது பசுவாகிய ஆன்மாவைப் பற்றியுள்ள பாசங்கள் நீங்கும். படிப்படியாக மும்மல பாசங்களாகிய ஆணவம், கன்மம், மாயை நீங்குகின்றபோது உடல் கோயிலாகி, உயிர் சிவமாகும். இதனை,

" மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்"

என்ற பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

இந்நிலையில் ஆன்மாவைப் பற்றிநிற்கின்ற திரோதான சக்தியாகிய மாயா சக்தி நீங்கி திருவருட்சக்தி ஆன்மாவில் படிகின்றது. அப்போது ஆன்மஞானம் கைகூடும். அந்தப் பரிபக்குவ நிலையிலே இறைவனே சற்குருவாக வந்து முத்தி வழங்குவார். இதனைத் திருமூலர்,

"இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே
பசைந்தெழு நீசரைப் பாசத்தின் ஏகச்

சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து வந்தே”
எனக் குறிப்பிடுகின்றார்.

அடுத்து பரமுத்தி. பரமுத்தி என்பது இறைவன் திருவடியில் ஆன்மா சேர்வதாகும். இதுவும் சாலோபம். சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என நான்காக வகுக்கப்படுகின்றது. “அவனருளாலே அவன் தாள் வணங்கி” என்கிறார் மணிவாசகர். இவ்வாறே திருமூலரும் அவனருளால் அவன் திருவடி காணமுடியும் என்கிறார். அந்தத் திருவடிப்பேறு கிடைக்கப் பெறுவதையே முத்தி, மோட்சம், மறுமைப்பேறு என்றெல்லாம் சைவசமயக் கோட்பாடுகள் வலியுறுத்தக் காணலாம். இறைவன் திருவடியை அடைந்த ஆன்மா பரிசுத்த ஆன்மாவாக மலநீக்கம் பெற்று முத்தி அடைகின்றது. இதனைத் திருமூலர்.

“திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் நீக்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே”

என்ற பாடலினூடே தெளிவுபடுத்துகின்றார். இறைவன் திருவடிப் பேற்றினைக் கண்ட ஆன்மா பேரானந்தப் பெருவாழ்வைப் பெறும். அப்போது எல்லாமே சிவமயமாகும். இதனை,

“மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே”

என்ற பாடலிலே பதிவு செய்துள்ளார்.

இங்கு இன்னோர் விடயத்தினையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். திருமூலர் மறுமையைப்பற்றி வலியுறுத்துகின்றபோது உடலோடு உயிர் இருக்கின்றபோதே அடையும் ஜீவன் முத்தியை அதிகம் பேசுகின்றார். இவர் ஆன்மஞானம் கைவரப்பெற்று சித்தராகவே இருந்தவர். தனது சித்தின் வலிமையால்தான் மூப்புப்பிணியடைந்த சரீரத்தினைக் களைந்து வேறு சரீரத்தினைப் பெற்று இவ்வுலகில் வாழ்ந்த “ஞானி”, சித்தின் வலிமை பெற்ற “யோகி”. இதனால் ஜீவன் முத்தி பற்றிய சிந்தனைகளே அதிகம் பேசப்படுகின்றது.

ஆன்மா திருவருட்சக்தியினைப் பெற்று சிவமாக இருக்கின்றபோது இறைவனின் ஆனந்தக்கூத்து தரிசனம் கிட்டும். இதுவே ஜீவன் முத்தியின் நிறைவாகும்.

“தத்துவம் ஆடச் சதாசிவன் தான்ஆடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தான் ஆட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே”

என்ற திருமந்திரப் பாடல் இதனை விளக்குவதாக அமைந்துள்ளது.

இவ்வாறாக, திருமந்திரம் என்ற தத்துவ சாத்திர நூல்வழி நின்று திருமந்திரம் கூறுகின்ற மறுமை பற்றிய வரையறைகளையும் கோட்பாடுகளையும் சுருக்கி முடிந்தளவு சுருக்கமாகவும் விளக்கமாகவும் தந்துள்ளேன். படித்துப் பயன் பெறுக.

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”

# தமிழர் வாழ்வில் இசையும் ஆலயமும்

செல்வி. வே.கீர்த்திகா
ஆசிரியை, அரசடி அறநெறிப் பாடசாலை, மிருசுவில்

உலகில் தோன்றிய அனைத்து மனித இனங்களும் தமக்குரிய வழிபாட்டு மரபுகள், ஆலயங்கள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளனர். மேலும் அவர்கள் ஆலய வழிபாடு, விழாக்கள், இன்ப, துன்ப நிகழ்வுகளில் இசைக்கு இன்றியமையாத இடங்கொடுத்துள்ளனர். குறிப்பாக வழிபாட்டில் இசைக்கு இருக்கும் இடத்தினை வேறு எதைக் கொண்டும் நிரப்ப இயலாது.

**தமிழரும் ஆலயமும்**

வேத மந்திரங்கள் ஒருவித ஒலி அலைகளை ஏற்படுத்துகின்றன, மேலும் அவற்றினை சுருதி என அழைக்கப்படுவதன் காரணமும் அதுதான். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா" என்ற தமிழ்ப் பழமொழி சமயத்தின்பால் பழந்தமிழர் வைத்திருந்த சமயப்பற்றால் மட்டுமன்றி, ஆலயத்தினைச் சுற்றியே அந்தத் தமிழர்களின் வாழ்வு அமைந்திருந்தது என்பதனைக் காட்டுகின்றது. ஆலயங்கள் கற்றறிந்த சான்றோருக்கு அறிவு மடையாகவும், சிற்பிகளுக்கு சிற்பக்கலைக் கூடங்களாகவும், ஓவியர்களுக்கு அவர்களின் கற்பனைப் பிரதிபலிப்புக் கூடங்களாகவும், இசை, நாட்டியக் கலைஞர்களுக்கு ஒரு முக்கிய சான்றின் இடமாகவும் அமைந்தன. கடவுள் வழிபாட்டில் இசையுடன் கூத்தையும் சேர்த்து ஆண்டவன் அவையில் சமர்ப்பித்தல் என்பது தொன்று தொட்டு வருகின்ற மரபாகும்.

"குன்றகச் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக்குரவை ஆயர்"

"சிறு ஊரில் இருக்கின்ற சுற்றத்தாருடன் கூடி, தொண்டகம் என்னும் சிறு பறை இசைக்கருவியை இசைத்து முருகக்கடவுள் முன் குரவைக்கூத்து ஆடினர்" என்று இப்பாடல் கூறுவதன் மூலம் இசையும், வழிபாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பது தெளிவாகின்றது.

முற்காலங்களில் வழிபாட்டின்போது, அதிகாலை காந்தாரப் பண்ணையும், பின்னர் சாடவம் என்ற பண்ணையும், பின்னர் கௌசிகத்தையும், மாலைச்சந்தியில் சைந்தவம் என்ற பண்ணையும் பாடியதாக ஆகமங்கள் கூறுகின்றன. இந்த ராகங்கள் ஒவ்வொரு ஆலயத்திற்கும் பிற்காலத்தில் மாறுபட்டு வந்ததுபோல வாத்தியங்களும் மாறுபட்டு வந்தன. வீணை வாசிக்கும் கலைமகள், குழல் ஊதும் கண்ணன், மிருதங்கம் வாசிக்கும் நந்திகேசர், தம்புரா ஏந்திய நாரதமுனி எனக் கடவுள்களையே இசை மீட்டச் செய்து கடவுளை, ஏழிசையும், இசைப்பயனும் இன்னமுதமாய் வணங்கிய தமிழர்கள் இசைத்தொண்டு செய்ய, ஆலயங்களில் பாடவியர்(நடன ஆசான்), காந்தர்வன்(பாடகர்), காந்தர்வி (பாடகி), உடுக்கை வாசிப்பவன், வீணை வாசிப்பவன், முத்திரைச்சங்கு ஊதுபவன், கொட்டு மத்தளம் வாசிப்பவன், சகடைக்கொட்டி போன்ற கலைஞர்களைக் கடவுளுக்கு தொண்டு செய்ய நிறுவினார்கள்.

**ஆலயமும் இசையும்**

வேதநெறியானது தழைத்தோங்க சைவத்துறை விளங்க இறையருளால் திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்பதைச் சேக்கிழார் பெருமான் கூறியருளியது பலரும் அறிந்தது. முடியுடை மூவேந்தர்களுள் சோழ மன்னர்கள் தாம் தமது பரந்த மனப்பான்மைக்கேற்ப பெரிய திருக்கோயில்களைக் கட்டினார்கள்.இன்னமும் சொல்லப்போனால் அரண்மனைகூட இல்லாமல்

ஆட்சி செலுத்தி கோயில்களை மிகப் பெரியனவாகக் கட்டிய பெருமை அவர்களையே சாரும். மேலும் பூசை முறைகளையும், திருவிழாக்களையும் ஆகம முறைப்படி நிகழ்த்துவதற்கு ஏற்ப வழிவகைகளைக் கண்டனர்.

ஆலயங்களில் தமிழ்ப்பாசுரங்கள் ஒரு பக்கமும் வேதகானங்கள் மறுபக்கமும் பிழையின்றிப் பாடப்பெறல் வேண்டும் என்பதே ஆட்சியாளர்களின் விருப்பம். குலோத்துங்க சோழன், அம்பலத்து ஆடுவான் பட்டன், திருவரங்க முடையான் பட்டன் முதலிய ஐந்நூறு தமிழ்ப் பட்டர்களை அவர்கள் குடும்பத்தோடு வேதகானம் சொல்லிக் கொடுக்கவும் ரூப அவதாரம் என்ற சமஸ்கிருத இலக்கணம் போதிக்கவும் வேங்கி நாட்டுக்கு அனுப்பி வைத்தான் என்று செப்பேடு (குலோத்துங்கனால் வரையப்பட்டது) கூறுகிறது. காஞ்சி காமகோடி பீடாதிபதி, தவத்திரு சங்கராச்சாரியர் சுவாமிகளின் சொற்பொழிவுகளைத் திரட்டி ஜகத்குருவின் உபதேசங்கள் என்ற பெயருடன் வெளியிட்ட நூலில் இவ்விவரங்களைக் காணலாம். மேலும் நாடாளும் வேந்தர்களின் இசைப்பற்றினை அறியும் சான்றாகவும் இச்செய்தி உள்ளது.

**ஆலய இசைமுறைகள்**

ஆலயங்களில் வழிபாட்டு வேளைகளில் பெரும்பாலும் நாதசுரம், தவில் போன்ற இசைக்கருவிகள் வாசிக்கப்படுகின்றன. மேலும் முரசு ஒலிக்கப் பெறுகிறது. ஆனால் அது இன்று மின்சார முரசாக ஒலிக்கின்றது.

ஆலய வழிபாட்டு வேளைகளில் வாசிக்கப்பெறும் இசையைக் கேட்டுக் கடிகார உதவியின்றி நேரத்தை மக்கள் அறிந்து கொண்டனர். இதனை விரித்திடும் வகையில் காலை நான்கு மணி சுமாருக்கு பூபாளம், பௌளி, மலயமாருதம், காலை ஆறு மணிக்கு பிலகரி, கேதாரம், உச்சி வேளையில் முகாரி, பூரணசந்திரிகா, மாலை இரண்டு மணிக்கு காம்போதி, தோடி இரவு பத்து மணிக்கு மேல் ஆனந்தபைரவி, நீலாம்பரி, நடுநிசியில் பேகடை, சாமா இரவு இரண்டு மணிக்கு மேல் நாலு மணி வரை மோகனம், இந்தோளம் போன்ற ராகங்களை முறைப்படி வாசிப்பது வழக்கம். ஆண்டவன் புறப்பாட்டுக்கு முன் தவில் கண்ட நடையில் அலாரிப்பு வாசகம் நடைபெறும். சுவாமி தூக்கும் பணியாளர்கள் அலாரிப்பு கேட்டதும் பல திக்குகளில் இருந்து வந்து தயாராக நிற்பது வழக்கம். இதனைத் தொடர்ந்து நாகசுரத்தில் நாட்டை ராக ஆலாபனை கேட்டதும் பக்தர்கள் சுவாமி புறப்பாட்டு தரிசனத்திற்குக் கூடுவார்கள்.

**கிராமக் கோயில்களில் இசை**

கிராமக் கோயில்களைப் பொறுத்தவரையில் வழிபாட்டில் ஒவ்வொரு நிலையிலும் இசை இன்றியமையாத ஒன்றாக இருக்கும். குறிப்பாக அம்மன் கோயில்களுக்கு மது, முளைப்பாரி, பால் சுமக்கும் பக்தர்கள் விழா நாளுக்குப் பல நாள்கள் முன்னதாக விரதம் இருப்பர். இந்தக் குரவையுடன் காலகட்டங்களில் கும்மியடித்தல், நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுதல் போன்ற நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றனர். இசையும் இறைவனும் ஒன்று என்பதை வாழ்வியல் நெறியாகக் கொண்டுள்ளனர். தீமிதித் திருவிழா, அலகு குத்துதல் போன்ற சடங்குகளிலும் இசைக்கு இன்றியமையாத இடமுண்டு.

**பாணர்களும் வழிபாட்டிசையும்**

இசைக்காகத் தம்முடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் வழங்கிக் காலமெல்லாம் இசையை வளர்த்த பெருமைக்குரியவர்கள் பாணர்கள். இவர்கள் சில வேளைகளில் போதிய வாழ்வியல் வசதிகளைப் பெறாத காரணத்தினால் மீன்பிடித்தல், காதலர்களுக்குத் தூது போதல் முதலிய தொழில்களில் ஈடுபட்டும் குலத்தொழிலை இழந்தனர். எனினும் திருநீலகண்ட

யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வர், பாணபத்திரர் போன்ற இசையறிஞர்கள் இசையுடன் இறையநுபவமும் பெற்றனர்.

**ஆழ்வார், நாயன்மார் வழிபாட்டிசை**

தெய்வநல இசை மூலமாக நாயன்மார்களும், ஆழ்வார்களும் பல வியக்கதக்க சாதனைகளை செய்துள்ளனர். சும்பந்தரின் இசை எலும்பைப் பெண் ஆக்கியதும், அப்பர் பெருமானின் இசை இறந்த பாலகனை உயிர்பித்ததும் தமிழர்களின் நெஞ்சத்தில் இன்னும் நீங்காமல் உள்ளன.

சைவத்தின் நாயகன் சிவபெருமான் இசைப்பித்தன் என்று காவியங்கள் உணர்த்துகின்றன. இசை கேட்டு மயங்கி இராவணனுக்கு வரமளித்தவன் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. சைவசமய நாயன்மார்களில் முக்கியமானவர்களாய் குறிப்பிடப்படும் நால்வர் இசை வழியாக இறைவனைக் கண்டார்கள். இவர்களின் பதிகங்கள் இன்றளவும் சிவாலயங்களில் வேதத்திற்கு ஒப்பாக மதித்து ஓதப்பெறுகின்றன.

**இசைத்தூண்கள்**

தமிழர் வரலாற்றில் இசைத்தூண்கள் என்பவை அரிய கண்டுபிடிப்புகளாகும். பாறைகளிலிருந்து ஒலி எழுப்பும் அற்புதத்தினைக் கண்ட மன்னர்கள் காலம் காலமாக இசைக்கலையை போற்றிப் பாதுகாக்கும் பொருட்டு கோயில்களில் இறைவன் சந்நிதியில் இசைத்தூண்களை அமைத்தனர். இத்தூண்கள் சிலவற்றில் ஏழிசைச் சுரங்களும், சிலவற்றில் இசைக்கருவிகளின் ஒலியும் கேட்கின்றன. தாராசுரம், ஆழவார்திருநகரி, சண்பகராமநல்லூர், நெல்லையப்பர் கோயில்களிலும் இன்னும் பிற கோயில்களிலும் இவ்இசைத்தூண்கள் காணப்படுகின்றன. கல்லில் கலைவண்ணம் கண்ட தமிழர்களின் இசைக்கருவிகளின் வரலாற்றை எடுத்துரைப்பது ஆலயச் சிற்பங்களே ஆகும். இசைக்கருவிகள், அவற்றை வாசிப்போர் போன்றவர்களையும், சிலைகளாகச் செதுக்கியும், சிறபங்களாக வடித்தும் உள்ளனர்.

**ஆலய இசைக்கு அரசின் நல்கைகள்**

அரசர்கள் காலத்தில் நிலமும் இடமும் கொடுத்து ஆதரிக்கப்பட்ட இசைக்கலைக்கு இன்றளவும், சில ஊர்களில் விவசாயத்திற்குரிய நிலமும், குடியிருப்பதற்கான வீடும் வழங்கப்பெற்று வருகிறது. ஊதியமுறைக் கலைஞர்களாகப் பலரும் உள்ளனர். ஆலயங்களில் நாதசுர, தவில் கலைஞர்கள், சின்னமேளம் என்றழைக்கப்படும் நட்டுவதாளக் கலைஞர்கள், தேவார ஓதுவார்கள் போன்ற கலைஞர்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்திலுள்ள ஆலயங்களில் நிரந்தரப் பணியாளர்களாக உள்ளனர்.



# அன்பே வடிவான அன்னை வராகி
# தஞ்சைப் பெருவுடையார் கோயில்

## திருமதி சாவித்திரி ஆனந்தன்

தமிழ் நாட்டின் தஞ்சாவூரில், காவேரி ஆற்றின் தெற்கில், கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கும் ஒரு அதிசய அழகு. கட்டடக் கலையிலும் சரி, சிற்பக் கலையிலும் சரி, தமிழன் கொண்டிருந்த வியத்தகு நுண்ணறிவைத் தனக்குள் பொதிந்து வைத்திருக்கும் ஒரு வரலாற்று ஆச்சரியம். தமிழருடைய பாரம்பரிய மேன்மைகளை பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஒரு கலாசாரப் பொக்கிஷம். ஏறத்தாழ 1010 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்தப் புராதனக் கோயிலை உருவாக்கியவன் ராஜராஜசோழன் எனப் பலராலும் போற்றப்படுகின்ற அருள்மொழிவர்மன் எனும் சோழ மன்னன் என்பது தமிழினத்தின் தனிப்பெருமை.

இப்படி ஒரு கோயிலைக் கட்டவேண்டும் என்ற எண்ணம் தோன்றிய விநாடியிலிருந்து அதற்குரிய ஒரு பொருத்தமான இடத்தைத் தேடுவதிலேயே ராஜராஜனுடைய முழுக்கவனமும் இருந்தது. எனினும், அவர் எதிர்பார்ப்புக்கமைய எந்த இடமும் சரியாக அமையவில்லை. ஒருநாள் மன்னர் வேட்டைக்குப் போகிறார். எதிரில் ஒரு பன்றி எதிர்த்து நிற்கிறது. வேட்டையாடும் நோக்கில் ராஜராஜன் அந்தப் பன்றியைத் துரத்திச் செல்கிறார். அந்தச் சிறிய பன்றி அவரிடம் பிடிபடவில்லை. மாறாக, போக்குக் காட்டியபடியே பல இடமும் போய், கடைசியில் ஒரு பெரிய திடலில் படுத்து விட்டது. மன்னருக்கோ ஆச்சரியம். பன்றியைத் தொடர்ந்து பின்னே போனபோது அடுத்த ஆச்சர்யம்! பன்றி எழுந்து நின்று தனது கால்களால் அந்தப் பூமியைத் தோண்டியது, அதில் ஏதோ ஒரு சூட்சுமம் இருப்பதை உணர்ந்த சோழமன்னன் உடனே அரண்மனைச் சோதிடரைக் கூப்பிட்டு, விவரம் சொல்லி, அதற்கான காரணம் என்னவாக இருக்கும் எனக் கேட்டார். கோயில் கட்டுவதற்காக மன்னன் தேடிக்கொண்டிருந்த இடத்தை வராகி தேவியே தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிறாள் என்ற செய்தியைச் சோதிடர் மூலம் அறிந்தபோது ராஜராஜசோழன் உடலும் உள்ளமும் சிலிர்க்க இரு கை கூப்பி அன்னை வராகியை வணங்கினார். (வராகி = பன்றி).

பெரிய கோயிலைக் கட்டும் பணிகளைத் தொடங்குவதற்கு முன், தேவி வராகிக்கென சிறிய கோயிலொன்றை அமைத்து வழிபட்டு, அதன் பிற்பாடுதான் பெருவுடையார் கோவிலின் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின. அன்னையவளின் அபூர்வ அருளால் உலகப் புகழ் வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சைப் பெரிய கோயில் நிமிர்ந்து எழுந்தது.

வெற்றியின் சின்னமாக விளங்கிய வராகி அன்னையைச் சோழ மன்னர்கள் வெற்றித் தெய்வமாக கொண்டாடி சிறப்பு வழிபாடுகள் செய்தார்கள். ராஜராஜசோழன் அன்னையை வழிபட்ட பிறகுதான் எந்தக் காரியத்தையும் செய்து வந்தார். குறிப்பாக, போருக்குப் புறப்படுமுன், அன்னையின் ஆசி பெற்றுச் சென்று அவர் பெற்ற வெற்றிகள் அனைத்தும் சாதனைகள் படைத்தன. தஞ்சைப் பெரிய கோயிலில், பெருவுடையாராலயத்தின் அக்னி திசையில், அம்பாள் சந்நிதிக்கு எதிரில் வராகி அம்மனுடைய கோயில் இருக்கிறது.

மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்தபோது அவருடைய அவதார சக்தியாக உருவானவர் வராகித் தாயார். பிராமி, வைஷ்ணவி, மகேஸ்வரி, கவுமாரி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய சப்த கன்னியர்கள் முறையே - பிரம்மா, விஷ்ணு, சிவன், குமாரன், இந்திரன், யமன், திருமால் ஆகிய கடவுளர்களின் சக்திகளாக உருப்பெற்றார்கள்.

சக்தி வழிபாட்டு முறையில், ராஜராஜேஸ்வரி என்ற ஸ்ரீ வித்யா வழிபாடு சிறப்பானது. இவளுக்கு நான்கு கைகள். முன் கைகளில் கரும்புவில், புஷ்பபாணங்களையும், மேற் கைகளில் அங்குச பாசாங்குகளாகிய ஆயுதங்களையும் கொண்டிருப்பவள். கரும்பு வில் சியாமளாவாகவும், புஷ்ப பாணங்கள் வராகி ஆகவும், அங்குசம் சப்த கன்னியர்களாகவும் பாசம் அஸ்வரூபாவாகவும் உருப்பெறுகின்றன.

ஆனி அமாவாசை கழிந்த பஞ்சமி திதியில் சிறீவித்யா தேவியின் கைகளிலிருந்த புஷ்ப பாணங்கள் வராகியாக உருப்பெற்றன. தேவி மகாத்மியத்தில் வரக்கூடிய மதுகைபடவதம், சும்பரிசம்பவதம், சண்டமுண்ட வதம், மகிஷாசுரவதம் எனப்படும் அசுரர்களுடனான யுத்தங்களில் வராகித் தாயார் படைத்தளபதியாக முக்கிய பங்கு வகித்து வெற்றியைத் தேடித்தருகிறார். பன்றி முகமும் பெண்ணின் உடலமைப்பும் கொண்ட வராகி நான்கு கரங்கள் உடையவள். பின் இரண்டு கரங்களில் தண்டமும் கலப்பையும் கொண்டு கறுப்பு நிற ஆடையும் அணிந்து சிம்ம வாகனத்தில் வீற்றிருக்கும் வராகித தாயார் வேண்டி நிற்கும் அன்பர்க்கெல்லாம். அருள் வழங்கும் கருணை மிகுந்தவள். விவசாயம், வீடு, நிலம் தொடர்பான வெற்றியை அருள்பவளும் வராகி அன்னையே.

சக்தி வழிபாடு சங்க காலத்திலிருந்தே சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவரும் ஒன்று. இந்தச் சக்தி வழிபாட்டுக்கும் நவராத்திரிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. புரட்டாதி மாதம் அமாவாசையை அடுத்து, சாரதா நவராத்திரி, தை அமாவாசையை அடுத்து சியாமளா நவராத்திரி, பங்குனி அமாவாசையை அடுத்து ஆஷாட நவராத்திரி என்பன அமைகின்றன. இந்த ஆஷாட நவராத்திரி வராகி தேவியைப் போற்றி வழிபடும் காலமாகக் கொண்டாடப்படுகின்றது.

தஞ்சைப் பெரியகோயிலில் ஆஷாட நவராத்திரி வைபவத்தின் இந்தப் பத்து நாள்களும் ஊரே திரண்டு நிற்க ஒரு உற்சாகத் திருவிழா! வராகித் தாயாருக்கு ஹோமம் அபிஷேகம் எல்லாம் பக்திபூர்வமாக நடக்கும். அன்னையின் பேரருளால் பூமியில் அமோக விளைச்சலைக் கொடுக்கும் பொருள்களில் ஒவ்வொரு நாளுக்கும் குறிப்பிட்ட ஒரு விளைபொருளால் அன்னையின் திருவுருவத்தை முழுவதுமாக அலங்கரித்தல் இந்த விழாவின் தனிச்சிறப்பு. விளைச்சலைப் பெருக்கி விவசாயத்தில் தன்னிறைவு பெற வரமருளும் வராகி அன்னைக்கு அடியார்களின் நன்றிக் காணிக்கையாகவே இந்த விளைபொருள் அலங்கார வழிபாடு என்றால் அது மிகையல்ல.

வராகி என்றாலே வரம் என்று பொருள். இவள் அதர்வவேதத்தின் தலைவி. பராசக்தியின் முக்கிய மந்திரியாகத் திகழ்பவள். அன்னையானவள் சிவபெருமான், திருமால், பராசக்தி ஆகிய மூவரின் அம்சமாகவும் பார்க்கப்படுபவள். ஈசனைப்போல் மூன்று கண்கள் உடையவள். பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், தபோலோகம் உள்ளிட்ட ஏழுலோகங்களினதும் காவல் படைத்தளபதி. சப்த கன்னியருள் மிகவும் வேறுபட்டவள். மிருகபலமும், தேவகுணமும் கொண்ட வராகித் தாயாரை நம்பி வணங்கும் பக்தர்களுக்குத் தீவினை எதுவும் அண்டாது; காத்து நிற்கும் கருணை வடிவம் அவள்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வராகிக்கு செவ்வரளி மாலை சார்த்தி எலுமிச்சை சாதம் அல்லது சர்க்கரை சாதம் நைவேத்யம் செய்து வராகி காயத்ரி மந்திரத்தை பதினொரு முறை செபம் செய்து வேண்டுதல் செய்வோர்க்கு அன்னை வேண்டிய வரம் அருள்வாள். இந்த மந்திரத்தை தினமும் 108முறை உச்சரித்து வந்தால் ஒவ்வொருவருடைய வாழ்விலும் இடைவிடாது துரத்துகின்ற துன்பங்கள்கூட விலகி ஓடிவிடும்.

# தியானம் – உலக நன்மைக்காக!




கடந்த 2019ஆம் ஆண்டின் முடிவில் "கோவிட் 19" என்ற கொரோனா தொற்றுநோய் சீன தேசத்தில் தன் பயணத்தை ஆரம்பித்தது. இன்று உலகம் முழுவதும் பரவி, ஏழை - பணக்காரன், நண்பன் - பகைவன், முதியவர் - இளையவர் என்ற பேதமின்றி, சாதி, மத பேதமின்றி அனைவரையும் தாக்கி வருகின்றது; சிலரைக் கொன்றுவருகின்றது. அதனால், நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு மக்கள் முடங்கிக் கிடக்கிறார்கள். இன்னொருபுறம் ஆப்கானிஸ்தான் போன்ற சில நாடுகள் போரால் வாடுகின்றன. வெள்ளம், தீ என இயற்கை அழிவுகளும் பல நாடுகளைச் சின்னாபின்னப்படுத்திய வண்ணம் இருக்கின்றன. இந்தச் சூழலில், தொழில் நுட்பத்தின் பயனாக மக்கள் தொடர்புகொள்வது வசதியாக உள்ளது. 'Zoom' என்ற கணினிக் கண்டுபிடிப்பு வாயிலாகப் பலரும் பல தேவைகளுக்கும், சந்திப்புகள், கூட்டங்கள், பிறந்தநாள் விழாக்கள் என்று கொண்டாட்டங்களுக்கும் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வசதியை, ஒரு வரப்பிரசாதத்தை உலக நன்மைக்காகப் பயன்படுத்தினால் என்ன என்று சிலர் சிந்தித்தார்கள். அப்படிச் சிந்தித்தவர்களுள் திரு சிறீஸ்கந்தராசா, திருமதி அருந்ததி சிறீஸ்கந்தராசா தம்பதியரும் அடங்குவர். இலண்டன் நகரின் தென்மேற்கில் விம்பிள்டன் என்ற ஊரில் வசிக்கும் இத்தம்பதியர் உலக நன்மைக்காகவும், போர், தொற்றுநோய் முதலிய இன்னல்களைக் களையும் நோக்கிலும், தமது முயற்சியாக, "தியானம்" செய்ய முடிவு செய்தார்கள். பின்னர் இந்த "சூம்" மூலம் தெரிந்தவர்களை அழைத்துச் செய்தார்கள். இப்போது நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள் என உலகனைத்தும் வாழ்பவர்கள் இவர்களோடு இணைந்து தியானம் செய்யும் அளவுக்கு இந்தக் குழு வளர்ந்துவிட்டது. இந்த ஆண்டு (2021) செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி இவர்களின் நூறாவது அமர்வு நடந்தேறியது. அதில் நூறுபேர் கலந்துகொண்டார்கள்.




முதலில் ஒருவர் தியானம் எப்படிச் செய்யப்போகிறோம் என்று சுருக்கமாகச் சொல்லி, வந்தோரை வழிநடத்துகிறார். மிருதுவான இசையுடன் தியானம் நடக்கிறது. பின் ஒருவர் பொதுவான ஒரு தலைப்பில் - தியானம் தொடர்பாக - சில நிமிடம் பேசுவார். அதன் பின் கேள்வி -பதில், கருத்துத் தெரிவித்தல் நிகழ்கிறது. சுமார் ஒருமணி நேரத்துள் நிகழ்வு நிறைவுறும்.

இந்த நிகழ்ச்சி தினமும் பிரித்தானிய நேரம் காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. ஐரோப்பிய நேரம் நண்பகல் 12 மணி. ஏனைய வெளிநாட்டு அன்பர்கள் நேர வித்தியாசத்தைக் கணித்து அந்தந்த நாட்டு நேரத்துக்குக் கலந்துகொள்ளலாம். தியானம் பற்றி அறியவும், கலந்து பலன் பெறவும் உலக நன்மைக்கு நமது பங்கை அளிக்கவும் இந்தத் தியான வழிபாடு உதவுகின்றது. எம்மதத்தவரும் கலந்துகொள்ளலாம்.

**யாதும் ஊரே; யாவரும் கேளிர்**

Zoom ID: 816 7104 9231

Pass code: 5151

# அறம் வளர்த்த தமிழ்த் தெய்வம்

செல்வி இ.இராமலிங்கம்,
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்(சைவசமயம்)

பண்டைத் தமிழகம் அதன் நிலப்பரப்பின் தன்மைகளுக்கேற்ப நான்கு வகை நிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திலும் ஒவ்வொரு கடவுள் வழிபாடு இருந்து வந்தது. தமிழ் உலகின் பண்டைய நூலாகிய தொல்காப்பியத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

இங்கே சேயோன் என்பது முருகனையும், குறிஞ்சி நிலம் என்பது மலைநாட்டையும் குறிக்கும். இச்செய்யுளிலிருந்து முருகன் மலைநாட்டு நிலத்திற்கு கடவுளென்றும், அவன் மலைகளில் வாழ்பவனென்றும் பண்டைத் தமிழர்கள் கருதி வந்தனர் என்று தெரிகின்றது.

தாம் வணங்கும் கடவுளை உயர்ந்த இடத்தில் வாழ வைத்த தமிழர்கள் அவனுக்கு முருகன் என்ற தீந்தமிழ்ப் பெயரைச் சூட்டினர். முருகன் என்பது மனம், அழகு, இளமை, கடவுட்தன்மை என்று பல்வேறு கருத்துப்படும் அருந்தமிழ்ச் சொல்லாகும். இப் பைந்தமிழ்ச் சொல்லால் தாம் வணங்கும் கடவுளைப் பண்டைத் தமிழர் அழைத்ததற்கும் அவனை உயர்ந்த குன்றங்களிலே வாழ வைத்ததற்கும் ஏதோ ஒரு முக்கிய காரணமும், தொடர்பும் இருந்திருக்க வேண்டும். "முருகு" என்னும் சொல் விளக்கும் பல்வேறு பொருள்களையும் ஒன்றுகூட்டி ஆராய்வோம். மாசற்ற மனம் அழகுடையது; என்றும் இளமை இழக்காதது, ஆகவே கடவுட்டன்மை வாய்ந்தது. அத்தகைய மனம் கறைபடிந்து இளமை இழந்து, அழகு குன்றி கடவுட்டன்மை சற்றேனுமின்றிக் காணப்படும் மனத்திலும் பார்க்க மேலானது, உயர்ந்தது. அத்தகைய உயர்ந்த உள்ளங்களில்தான் முருகன் வாழ்கிறான். அதாவது குணக்குன்றாம் முருகக் கடவுள் மாசுபடியா இதயக் குன்றத்திலே வாழ்கின்றான். இதனை விளக்குவதே மலை வாழ்வு.

சேயோன் என்ற முருகனுக்கு செவ்வேள், குமரவேள் போன்ற பெயர்களும், காங்கேயன், சரவணபவன், கந்தன், ஆறுமுகன், விசாகன், கடம்பன் போன்ற காரணப் பெயர்களும் உண்டு. அறமானது தளர்ந்து, மறமானது வளர்ந்து வரும்பொழுது மறத்தை அழித்து, அறத்தை நிலைநாட்ட இறைவன் பிறவியெடுக்கிறான் என்பது ஆன்றோர் கருத்து. இதையே பகவத் கீதையில் கிருஷ்ணபரமாத்மா உணர்த்துகிறான். முருகக்கடவுளின் தோற்றமும் இவ்வுண்மையையே வலிறுத்துகின்றது. செயற்கரிய தவங்களைச் செய்து பெறுதற்கரிய வரங்களைப் பெற்றவன் சூரபத்மன். காலப்போக்கில் ஆணவம் அவனிடம் குடிகொண்டது. அறத்தை ஓங்கச் செய்ய வேண்டியவன் பதிலாக மறச்செயல்களைக் கணக்கின்றிச் செய்து வந்தான். தேவர்களைச் சிறையிலிட்டான். அப்பொழுது தேவர்களைச் சிறைமீட்டு உலகை உய்விக்க முருகன் தோன்றினான். இதைக் கந்தபுராணத்தில் காணலாம்:

“அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய”



முருகன் அடியார்க்குப் பச்சிளம் குழந்தையாகவே இருந்து திருவருள் பொழிகின்றான். அவனைப் பாலனாகவே பலர் போற்றி வணங்குகின்றனர். முன்னொரு காலத்தில் “நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே” என்று சிவனுடனேயே வாதிட்ட சங்ககாலப் புலவர் நக்கீரரை, பெரும் பூதம் ஒன்றிடமிருந்து காப்பாற்றியவன் முருகன். இதற்கு நன்றி கூறுமுகமாக நக்கீரர் பாடியதே திருமுருகாற்றுப்படை. நக்கீரர் கூட ஆற்றுப்படையில் முருகனைப் பாலனாகவே காண்கிறார் என்பதை அவருடைய பாடலில் காணுங்கள்:

“குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை”

மறம் ஒழித்து, அறம் காக்க வந்தவன் பாலனாக மட்டும் அருள் சுரப்பதில்லை, காலனாக நின்று கெட்டவரை அழித்து நல்லோரை வாழவைக்கும் அருட்செல்வன். அன்பர் முன் குழந்தையானவன், வம்பர் முன் பிரளயகால உருத்திரனாக மாறுகின்றான். சூரபன்மன் போர்க்களம் வருகிறான். அங்கு வேலும் கையுமாக குமரேசன் நிற்பதைக் காண்கிறான். தன்னை அறியாமலேயே சிரித்தும் விடுகிறான். ஏளனமாக, “தேவரும் மூவருமே என்முன் அணுக அஞ்சிடுவரெனின், என்னை எதிர்க்க இந்தப் பொடிப்பயல் யார்? எனக்கு முன் இவன் ஒரு துரும்பு.” என்கிறான்.

“காற்றில் தள்ளுண்டு, நெருப்பில் சூடுண்டு கங்கை
யாற்றில் தாக்குண்டு சரவணப்பொய்கையில் புக்குண்டு
வேற்றுப் பேரிடம் பாலுண்டு, அழுதே விளையாடும் பாலனைக்

கண்டா எம் படையினர் பதுங்குகின்றனர்? இவனா எம் படையினை அழித்தனன்? இதோ இவனைக் கணப்பொழுதில் அழிக்கிறேன்” என்று ஏளனம் செய்கிறான். போர் நடைபெறுகிறது. இடையே தன் விஸ்வரூபத்தினை அருள் வள்ளலாம் திருமுருகன் சூரபத்மனுக்கு காட்டுகிறான். இதைச் சூரபத்மன் தனக்குள் சொல்லுவதாகக் கச்சியப்பர் வெகு அழகாகக் கூறுகிறார்:

“கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் தமக்கும் ஏனைய வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி யன்றோ”

மாறுபடு சூரனை வதைத்து, வானவர் சிறைமீட்டு, மறம் ஒழித்து அறங்காத்த முருகன் அன்று தொட்டு இன்றுவரை தமிழ்த் தெய்வமாக விளங்குகின்றான். சங்க காலத்தில் தந்தையுடன் மைந்தனும் இருந்து தமிழ் வளர்த்தான் என்று இலக்கியங்களில் கூறப்படுகிறது. தமிழ்மீது முருகனுக்குள்ள பற்றினை விளக்கப் பல சுவையான கதைகள் உண்டு. நக்கீரனுக்கு அருள் புரிந்தார். தமிழ் இலக்கியங்களைப் பெருமைப்படுத்தும் ஆற்றுப்படை பிறந்தது. ஊமைக்குப்

பேச்சுக் கொடுத்தார். கைமாறு செய்வதுபோல் தித்திக்கும் தீந்தமிழில் பிள்ளைத்தமிழ் பாடலைத் தந்தார் குமரகுருபரர். அருணகிரிக்கு அருள் சுரந்தார். கேட்கக் கேட்க தெவிட்டாத தேனூறும் திருப்புகழ் பிறந்தது. பகழிக்கூத்தரின் சூலைநோயைப் பறந்தோடச் செய்தார். திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் பிறந்தன. இப்படியாக முருகனைத் தமிழ் வளர்க்க முருகனும் தமிழ் வளர்க்கிறான்.பழந்தமிழர் இயற்கையோடியைந்த இன்ப அன்புடன் வாழ்ந்தவர்கள். இயற்கையின் பின்னணியில் மக்கள் வாழ்க்கையினைக் கூறுவனவே சங்க இலக்கியங்களாகும். தொல்காப்பியனார் கூறும் முதற்பொருளும் கருப்பொருளும் இயற்கையின் இனிய பெற்றினை எடுத்தியம்ப, அவர் கூறும் உரிப்பொருள் மக்கள் வாழ்வினை வகையுறப் புனைந்து நிற்கிறது. எனவே. இயற்கையில் இலங்கும் அழகினைப் போற்றி மகிழ்ந்தனர் பழந்தமிழர் எனலாம். இயற்கையை இனிது போற்றியதோடு, இயற்கையில் இறைவன் கொலுவீற்றிருப்பதாக எண்ணி அவ்வெண்ணத்தில் இறைவனை வழிபடவும் செய்தனர் நம்மவர்கள்.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா! நின்றன்
கரியநிறம் தோன்றுதையா நந்தலாலா!
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா! நின்றன்
பச்சை நிறந் தோன்றுதையே நந்தலாலா!
கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா! நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா!
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா! நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா!"

காக்கைச் சிறகின் கருமையிலும், பார்க்கும் மரங்களின் பசுமையிலும் தீக்குள் விரலின் தென்றலிலும் இறைவனின் திருக்கோலப் பொலிவையும், சிறப்பையுமே கண்டார் பாரதியார்.
தமிழ் கூறும் நல்லுலகம் குன்றமேற்றிய மன்றாடி மைந்தனாம் கலியுக வரதனை நம்பினோர் கைவிடப்பட்டதில்லை. "முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான்" என்பர் அருணகிரியார். உள்ளத் தூய்மையுடன் எவனொருவன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க அவன் தண்டைக்கால்களை நம்பி,

"உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே"

என்று ஒருமையுடன் திருப்புகழ் பாடுகின்றானோ, அவன் முன் முருகன் தோன்றி:

"அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்"

"அஞ்சேல்! அஞ்சேல்!!" என்று ஆறுதல் கூறி இடுக்கண் களைவான். ஆகவே ஒரு முறைக்குப் பல முறை "முருகா! முருகா!!" என்று நாம் நாள்தோறும் அலறி எமது இதயக்குன்றில் இளமையும் அழகும் நிறைந்த இறைவனைக் கொலுவேற்றி வைத்துப் பிறவிக்கடலைத் தாண்டி பேரின்பம் அடைவோமாக!.

# கிருபானந்த வாரியார்

பத்மா குணதாசன்



பெருந் தலைவர்கள், ஆன்மிகவாதிகள், தியாகிகள், பெரியோர்கள் இந்தப் பூவுலகை விட்டு மறைந்தாலும் எம் மனங்களில் காலாகாலத்துக்கும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். ஏனெனில் அவர்கள் சேவைகள், தியாகங்கள், அவர்களது ஆன்மிகப் போதனைகள் எல்லாமே மிகமிக மகத்தானவை. மனதை விட்டகலாதவை. அவ்வழி வந்தவர்தான் நம் தெய்வத் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள். ஆன்மிக உலகின் அட்சய பாத்திரம்; அருளமுது ஊட்டுவதில் அவர் அம்மையப்பன்; தெளிவுறுத்துவதில் திருஞான சம்பந்தர்,

வாரியார் அவர்கள் 1906ஆம் ஆண்டு வேலூர் அருகே காங்கேயநல்லூரில் மல்லையதாசபாகவதர், கனகவல்லி தம்பதியருக்கு அருமை மகனாகப் பிறந்தார். குடும்பத்தில் நான்காவதாகப் பிறந்த வாரியாருடன் பிறந்தோர் பதினொருபேர்.

வாரியாரின் அறிவு ஞானத்துக்கு அத்திவாரமிட்டவர் அவருடைய அன்புத் தந்தையார் அவர்கள். இலக்கணம், இலக்கியம், இசை என்று எல்லாத் துறைகளிலும் வல்வராகக் கற்றோர் போற்றும் கலைவாணரானார் வாரியார். எட்டு வயதில் வெண்பாப் பாடும் ஆற்றலுடன் பன்னிரண்டாவது வயதிலேயே பத்தாயிரம் பாடல்களை மனனம் செய்யும் வல்லமையையும் பெற்றார். கடைசிவரை அவர் எதையுமே மறக்கவில்லை. வாரியார் இளைஞராக இருந்தபோது அவருடைய தந்தையார் ஒரு நவராத்திரி நாளன்று அவரை மைசூருக்கு அழைத்துச் சென்று வீணை சேஷண்ணாவிடமிருந்து ஒரு வீணை வாங்கிக் கொடுத்தார். வீணைப் பயிற்சிக்காக சென்னையிலுள்ள ஒரு வீணை ஆசிரியரிடம் வீணை கற்கவும் ஏற்பாடு செய்தார். வாரியாரது 23ஆம் வயதில் சென்னை ஆனைகவுளி தென்மடம் பிரம்மஸ்ரீ வரதாசாரியாரிடம் நான்கு ஆண்டுகள் வீணைப்பயிற்சி செய்தார். அவரது திறமையும் சங்கீத ஞானமும் கதாகாலட்சேபம் செய்ய அவருக்கு வழி சமைத்தது. தேவாரம், திருவாசகத் திருமுறைகள், திருப்புகழ் முதலான அருட்பாடல்களை இன்னிசையுடன் பாடினார். சென்னைத் தமிழிசை மன்றம் தனது வெள்ளி விழாவின்போது வாரியாரது இசை ஞானத்தைப் பாராட்டி “இசைப் பேரறிஞர்” என்ற பட்டம் கொடுத்துக் கௌரவித்தது.

தன் தந்தையின் வழியிலேயே சுவாமி அவர்கள் பதினைந்தாவது வயதிலிருந்து சொற்பொழிவு செய்யும் திறமையைப் பெற்றார். புராணப் பிரசங்கங்கள் நிறையவே செய்தார். அவர் பிரசங்கங்கள் பேச்சுவழக்கை ஒட்டி இருந்தமையால் பாமரரது உள்ளங்களையும் கவர்வதாய் அமைந்தன. அவரது ஆன்மிக மொழி, வேதாந்த உண்மைகள், சித்தாந்தக் கருத்துக்கள் பண்டிதர் முதற் பாமரர் வரை எல்லோரையும் மகிழச் செய்தன. அற்புதமான நினைவாற்றல், ஆச்சரியப்படத்தக்க நாவன்மை, நுட்பமாகக் கூறும் கருத்துக்கள் ஆகியவற்றைக் கேட்டு இதுகாறும் இவற்றை அறிந்திலமே என்று கல்வியிற் சிறந்த புலவர்கள் வியந்து பாராட்டினர்.

சன்மார்க்க சொற்பொழிவுகள் நிறையவே செய்தார். அறுபடை வீடு பற்றி உரை நிகழ்த்தும்போது முருகப் பெருமானே நேரில் வருவதுபோன்று ஒரு பிரமை ஏற்படும். கதாகாலட்சேபம் என்ற சொல்லை மாற்றி, இன்னிசைச் சொற்பொழிவாக்கி அனைவரும் இரசிக்கும்படி சலிப்புத் தட்டாமற் கேட்கக்கூடியது அவரது சொற்பொழிவு. யதார்த்தமான வாழ்வியலுடன் கூடிய கருத்துக்களைக் கூறுவதில் அவர் வல்லவர். சிலேடையாகப் பேசும் அவரது சொற்பொழிவுகள் அனைத்துமே விலைமதிக்கமுடியாதவை. மிகப்பெரிய இசை மேதை. அரசியலையும் ஆன்மிகத்திற் புகுத்தி இடத்துக்குத் தகுந்தாற்போல் பேசுவார். ஞானக்கடல். நகைச்சுவையும் கிண்டலும் அவருக்கே உரித்தானவை. தமிழ், சமஸ்கிருதம், பக்தி, நகைச்சுவை, கருத்து, தத்துவம் இன்னும் பல அடங்கிய அமுதக் குவியல் அவரின் சொற்பொழிவு.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் "டாக்டர்" பட்டம் கொடுத்து இவரைக் கௌரவித்தது. தஞ்சைப் பல்கலைக்கழகம் "இலக்கிய முது முனைவர்" என்றது. காஞ்சி மகாபெரியவர் "சரஸ்வதி கடாட்சாமிர்தம்" என்று பாராட்டினார். அருள்மொழி அரசு என்று அனைவராலும் பாராட்டப்பட்டவர் வாங்கிய பட்டங்களுக்கு அளவேயில்லை. இதில் ஆச்சரியம் என்னவென்றால், அவர் பள்ளிக்கூடம் சென்றதேயில்லை. சிறுவயதில் பாலாற்றுக்குக் குளிக்கச் செல்வார். அப்போது தனது தாயிடம் அரிசி வாங்கிச்செல்வார். வழியில் எறும்புப் புற்று இருக்கும் இடங்களைப் பார்த்து அவற்றில் அரிசியை இடுவார். பின்னாளில், ஆன்மிகச் சொற்பொழிவுகளை ஊர் ஊராகச் சென்று நிகழ்த்திக் கிடைத்த வருமானத்தில் தன் தந்தை கட்டியெழுப்பிய முருகன் ஆலய இராஜகோபுரத் திருப்பணிக்குச் செலவுசெய்தார்.

சுவாமிகள் வீரசைவ மரபினர். தமது ஐந்தாவது வயதில் கழுத்தில் சிவலிங்கம் அணிந்தார். முருகப்பெருமானுக்குப் பூசை செய்தபின்பே உணவு உட்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். மணவாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாலும் கடைசிவரை பிரம்மச்சரியத்தையே கடைப்பிடித்தார். சிவகவி திரைப்படத்துக்கு உரையாடல் எழுதிய பெருமை இவரைச்சாரும். தமிழக முன்னாள் முதல்வர் திரு எம் ஜி இராமச்சந்திரன் அவர்களுக்கு நிறையவே பட்டங்கள் இருந்தாலும் "பொன்மனச் செம்மல்" என்ற பட்டத்தை வாரியார் வழங்கினார். பெண்களைப் போற்றும் வகையில் பெற்றெடுத்த தாயாரின் பெயரையே "இனிஷியலாக"ப் போடலாமே என்ற கருத்தை அன்றே கூறிய அறிவுஞானியும் இவரே.

நிறையவே நன்கொடைகளை வருவித்து, திருப்பராய்த்துறையில் இராமகிருஷ்ண குடில் அமைத்துக்கொடுத்தார். இன்றும் அது ஆதரவற்ற சிறார்களின் புகலிடமாக விளங்குகின்றது. தான் பிறந்த காங்கேய நல்லூரில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என்று நிறுவினார். ஏழைகள், விதவைகள், மாணவர்கள், மருத்துவ உதவி வேண்டுவோர் எனப் பலதரப்பினருக்கும் நிதி உதவி செய்திட பொதுநலநிதி அறக்கட்டளை ஒன்றைத் தன் சொந்தப் பணத்தில் ஆரம்பித்தார். தனது ஆன்மிகச் சொற்பொழிவின்போது இடையிடையே கேள்விகளைக் கேட்டு சரியாகப் பதில் சொல்லும் சிறுவர்களுக்கு மேடைக்கு அழைத்துப் பரிசுகள் கொடுத்து மகிழ்விப்பார்.

வாரியார் தமிழின் பெருமை பற்றிக் கூறுகையில் பாரிஸ் நகர நூல்நிலையத்தில் எண் ஒன்று போட்டு பைபிளையும் எண் இரண்டு போட்டு திருக்குறளையும் வைத்திருப்பது தமிழின் பெருமைக்குத் தனிச்சிறப்பு என்பார். "மானம்" என்ற சொல் தமிழைத்தவிர வேறு எந்த மொழி யிலும் இல்லை என்று வாரியார் குறிப்பிட்டார். பழனி ஈசானசிவாசாரியார், "டால்ஸ்டாய்" எழுதிய "நாம் செய்வது என்ன" என்ற புத்தகத்தை நீ ஒருமுறை படி. நான் படித்தால் அழுகை வருகிறது என்றாராம். அந்நூலைப் படித்து முடித்ததும் வாரியார் உலகப் பற்று, பொன் பொருள் எல்லாவற்றையும் விட்டொழிந்தார். தான் அணிந்திருந்த தங்க உருத்திராட்சமாலை, மோதிரங்கள்,

உட்பட அனைத்தையும் கழற்றிக் காங்கேயநல்லூர் முருகனுக்கே அர்ப்பணித்துவிட்டார். காங்கேய நல்லூரில் நான்கு ஏக்கர் நிலத்தை வாங்கி அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தானமாகத் தயிர்சாதம் வழங்க உத்தரவிட்டார். அது இன்றும் தொடர்ந்து நடக்கிறது. இருபது வயதுக்கு மேல் அவர் மேல்சட்டை அணிந்ததில்லை. தனது கையெழுத்துக் கேட்போருக்கு "இரை தேடுவதோடு இறையையும் தேடு" என்ற வாசகத்தையே எழுதிக் கையெழுத்துப் போடுவார்.முருகப்பெருமானின் அருள் பெற்றவர் வாரியார் என்றே சொல்லப்படுகின்றது. "எம்பெருமான் திருவருளாலே" என்ற வார்த்தை இல்லாமல் அவர் உரை நிகழ்த்தியதில்லை. அன்னாரின் பூதவுடல் இப்பூமியை விட்டு மறைந்தாலும் தனது ஆன்மிகச் சொற்பொழிவுகள் மூலம் என்றென்றும் நம்முடனே வாரியார் வாழ்கிறார்.

# இசையரசு எம் எம் தண்டபாணி தேசிகர்



பிரபல தமிழிசைக் கலைஞரும் திரைப்பட நடிகருமான திரு தண்டபாணி தேசிகர் 1908ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27ஆம் திகதி பிறந்தார். திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அருகே உள்ள திருச்செங்காட்டங்குடி என்ற ஊரிற் பிறந்தவர்; சிவத்தொண்டு புரிந்துவரும் ஓதுவார் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

கோயில்களில் இவருடைய தந்தை தேவாரம் ஓதும்போது உடனிருந்த இவருக்கும் இசையில் ஆர்வம் ஏற்பட்டது. மாணிக்கதேசிகர், கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை ஆகியோரிடம் இசைப்பயிற்சி பெற்றார். முதன்முதலாக இவரது இசை அரங்கேற்றம் திருமருகல் இராமர் கோயிலில் நடைபெற்றது. கணீரென்ற சிறுவனது குரல் அன்று அனைவரையும் கவர்ந்தது. தமது 18ஆவது வயதில் மதுரையில் நடந்துவந்த தேவாரப் பாடசாலையின் பொறுப்பேற்றார்.

இசை என்பது ஒருசிலர் பாடி, கேட்டு இரசிக்கும்படியாக இருக்கக்கூடாது, சாதாரண மக்களும் கேட்டு இரசிக்கவேண்டும் என்று கருதியவர் இவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைத்துறைத் தலைவராக 15 ஆண்டுகள் பணியாற்றினார். அப்போது தமிழ்ப் பாமாலை என்ற நூலை வெளியிட்டார். திருக்குறளுக்கு முதன்முதலாக இசையமைத்து அதை இறைவணக்கமாக மேடையில் பாடியவர் என்ற பெருமை பெற்றார். முழுநேர இசைக்கலைஞராகவே இவர் வாழ்ந்து வந்தார்.


தமிழகம் முழுவதும் கச்சேரிகள் நடத்திவந்தார். "சங்கீத சாகித்திய சிரோன்மணி", "சங்கீத கலா சிகாமணி", "இசைப் பேரறிஞர்", "சங்கீத நாடக அகடாமி விருது" உள்ளிட்ட பல விருது களையும் பட்டங்களையும் பெற்றார்.

தமிழ்ப் பாடல்களை மூலை முடுக்கெல்லாம் பரவச் செய்தவர். தேவாரப் பாடல்களை இசைத்தட்டாக வெளியிட்டார். தமிழகத்தின் தலைசிறந்த சங்கீத வித்துவான்களில் ஒருவரான எம் எம் தண்டபாணி தேசிகர் 1972ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமது 64ஆவது வயதில் மறைந்தார்.

அருளவேண்டும் தாயே (சாரமதி), பாடி மகிழ்திடுவோம் (ஜீவந்திகா), ஜகத்ஜனனி சுகபாணி கல்யாணி (ரதிபதிப்ரியா) போன்ற சில பாட்டுக்கள் தேசிகரால் பிரபலமானவை; சில அவரே மெட்டமைத்தவை.

# கண்ணனும் தாத்தாவும்

**- முத்து -**



இன்பம் சிலநாள், துன்பம் சிலநாள் என்பதைப்போல இலண்டன் மாநகரில் சில நாள்கள் மழையும் சில நாள்கள் வெயிலுமாக இந்தக் கோடைகாலம் முடிவடைகிறது. மரங்கள், செடிகொடிகள் வளரலாமா, விடலாமா என்று தடுமாறிக்கொண்டிருந்ததில் வழமையான பலனை அவை தரவில்லை. ‘கோவிட்’ தொற்றால் ஏற்பட்ட முடக்கமும் தளர்ந்தும் தளராத நிலை. எல்லாமே வழக்கத்துக்கு மாறாக இருந்தன. மக்களுக்கும் வீட்டுக்குள் இருந்தே பழகிவிட்டது. “சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்” என்பதுபோல உடலும் மனமும் மாற்றங்களுக்கு ஏற்ப மாறிவிடுவது இயற்கை கொடுத்த வரம். கண்ணனுடைய கோடை விடுமுறையும் தாத்தா பாட்டியுடன் வீட்டுக்குள்ளேயே கழிந்தாலும் அவனுக்கு ஒரு தங்கை கிடைத்ததால் மிகவும் குதூகலமாக நாள்கள் போவதே தெரியாமல் இருந்தது. முதன்முதலாக ஒரு சிறிய குழந்தையைக் கிட்ட இருந்து பார்ப்பது, தூக்கி வைத்திருப்பது கண்ணனுக்குப் புதுமையான அற்புதமான அநுபவமாக இருந்தது. அதனால், குழந்தை நித்திரை கொள்ளும் நேரத்தைத் தவிர மற்றைய நேரமெல்லாம் தங்கையின் பக்கத்திலேயே இருப்பான். குழந்தையைக் கவனிக்க அம்மாவுக்கு உதவுவான். குழந்தைக்கு மூன்று மாதம் முடிந்துவிட்டதால் அண்ணாவை அடையாளம் கண்டு சிரிக்கவும் கைகளை ஆட்டவும் ஆரம்பித்தது. இது கண்ணனுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவன் தன்னை மறந்து கைதட்டிச் சிரிப்பான்.

தாத்தா: என்னடா கண்ணா! அடுத்த வாரம் உனக்குப் பள்ளிக்கூடம் தொடங்குகிறதே! அப்போது எப்படித் தங்கையை விட்டுவிட்டு இருக்கப்போகிறாய்?

கண்ணன்: ஓம் தாத்தா! கொஞ்சநாளுக்குக் கஷ்டந்தான். நான் என் நண்பர்களுக்கெல்லாம் என் தங்கையைப்பற்றிச் சொல்ல ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

தாத்தா: எடுத்த படங்களை ஒவ்வொருவருக்கும் காட்டுவாயா?

கண்ணன்: ஓம் தாத்தா, இவ்வளவு காலமும் மற்றைய நண்பர்கள் காட்டும் படங்களையும், அவர்களின் தம்பி தங்கைகள் பற்றி அவர்கள் சொல்வதையும் கேட்டு அதிசயப்படுவேன்.

தாத்தா: பார்ப்பது, கேட்பதை விட எதையும் அநுபவித்தால்தான் உண்மை (Reality) விளங்கும் கண்ணா.

கண்ணன்: ஓம் தாத்தா! What a wonderful experience! நானும் குழந்தையாக இருக்கும்போது இப்படித்தான் இருந்தேனோ?

தாத்தா: உலகில் பிறப்பவர் எல்லோருமே இப்படித்தான் குழந்தையாக இருந்து வளர்ந்துவருவார்கள். நீ எங்கள் முதற் பேரக்குழந்தையாச்சே! நீ பிறக்கமுதலே நாங்கள் மிகுந்த ஆர்வத்துடன் காத்திருந்தோம்.

கண்ணன்: அப்பா, அம்மா எப்படி இருந்தார்கள் தாத்தா?

தாத்தா: அவர்களுக்கும் நீ முதற் குழந்தையல்லவா? அவர்கள் எங்களைவிட மிகவும் ஆர்வத்துடன் இருந்தார்கள்.

கண்ணன்: ஏன் எனக்குக் கண்ணன் என்று பெயர் வைத்தார்கள்?

தாத்தா: அதோ பார் கண்ணா அந்தப் படத்தை! அதில் இருக்கும் கண்ணன் மூக்கும் முழியுமாக அழகாக இருப்பதுபோல நீயும் அழகாக இருந்தாய். பாட்டியின் கையில் உன்னைக் கொடுத்தவுடன் கண்ணா என்று சொல்லிக் கொஞ்சினா. அப்போதே நாங்கள் அதையே பெயராக வைக்கலாம் என்று முடிவு செய்தோம். உன் அம்மாவும் அப்பாவும்கூட அதைத்தான் நல்ல பெயர் என்று சொன்னார்கள்.

கண்ணன்: ஓ! அப்படியா தாத்தா! கடவுளின் பெயரென்றுதான் அந்தப் பெயரை வைத்தீர்களோ என்று நான் நினைத்தேன்.

தாத்தா: நமது நாட்டில் முன்பெல்லாம் கடவுள் பெயரைத்தான் வைப்பார்கள். அல்லது யாராவது பெரியோர்களின் பெயரை வைப்பார்கள்.

கண்ணன்: ஏன் அப்படி தாத்தா?

தாத்தா: கடவுளின் நாமம் வைத்தால், பிள்ளைகளை ஒவ்வொரு முறையும் கூப்பிடும்போது வீட்டிலே கடவுளின் நாமம் கேட்டுக்கொண்டேயிருக்கும் அல்லவா கண்ணா! காலையிலிருந்து இரவுவரை பெற்றோர் பிள்ளைகளை எத்தனை தரம் கூப்பிடுவார்கள்? யோசித்துப்பார் கண்ணா! கடவுள் நாமத்தை உச்சரிப்பது எங்களுக்கு நல்லது.

கண்ணன்: ஓ! அப்படியா தாத்தா! அப்படியொரு காரணம் இருப்பதை இப்போதான் அறிகிறேன். அப்படியானால் பெரியோர்களின் பெயரை வைப்பது ஏன்?

தாத்தா: அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு கண்ணா! ஒன்று, அந்தப் பெரியவரில் குடும்பத்தினருக்கு நல்ல மதிப்பு இருக்கும். இரண்டாவது, அவர்களைப்போல தங்கள் பிள்ளைகளும் உயர்ந்தவர்களாக, மதிக்கப்படுபவர்களாக வரவேண்டும் என்ற விருப்பம். இந்த இரு காரணங்களுக்காக அப்படிப் பெயர் வைப்பார்கள்.

கண்ணன்: அப்பூதியடிகள் நாயனார் பற்றி நீங்கள் எனக்குச் சொல்லியது எனக்கு ஞாபகம் வருகிறது தாத்தா. திருநாவுக்கரசர் நாயனார் மீது இருந்த அளவுகடந்த பக்தியும்

அன்பும் உடையவராக இருந்ததினால் தன் மகன், உடைமைகள் எல்லாவற்றுக்கும் நாயனார் பெயரையே வைத்தார் அல்லவா?

தாத்தா: ஆமாம் கண்ணா! முன்பெல்லாம் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும்போது நல்ல காரணத்தோடுதான் பெயர் சூட்டுவார்கள். இப்போது அந்த வழக்கம் முழுவதுமாக மாறிவிட்டது.

கண்ணன்: பாரதிதாசன் என்ற கவிஞர் பாரதியார்மீது கொண்ட பெருமதிப்பினால் பெற்றோர் தனக்கு வைத்த பெயரை மாற்றி, "பாரதிதாசன்" என்று வைத்ததாகப் புத்தகத்தில் படித்திருக்கிறேன் தாத்தா.

தாத்தா: ஓம் கண்ணா, உண்மைதான். பாரதியின் கவிதைகள் மிகவும் சிறந்தவை கண்ணா! பாரதியாரின் கவிதைகளைப் படிக்கப் படிக்க, சுப்புரத்தினம் என்பவரின் மனதில் பாரதியார் மீது அளவற்ற அன்பும் மதிப்பும் ஏற்பட்டது. தான் அவருக்கு அடிமை என்ற கருத்தில் தன் பெயரை அப்படி வைத்துக்கொண்டார்.

கண்ணன்: "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாட்டைச் சொல்லி அதன் கருத்தையும் சொல்லித்தந்தது இன்னும் எனக்கு நினைவாக இருக்கிறது தாத்தா.

பாட்டி: பல நாள்களுக்குப் பிறகு தாத்தாவுடன் கதைக்கக் கண்ணனுக்கு நேரம் கிடைத்திருக்கிறது. தங்கச்சி பிறந்ததும் நல்லதுதான். இல்லாவிட்டால் தாத்தா உனக்கு, தான் படித்த புராணக் கதைகளையே சொல்லிக்கொண்டு இருந்திருப்பார்.

கண்ணன்: தாத்தா கதை சொல்லாவிட்டால் எனக்கும் bore அடித்திருக்கும் பாட்டி. தாத்தா எதையும் நல்ல சுவாரசியமாகச் சொல்லுவார் பாட்டி. உங்கள் சாப்பாடு வாய்க்கு நல்ல சுவையாக இருப்பதுபோல, தாத்தாவின் கதைகளும் காதுக்கு நல்ல சுவையானவையாக இருக்கும்.

பாட்டி: பரவாயில்லையே! தாத்தாவின் பிரசங்கம் (காலட்சேபம்) நல்லா வேலை செய்கிறது. உனக்கும் நல்லாப் பிடித்திருக்கிறது என்று தெரிகிறது. சந்தோஷம்.

தாத்தா: கடவுள் பக்தியைப் பிள்ளைகளுக்குச் சின்ன வயதிலேயே சொல்லிக் கொடுக்கவேண்டும். புராணக் கதைகள் எழுதப்பட்டதே மக்கள் நல்லவற்றை விரும்பிப் படிக்கவேண்டும் என்பதற்காகவே.

கண்ணன்: நாயன்மார்களின் வரலாறான பெரியபுராணக் கதைகளைக் கேட்கும்போது பக்தி வளருகிறது தாத்தா.

தாத்தா: கடவுள் பக்தி இருந்தால் எவ்வளவு நல்லது என்பது நீ பெரியவனானபின் இன்னும் நன்கு விளங்கும் கண்ணா!

பாட்டி: கண்ணனும் தாத்தாவும் சேர்ந்தால் அவ்வளவுதான், நான் வாயே திறக்க இயலாது. சரி, குழந்தை எழும்பும் நேரமாச்சு.

கண்ணன்: பாட்டி! கோபிக்காதேயுங்கோ

பாட்டி: எப்படியெடா கண்ணா உன்னைக் கோபிப்பது? சும்மா தாத்தாவைக் கிண்டல் பண்ணத்தான் அப்படிச் சொன்னேன்.. நீதான் பாட்டியின் சாப்பாடு போலத் தாத்தாவின் கதைகள் என்று சொல்லிவிட்டாயே. அது போதும்.

தாத்தா: என்னடா கண்ணா பாட்டி உன் காதில் ஏதோ சொல்கிறா?

கண்ணன்: அது எனக்கும் பாட்டிக்கும் இடையில் உள்ள இரகசியம் தாத்தா. சொல்ல முடியாது.

பாட்டி: அது குங்குலியக் கலய நாயனாரின் கதை நேற்றுப் போனது. கண்ணன் வீட்டில் இல்லை. சொல்லவேணும் என்றீர்களே! அதை மறக்காமல் தாத்தாவிடம் கேள் என்றுதான் கண்ணனுக்குச் சொன்னேன்.

தாத்தா: இதை நான் நம்பவேண்டுமா கண்ணா?

கண்ணன்: அதுதான் இரகசியம் என்றேனே! பாட்டி நான் மறந்ததை இப்போது ஞாபகப்படுத்திவிட்டா. இப்போது கதையைச் சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா: (குங்குலியக்கலய நாயனார் மீது தாத்தாவுக்கு நல்ல பக்தி. அதனால் பெயரன் கேட்டவுடனேயே கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார்) கண்ணா! கடவுளிடம் எவ்வளவு பக்தி செலுத்தவேண்டும் என்பதற்கு குங்குலியக்கலய நாயனாரின் கதையைப் படித்தால் நன்றாகவே விளங்கிவிடும்; அதன் பலனும் விளங்கிவிடும்.

கண்ணன்: அப்படியானால், இப்போதே சொல்லுங்கோ தாத்தா கேட்கிறேன். (குழந்தை எழும்பும் சத்தம் கேட்கிறது. கண்ணன் கதை கேட்பதை மறந்து தங்கையிடம் ஓடுகிறான். தாத்தாவும் பாட்டியும் அதைப் பார்த்துச் சிரிக்கின்றனர்)



# Satash Community Care









உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.